# ETHICS

# WEEKLY TEST - 1

| | | |
|---|---|---|
| 11th ETHICS VOL 1 | Unit 1 | தமிழகப் பண்பாடு – ஓர் அறிமுகம் |
| | Unit 2 | சிந்து சமவெளி நாகரிகம் |
| | Unit 3 | தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் |
| | Unit - 4 | தமிழர் கலைகள் |
| | Unit-5 | திருவிழாக்கள் |

## 11th அறிவியலும் இந்தியப் பண்பாடும்

### தமிழகப் பண்பாடு – ஓர் அறிமுகம்

### அலகு - 1

- பண்டைய தமிழர், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள், தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றிருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

- இப்பகுதியல் வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள்சான்றுகள், கல்வெட்டுச் செய்திகள், நாணயங்கள், பட்டயங்கள் ஆகியவற்றின் வாயிலாகத் தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறியலாம். மேலும், தமிழர்களின் அகவாழ்வு, புறவாழ்வு பற்றிய செய்திகளும் விளக்கப்படுகின்றன.

- சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு ஆகும். பண்பாடு என்பது, குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. எனவே, நமது பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

**பண்பாடு – சொற்பொருள் விளக்கம்:**

- பண்பாடு என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். பண்பாடு என்பதற்குச் சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் டி.கே. சிதம்பரநாதனார், உழவன், பயிர் செழிக்க நிலத்தைப் பயன்படுத்துதல்போல, மனிதவாழ்வு செழிக்க உயர்ந்த எண்ணங்களால் மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்.

- உலகம் என்பது உயர்ந்தோர் மேற்பே என்கிறது தொல்காப்பியம் இங்கு, உயர்ந்தோர் என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்பதைப் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இவ்வுலகம்,

பண்புடையவர்களால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பண்பு உடையார்ப் பட்டு உண்டு உலகம்' என்கிறார் வள்ளுவர். இதன்மூலம், மனிதனை மேம்படுத்துகின்ற அன்பு,ஈகை, புகழ், பெரியோரைத் துணைக் கொள்ளல், மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை மக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது. எனவே, மனிதன் பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, செய்யும் தொழில், எண்ணங்கள் ஆகியவை பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாகத் திகழ்கின்றன.

- தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழியாகவும், தாயகப் பிணைப்பின் வழியாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

- தமிழர் பண்பாடு பல காலமாகப் பேணப்பட்டு, திருத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட கூறுகளைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஓர் இலங்கியல் பண்பாடே ஆகும்.

**இலக்கியச் சான்றுள்:**

| பண்பாடு (Culture) | நாகரிகம் (Civilization) |
|---|---|
| பண்பாடு என்பது, மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிப்பது | நாகரிகம் என்பது, மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது. |
| மாந்தன் தன் அறிவுத்திறத்தாலும், உள்ளுணர்வத் திறத்தாலும் உள்ளத்தைப் பயன்படுத்திப் பண்படுத்தி அன்புடையவன் - அருளுடையவன் - ஈகையுடையவன் - இரக்கமுடையவன் - பண்புடையவன் - பக்குவமுடையவன் - வீரமுடையவன் - தீரமுடையவன் - ஊக்கமுடையவன் - உணர்வு உடையவன் - மானமுடையவன் - மரியாதையுடையவன் - பற்றுடையவன் - பணிவுடையவன் - தன்னலங்கருதாதவன் - பிறர் நலம் பேணுபவன் - உடைமையை உடலை, உயிரை ஈயவன் என்ற வகையில் பெயரெடுப்பது, அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டின் பாற்பட்டதாகும். நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணைபுரியும், அதுபோலவே பண்பாட்டுவளர்ச்சிக்கு நாகரிகம் உதுணையாக இருக்கும். | மாந்தன் தன் அறிவுத்திறனாலும் ஆற்றல் திறனாலும், உள்ளுணர்வுத் திறனாலும் பேணப்பட்டு வளர்ந்து வருவன சுவையான உணவு – அழகான உடை – வசதியான உறையுள் - வாய்ப்பான போக்குவரத்துப்பொறிகள் - வள மிகுந்த நாடு – நலம் மிகுந்த நகரங்கள் - கல்விச்சாலைகள் - கலைக் கூடங்கள் - இசை - கூத்து – நாடகம் - நாட்டியம் - ஓவியம் - சிற்பம் - விளையாட்டு – வளர்ந்து நிற்கும் வாணிகம் - சிறந்து செயல்படும் தொழிற்சாலைகள் - அழகான சாலை வனப்பான பூஞ்சோலை போன்றவையெல்லாம் மாந்தனது புறத்தோற்றப் பொலிவுகளைக் குறிக்கும் நாகரிகத்தின் பாற்பட்டவையாகும். |

**தமிழர்களின் தோற்றம்:**

- தமிழர் தோற்றம் பற்றி நான்கு வகையான கருதுகோள்கள் உள்ளன. தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஒரு கருதுகோள். தென் இந்தியாவின் பழங்குடிகள் என்பது இரண்டாவது கருதுகோள். ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல்வழியாகத் தென்னிந்தியா வந்தோரின் வழித்தோன்றல்கள் என்கிறது மூன்றாவது கருதுகோள், மத்திய ஆசியா, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர் என்பது நான்காவது கருதுகோள், எப்படி இருப்பினும், தமிழினம் தொன்மை வாய்ந்த மக்கள் இனங்களில் ஒன்று எனவே, தமிழர்கள் கலை, நம்பிக்கை,பழக்க வழக்கங்கள், மொழி, விழுமியங்கள் முதலான பண்பாட்டுக் கூறுகளைத் தொன்றுதொட்டு பெற்றிருந்தனர்.

**தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள்:**

- தமிழர்கள், தொன்றுதொட்டுப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றை இலக்கியச்சான்றுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள் என வகைப்படுத்தலாம்.

**இலக்கியச் சான்றுகள்:**

- தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை புரிபவை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களுமாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறுகிறது. சங்க இலக்கிய நூல்களாகிய

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைப்படம் பிடித்துக் காட்டுகின்றன.

- சங்க இலக்கியங்கள் அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என "அன்பின் ஐந்திணையாகப் பகுத்துள்ளன. இதன் மூலமாக நிலம், பொழுது ஆகியவை முதற்பொருளாகவும், வழிபடு தெய்வம், வழிபாட்டுமுறைகள், வாழ்க்கைமுறை, விளையும் பொருள்கள் ஆகியவை கருப்பொருளாகவும், காதல் வாழ்வு, அதன் வழியாகத்தோன்றும் பல்வேறு உணர்வு நிலைகள் ஆகியவை உரிப்பொருளாகவும் பாகுபடுத்தி விளக்கப்பட்டுள்ளன.

- 'யாதும் உரோ யாவரும் கோளிர்'என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை, சங்ககாலப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரைச் சாரும்.

- சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சிச்சிறப்பு, போர்த்திறம், கொடைத்திறம் முதலானவற்றைப் பற்றிப் பதிற்றுப்பத்து விரிவாக விளக்குகிறது. இசைப்பாடலாகிய பரிபாடல், பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும், வையை ஆற்றின் சிறப்பையும், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை வழிபட்ட முறைகளையும் பாடுகிறது.

- பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களுக்கு இலக்கணமாக,

  "ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
  பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
  சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"
  (தொல். பொருள். புறத்திணையியல் 30)

  என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தம்மைப் போன்று வறுமையில் வாடும் பிறரும் வளம் பெற்று வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகின்ற பெருமளம் படைத்தவர்களாகப் புலவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் புலப்படுத்துகின்றன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும் நிலவளம், காதலின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. நெடுநல்வாடை காதலையும் வீரத்தையும் ஒரு சேரப் பேசுகிறது. மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பைக் கூறுகிறது. அதில் கூறப்பட்டுள்ள நிலையாமை குறித்த கருத்துக்கள் கூட, பாண்டிய மன்னன், காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகளின் நினைவூட்டலாகவே அமைந்துள்ளன. சோழநாடு, தரைவழி வணிகத்தாலும் கடல் வழி வணிகத்தாலும் வளம் பெற்றிருந்ததனை "முட்டாச் சிறப்பின் பட்டினம்" என்று பட்டினப்பாலைச் சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், தமிழர் ஆட்சி முறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள், வணிகச் சிறப்பு, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தனிமனித ஒழுக்கம், நீதி வழங்கும் முறைமை ஆகியவை பற்றி விரிவாகப்பேசும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

மணிமேகலை, சமய அறக்கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கின்றது. பல்வேறு குற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பது, மணிமேகலையின் மையக் கருத்தாகும். பசியைப் பிணியாக உருவகம் செய்து, அதைப் போக்கவேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் மணிமேகலையாகும்.

**வெளிநாட்டினரின் குறிப்புகள்:**

தமிழகத்தில் வணிகம் செய்ய வந்த வெளிநாட்டவரான யவனர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் போன்றவர்களின் குறிப்புகளில்,தமிழகம் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை அறிய முடிகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்" என்னும் நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

- ரோமாபுரி அரசன் அகஸ்டஸின் சமக்காலத்துவரான ஸ்டிராபோ (Strabo) என்பவர் எழுதிய "பூகோள நூல் பிளினி எழுதிய உயிரியல் நூல், தாலமி எழுதிய பூகோள நூல் ஆகியவை பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

- சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் என்ற நூல் கூறுகின்றது.

- பொது ஆண்டிற்குமுன் ஐந்தாம் நூற்றாண்டு முதுல் கிரேக்கர்கள், தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் பல தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியில் இடம் பெற்றிருந்தன.

- "அரிசி" என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் "அரிஸா" என்றும், கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச்சொல் "கார்ப்பியன்" என்றும், இஞ்சிவேர் சின்ஜிபேராஸ் என்றும், பிப்பாலி பெர்ப்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன.

- சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற துகிம் (மயில்தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்) சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற மதிப்புயர்ந்த பொருள்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை.

- தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின.

- அயல்நாடுகளுக்குப் புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டைநாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தது. அவற்றுள், தமிழகத்து வேட்டைநாய்கள், தரத்தில் மேலானவை எனப் போற்றப்பட்டன.

- சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான தொண்டியைத் "திண்டிஸ்" என்றும், முசிறியை "முஸிரிஸ்" என்றும், பொற்காட்டைப் "பகரி" என்றும், குமரியைக் "கொமாரி" என்றும், ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- தமிகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் "கொல்சாய்" என்றும், நாகப்பட்டினத்தை "நிகாமா" என்றும், காவிரிப்பூம்பட்டினத்தைக் "கமரா" என்றும், புதுச்சேரியைப் "பொதுகே" என்றும், மரக்காணத்தைச் "சோபட்மா" என்றும், மசூலிப்பட்டினத்தை "மசோலியா" என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

- ஹிப்பாகிரேட்டஸ் என்ற புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழந்தவர். இவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை இந்திய மருந்து என்றே குறிப்பிட்டுள்ளார்.

- பண்டைய தமிழகத்திலிருந்து மஸ்லின் துணியும், ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களும் ஏற்றுமதியாயின.

- தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

**தொல்பொருள் சான்றுகள்:**

- தமிழக வரலாற்றை அறிய தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கிடைத்துள்ள பொருள்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அவை, மூன்று வகைப்படும்.
    - கல்வெட்டுகளும் பட்டயங்களும்
    - நாணயங்களும்
    - நினைவுச்சின்னங்கள்

**கல்வெட்டுகளும் பட்டயங்களும்**

- பண்டைய தமிழகத்தின் கோயில்களில் உள்ள கற்சுவர்கள், கோயில் மண்டபத்துக் கற்றூண்கள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை எழுத்துருக்களாகப் பொறித்து வைத்துள்ளனர்.

இவற்றையே கல்வெட்டு என்பர். பெரும்பாலும் மன்னர்களின் ஆணைகள், அவர்களின் சாதனைகள் போன்றவை கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் சங்க காலத்தவை என குறிப்பிடப்படுகின்றது.

பல்வர்காலக் கல்வெட்டுகள் குகைகள், இரதங்கள், கோயில்கள், கற்பாறைகள், தூண்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவற்றில் மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைக் குறிப்பிடத்தக்கன. காஞ்சி கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில், பல்லவர்கால வரலாற்றை அறியமுடிகிறது.

பராந்தகச் சோழனின் உத்திரமேரூர்க் கல்வெட்டு, சோழர்கால கிராம ஆட்சிமுறையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இக்கல்வெட்டில் கிராம உறுப்பினர்களின் தகுதிகள், தேர்ந்தெடுக்கப்படும்முறை ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. தஞ்சை, திருவொற்றியூர், மேலப்பழுவூர், சிதம்பரம், திருவாரூர், மதுரை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் காணப்படும் கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் மக்களின் பண்பாடு, அரசியல், வாழ்க்கைமுறை, நீதி, சமூக உறவு, பொருளாதார நிலை போன்றவற்றை எடுத்துரைக்கின்றன.

பொன், செம்பு ஆகிய உலோகத்தகடுகளின் மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்குப் "பட்டயங்கள்" என்று பெயர். பட்டயங்களும், கல்வெட்டுகளைப் போன்றே காலத்தையும் ஆட்சி முறையையும் அறிய உதவுகின்றன. பட்டயங்கள் அரசனின் பெயர், அவனது காலம், பட்டயம் அளிக்கப்படும் நோக்கம் முதலியன பற்றிக் கூறுவதால், வரலாற்றை அறிய அவை பெரிதும் துணைபுரிகின்றன.

அவை பிராகிருதமொழியிலும், வடமொழியிலும், தமிழிலும் காணப்படுகின்றன. வேள்விக்குடிப் பட்டயம், தளவாய்புரச்செப்பேடு, சின்னமனூர்ச் சாசனம், சிவகாசிச் செப்பேடுகள் முதலிய பாண்டியர்காலப் பட்டயங்களும், திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைச் செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள் போன்ற சோழர்காலப் பட்டயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மன்னர்கள் கொடையாக வழங்கிய இறையிலி நிலங்களையும் அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களைப் பற்றியும் கல்வெட்டுகளும் பட்டயங்களும் கூறுகின்றன. இவை பிராமி, பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

**நாணயங்கள்:**

சங்க காலத்தில் செப்பு நாணயங்கள் வழக்கில் இருந்தன. அவை சதுர வடிவமானவை. நாணயத்தின் ஒருபுறத்தில் யானையும், மறுபுறத்தில் இரட்டை மீன்களும் காணப்பட்டன. யவனர்கள் தமிழகத்தில் மதுரை, புகார் ஆகிய இடங்களிலிருந்து, தங்க நாணயங்களை வெளியிட்டனர். அவை, அவர்களுடைய புழக்கத்திற்கே பயன்பட்டன. பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரட்டை மீன், கப்பல், நந்தி போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன.

முதலாம் இராஜராஜன் காலத்தில் வெளியிடப்பட் நாணயங்களில், புலியும் அதனருகில் இரட்டை மீன் கொண்ட வடிவங்களும் காணப்படுகின்றன. இதனால், அவன் பாண்டியர்களை அடக்கி வலிமை பெற்றவனாக வாழ்ந்தான் என்பது வெளிப்படுகிறது. இரண்டாம் வரகுணனின் தங்க நாணயம், கிரந்த எழுத்தில் அவனுடைய பெயருடன் காணப்படுகின்றது. நாணயங்கள் வாயிலாக, வணிகத்தில் பண்டமாற்று முறையோடு பணப்பரிமாற்றமும் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளதை அறிய முடிகிறது.

**நினைவுச் சின்னங்கள்**

தமிழகத்தில் காணப்படும் குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை வரலாற்றை அறிய உதவிபுரிகின்றன. மகேந்திரவர்மனின் மண்பகப்பட்டுக் கல்வெட்டில், அழியக்கூடிய பொருள்களான மரம், செங்கல், மண், சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள், சங்ககாலத்திலும் அதனைத் தொடர்ந்து களப்பிரர் காலத்திலும் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பல்லவரது காலம் முதற்கொண்டு கோயில்கள் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டதால் அவை இன்றும் நிலைத்து நின்று, தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணப்படும் குகைக் கோயில்களும், கற்களால் அமைக்கப்பட்ட இதரங்களும் குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், சிதம்பரத்திலுள்ள நடராஜர்

கோயில் மேலும் தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருவொற்றியூர், லால்குடி, திருவாரூர், மதுரை, வேலூர், இராமேஸ்வரம் மற்றும் சுசீந்திரம் போன்ற இடங்களில் காணப்படும் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.


**பிற ஆதாரங்கள்:**

முதுமக்கள் தாழிகளில் இடம் பெற்றிருந்த பல்வகைப் பொருள்கள், இறந்தவர்களுக்காகச் செய்யப்பட்ட சடங்குகளுக்கான சான்றுகளாக உள்ளன. வீரம், கொடை, புலமை முதலியவற்றில் சிறந்தவர்களை நினைகூரும் பொருட்டு நடப்பட்ட கற்பதுகைகளும் நடுகற்களும் தமிழ்ப் பண்பாட்டின் தொல்பொருள் சின்னங்களாக விளங்குகின்றன.

இவை தவிர குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை தமிழகப் பண்பாட்டையும், வரலாற்றையும் அறிவதற்குத் துணைபுரிகின்றன.

திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம், சித்தன்னவாசல் போன்ற இடங்களில் குகைக்கோயில்கள் உள்ளன. மாமல்லபுர ஒற்றைக்கல் இதரங்கள், தமிழகத்தின் சிறப்பான சிற்பக்கலைக்கு அடையாளமாகத் திகழ்கின்றன. சமண முனிவர்களின் வாழ்விடங்களாகக் **குகைகள்**

ஒருங்கிணைந்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவினர். இவை, கால அடிப்படையில் முதற்சங்கம், இ டைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.




தமிழகத்தில் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள், சங்கம் ஏற்படுத்திக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தார்கள். அச்சங்கங்களைப் போலவே, அதற்கு முந்திய காலத்திலும் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்றும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவை அச்சங்கங்களைச் சார்ந்த புலவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதினர்.

பழந்தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்றும், மதுரையிலும் கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்தபிறகு, மூன்றாம் தமிழ்சங்கம் மதுரையில் பாண்டியர்களின் ஆதரவோடு அமைக்கப்பட்டது என்றும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் தமிழ்ச்சங்ககால நூல்கள் என்றும் கூறுகின்றனர். எனவே, அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடுகின்றனர்.

மதுரையில். புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்து வந்தார்கள் என்பதற்கும் பாண்டிய மன்னர்கள், அவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதற்கும் சங்கப் பாடல்களில் சான்றுகள் உள்ளன. பாண்டியரைப் போலவே, சோழ மன்னர்களும் சேர மன்னர்களும் சிற்றரசர்களும் வள்ளல்களும் புலவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது. அவர்களின் உதவியும் ஆதரவும் பெற்ற புலவர்கள், தம் உள்ளத்து உணர்வுகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல் அவர்களின் நாடுகளையும் ஆட்சிச் சிறப்புகளையும் வாயாரப் புகழ்ந்து பாடினார்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும், சங்கங்களைப் பற்றிய வரலாறு, நக்கீரர் எழுதிய இறையனார் களவியல் உரையிலும் கூறப்பட்டுள்ளது.

**அகத்திணை – புறத்திணை**

தமிழர்கள், தம்வாழ்க்கையை "அகம்" எனவும் புறம் எனவும் இரு கூறாகப் பிரித்தனர். இதனை, அன்பின் வழிப்பட்டது "அகவாழ்வு" எனவும், வீரத்தின் வெளிப்பாடு புறவாழ்வு எனவும் கூறுவர்.

**அகத்திணை விளக்கம்:**

உருவத்தாலும், அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும். தலைவனும், தலைவியும் தாம்துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும்.

அகத்திணை ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். பொருந்தாக் காதலைப் பெருந்திணை எனவும், ஒருதலைக் காதலைக் "கைக்கிளை" எனவும் புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாகவும் கூறுவர். அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளாதிகாரம் விரிவாக விளக்குகிறது.

உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

ஒருங்கிணைத்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவியனர். இவை, கால அடிப்படையில் முந்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

**ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்**

| | | பொழுது | | |
|---|---|---|---|---|
| திணை | நிலம் | சிறுபொழுது | பெரும்பொழுது | உரிப்பொருள் |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் முன்வேனில் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | ஏற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின் பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | நண்பகல் | இளவேனில்,முதுவேனில், முன்பனி | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

புறத்திணை விளக்கம் புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும். தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப் பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன. மன்னரின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது "பாடாண்திணை" ஆகும். மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் பொதுவியல் திணையில் அடக்கிக் கூறுவர்.

**விருந்தோம்பல்**

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (தொல்.பொருள். 540) என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள "விருந்து" என்னும் சொல் "புதியது" என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய "விருந்தினர்" என்ற சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று (குறள் 82)

என்னும் குறட்பா இக்கூற்றை விளக்குகிறது. இளங்கோவடிகள் "தொல்லோர் சிறப்பின்" என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், தமிழரின் தொன்மையான பழக்கம் விருந்தோம்பல் என்பதை அறியலாம்.

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல், அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர். அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர் என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

....... .......... ............. கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்
செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நல்நாட்டு (அகம் 311, 9 – 12)

விருந்தினர் இரவில் காலம் கழித்துவரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர். இரவில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெய் கலந்த இறைச்சியைச் சமைத்துக் கொடுப்பது அன்றைய வழக்கமாகும்.

பசி என்று வந்தவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டு தாம் மட்டும் உணவு உண்பதை விரும்ப மாட்டார்கள். இதனையே விருந்தோம்பல் முறை என்று தமிழர்கள் வகுத்திருந்தனர். விருந்தினரிடன் முகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தமக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசுவைப் போல அன்புகாட்டி நெகிழச் செய்வர். விருந்தினர் மனம் மகிழும்படி விண்மீன்கள் போன்ற ஒளிவீசும் கிண்ணங்களில் பல வகையான உணவினைப் படைப்பர்.

தமிழர்கள், தமது வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்த பிறகே, தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும் பாலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள், மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டுவர். காட்டுவழியே செல்லும்போது, அவ்வழியாகப் பசியோடு வருபவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் உணவினைப் பகிர்ந்து கொடுப்பர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை "மடைநூல்" குறிப்பிடுகிறது. உணவுப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

**வள்ளன்மை**

பெற்ற பெருவளத்தைத் தக்கோர்க்குப் பகிர்ந்தளிப்பதே வள்ளன்மையாகும். இப்பண்பு, அரசர்கள் பின்பற்ற வேண்டிய பண்புகளுள் தலையாயது எனக் கருதப்பட்டது. கல்வி, தறுகண், இசை, கொடை ஆகிய பெருமிதப் பண்புகளுள் ஒன்றாக வள்ளல் தன்மை விளக்குகிறது.

வள்ளல்தன்மை கொண்டவர்களாக விளங்கினர் என்பதை இலக்கியர்கள் பெருமிதத்துடன் கூறுகின்றன.

சங்க இலக்கியங்கள் அகவாழ்க்கையை அன்பின் ஐந்திணையாகப் பகுத்துக் காண்கின்றன. தமிழரின் வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், தமிழர் வாழ்வியலின் ஆட்சிமுறை, வணிகச் சிறப்பு, சமய நம்பிக்கை, தனிமனித ஒழுக்கம் ஆகியவ்றறை வரிவாகக் கூறும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

சங்க இலக்கியங்கள் அகவாழ்க்கையை அன்பின் ஐந்திணையாகப்புகுத்துக் காண்கின்றன. தமிழரின் வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் தமிழர் ஆட்சிமுறை, வணிகச் சிறப்பு, சமயநம்பிக்கை, தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றை விரிவாகக் கூறும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.
வெளிநாட்டவர்கள் குறிப்புகளிலிருந்து தமிழர்கள், மேலை நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பல சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய தனிமனித வாழ்வியல் நெறிகள் பகுத்துக் கூறப்பட்டுள்ளன. தமிழரின் விருந்தோம்பல் பண்பையும் கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மையையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

## அலகு 2

## சிந்து சமவெளி நாகரிகம்

தற்கால மனித சமூகம், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, மிக உயரிய வாழ்க்கை நிலையை அடைந்திருக்கிறது. இச்சமூகம் கடந்துவந்த பல்வேறு காலச் சூழல்களை அறிந்துகொள்ள, தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. அவ்வகையில் சிந்துவெளிப் பகுதியின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு முடிவுகள், சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன.

இந்நாகரிகம், உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாகரிக நகர அமைப்பு, கட்டடக்கலை, சமூகம், சமயம், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைப் பல அகழ்ஆய்வு சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் தோன்றிய பழைமையான நாகரிகம், 'சிந்துவெளி நாகரிகம்'. இந்நாகரிகம், சிந்துநதிக்கரையில் செழித்து வளர்ந்த நகர நாகரிகம்' ஆகும். இது, சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தமையால் 'சிந்துவெளி நாகரிகம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு வாழ்ந்தவர்கள் இந்தியாவின் பழமையான குடிமக்களே என்று கருத்தொற்றுமை நிலவுகிறது. சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமையான இந்நகர நாகரிகம், முதன் முதலில் 1921 இல் கண்டறியப்பட்டது. பழைய பஞ்சாபின் மாண்ட்கொமரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்) ராவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட (1920) தொல்பொருள்சின்னம் 'ஹரப்பா' எனப்படுவதாகும். 1922 ஆம் ஆண்டு, சிந்து மாகாணத்தில் (பாகிஸ்தான்) லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்பேடு ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இச்சின்னத்தை 'மொகஞ்சதாரோ' என்பர்.

இந்த அகழ்வாய்வினை மேற்கொண்ட தொல்லியலாளர் 'சர் ஜான் மார்ஷல்'. இவர் தொல்பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய திராவிட நாகரிகத்துடன் சிந்துவெளி நாகரிகத்தை ஒப்பிடுகிறார். இவரின் கூற்றுப்படி, இந்த நாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்டதாக உள்ளது எனவும், இதன் காலம் கி.மு. (பொ.ஆ.மு) 3250 முதல் கி.மு. (பொ.ஆ.மு) 2750 வரை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் சாகுந்தாரோ, கோட்டிஜி, லோத்தல், காளிபங்கன் போன்ற இடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழாய்வுகள், தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமிடையே தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் மிகப்பழமையான நகர நாகரிகம் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

**சான்றுகள்:**

மக்கள் பயன்படுத்திய முத்திரைகள், மட்பாண்டங்கள், நீர் அருந்தும் குவளைகள், மோதிரங்கள், சுடுமண் பொம்மைகள், மணிகள், உலோக வளையல்கள், இரத்தினக்கற்கள் மற்றும் கட்டடச் சிதைவுகள் போன்றவை சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவை அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினை உலகிற்கு அறிவிக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்:**

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வாழக்கத்தில் உள்ன.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள ஆலூர், ஆசூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல்,தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த

சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர் கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

**குடிமக்கள்:**

திராவிடர்கள், மத்தியத் தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் சிந்துவெளிப்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்ன. ஆனாலும், இந்நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் யார் என்பது இன்னும் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இவர்கள் திராவிடர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர்.டி. பானர்ஜீ, ஹீராசு பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும். மேலும், சிந்துவெளியில் பேசப்பட்டு வந்த மொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

**திராவிடர்கள் யார்?**

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள் (கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திரரிவட தேசம்' என்றும், தமிழ் மன்னர்களை 'திரமிய ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே 'தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில் நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

| |
|---|
| கீழடி தொல்லியல் களம் என்பது, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும். இந்த அகழாய்வு மையம், தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12 கி.மீ தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும். |

**நகர அமைப்பும் கட்டடங்களும்**

சிந்துவெளியில் மைய அரசு இருந்தமைக்கான சான்றுகள் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளன. இதற்குப் பல தூண்களைத் தாங்கும் மன்றம், பொதுக்கூடம் முதலியவை முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள், வணிகத்தில் சிறந்து விளங்கினர். மேலும், இவர்கள் பெரும்பொருள் சேர்த்து மாட மாளிகைகளில் வாழ்ந்தனர்.

நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும், சுகாதார வசதி கொண்டனவாகவும் அமைக்கப்பட்டிருந்தன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன. பெரிய தெருக்கள் 33 அடி அகலமும், சிறிய தெருக்கள் 9 அடி முதல் 12 அடி வரை அகலம் கொண்டதாகவும் இருந்தன. பெரிய தெருக்களில் மக்கள் நடந்துசெல்லும் நடைபாதையும் இருந்தது. மூன்று வண்டிகள் ஒரே வரிசையில் செல்லும்வகையில் பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அனைத்து வீடுகளிலும் கிணறுகளும், குளியலறைகளும் இருந்தன. அக்குளியலறைகள், கழிவுநீர் செல்வதற்கு ஏற்ற வகையில் தெருவின் அருகிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்க்கும்போது, பாபிலோனிய நகரங்களை விஞ்சிய சிறந்த நகரமைப்பைச் சிந்துவெளி மக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

**கட்டடக்கலை:**

சிந்துவெளியில் ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றின் உள்ளே மன்னரின் மாளிகைகளும், பெரிய நீராடும் குளங்களும்,

நெற்களஞ்சியங்களும் மேடான சாலைகளும் இருந்தன. மேற்குத் திசையில் மேடான நிலத்தில் கோட்டையும், கிழக்கே குடியிருப்புப் பகுதியும் அமைந்திருந்தன.

ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்டசெங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன. கிணற்றுச்சுவர்,

ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்டசெங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன. கிணற்றுச்சுவர், சாக்கடைச்சுவர் போன்ற வளைந்த சுவர்களைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களில், செங்கற்களை இணைப்பதற்கு ஒரு வகையான சாந்தைப் பயன்படுத்தி உள்ளனர். பண்டைய தமிழ்மக்கள் பயன்படுத்திய செங்கற்களின் தன்மையும், அளவும் சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கற்களோடு ஒத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நீச்சல் குளம்:**

தலைசிறந்தது, மொகஞ்சதாரோவிலுள்ள 'பொதுக்குளியல் குளமாகும்'. இக்குளத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், புதிய நீரை உள்ளே கொண்டுவரவும், செங்கற்களால் கட்டப்பட்ட நீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளத்தின் தரைப்பகுதி நீரை உறிஞ்சாமல் இருப்பதற்காக. 'நீலக்கீல்' (Bitumen) என்ற பசையால் பூசப்பட்டிருந்தது. மக்கள், குளித்தபின்பு உடையை மாற்றிக்கொள்வதற்குக் குளத்தின் மேல் ஓரங்களில் பல அறைகள் இருந்தன.

குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. நீச்சல் குளத்திற்குள் சென்றுவர நுழைவாயில்கள் இருந்தன. நீச்சல் குளத்தின் தென்மேற்கு மூலையில் நீராவிப் பயன்பாட்டிற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

**தானியக்களஞ்சியம்:**

சிந்துவெளி மக்களின் முக்கியத்தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் எதிர்காலத் தேவையை முன்னிட்டு உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்தனர். இதற்கு ஹரப்பாவில் இருக்கும் தானியக்களஞ்சியமே சான்றாகும். இது 168 அடி நீளமும், 135 அடி அகலமும் உடையது. இதன் சுவர்கள் 52 அடி உயரமும், 9 அடி கனமும் உடையவை. இவை இரண்டு வரிசைகளாகக் கட்டப்பட்டு இருந்தன. இவ்விரண்டு வரிசைகளுக்கிடையே உள்ள தூரம் 23 அடியாகும். இவ்விரு நெடுஞ்சுவர்களுள் ஒவ்வொரு வரிசையிலும் ஆறு மண்டபங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டபத்திலும் மூன்று பெருஞ்சுவர்கள் எழுப்பப்பட்டன. அதில் நான்கு அறைகள் இருந்தன. இம்மண்டபத்தின் தரைப்பகுதி மரப்பலகையால் ஆனது. பல அறைகள் கொண்ட இத்தானியக்களஞ்சியத்தில் உணவு தானியங்கள் மட்டுமே சேமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**சமுதாய நிலை:**

சிந்துவெளியில் பல்வேறு தொழில் செய்வோர் இருந்தனர். அவர்களுள், கட்டடம் கட்டுவோர், நெசவாளர், சிற்பி, ஓவியர், தட்டார், தச்சர் முதலிய கைவினைஞர்கள் இருந்தனர். என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வீட்டு வேலைக்காரர்கள், கூடை முடைவோர், விவசாயம் செய்வோர், மீன் பிடிப்போர் இங்கு வாழ்ந்துள்ளனர். மேலும், சிந்துவெளி மக்கள் விவசாயம் மற்றும் வாணிகம் செய்து வசதியுடன் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**பெண்களின் நிலை:**

சிந்துவெளியில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்பட்டனர். இவர்கள், அழகு சாதனப்பொருள்களைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக வெண்கலத்தால் ஆன முகம் பார்க்கும் கண்ணாடிகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் போன்ற பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன. மேலும், இப்பெண்கள் காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, கழுத்துமணிகள் போன்ற பல அணிகலன்களையும் அணிந்திருந்தனர்.

இவையனைத்தும் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்டிருந்தன. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மேற்கூறிய அணிகலன்களைத் தொன்றுதொட்டுத் தமிழகப் பெண்கள் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை, சிந்துவெளி மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

**உணவு வகைகள்:**

சிந்துவெளி மக்கள் சிறந்த நகர வாழ்க்கையை மேற்கொண்டனர். நகரத்தில் அரசனும், அதிகாரிகளும், பலவகைத் தொழிலாளர்களும், கலைஞர்களும் வாழ்ந்தனர். கோதுமை, பார்லி, பேரிச்சம்பழம், பால், இறைச்சி வகைகளை மக்கள் உண்டனர். நீர்வளம் மிக்க சிந்துவெளியில் தானிய வகைகளும், பட்டாணி முதலிய பருப்பு வகைகளும், முலாம்பழம் முதலிய பழ வகைகளும், ஆடைக்கேற்ற பருத்தி வகைகளும் பயிராயின. ஆடு, மாடு, பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சியும் ஆமை, மீன் முதலியனவும் அவர்களுக்குக் கிடைத்தன. எஞ்சிய உணவுத் தானியங்களையும், இறைச்சி வகைகளையும் பதப்படுத்தி வைத்து அவர்கள் உண்டனர். இங்குக் கிடைத்துள்ள மாவு அரைக்கும் இயந்திரங்கள் அம்மி, ஆட்டுக்கல், உரல், எண்ணெய்ச் சட்டி, இட்டிலிச் சட்டி மற்றும் பிற பொருள்களையும் கொண்டு இவர்களின் உணவு வகைகளை நம்மால் அறிய முடிகிறது. இவர்கள் மரப்பலகை, மண்சிப்பி, வெண்கலக்கிண்ணி போன்றவற்றை உண்கலங்களாகப் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது.

**உடைகள்:**

சிந்துவெளி மக்கள் பருத்தி, கம்பளி, நார்ப்பட்டு ஆகியவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். மேலாடை, கீழாடை என முழு ஆடைகளையே அணிந்தனர். பருத்தி ஆடைகள் பெரும்பாலும் வண்ணங்களுடனும் பூ வேலைப்பாடுகளுடனும் இருந்தன. கம்பளி ஆடைகள் தடித்திருந்தன. நார்ப்பட்டாடை உடலோடு ஒட்டி, ஒளி ஊடுருவுமாறு இருந்தது. கழுத்துப் பட்டையுடைய சட்டைகளையும், பொத்தான் தைத்த சட்டைகளையும் இவர்கள் அணிந்திருந்தனர்.

ஆண், பெண் இருபாலரும் மங்கோலியரைப் போல் தலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டனர். வட்டுரை அணிந்தவருமுண்டு. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஆண், பெண் உருவங்களைக் கொண்டே நாம் அவர்கள் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**நகர நாகரிகம்:**

சிந்துவெளி நாகரிகத்தில் நகர வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் பொதிந்துள்ளன. ஷல்டே என்ற அறிஞர் நகர வாழ்க்கையின் கூறுகளாக, அதிக மக்கள் தொகை, பல்வேறு தொழில் புரிவோர், வணிகர்கள், பணியாளர்கள், குடியிருப்புகள், பொதுக்கட்டடங்கள், எழுத்துக்குறியீடுகள், கலை வடிவங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார். நகரில் வணிகர்கள் பெருவாரியாக வாழ்ந்தனர். நகரங்களுக்கு இடையேயான உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்நகரங்கள் பல தொழில்களின் மையங்களாக இருந்தமையால், ஏற்றுமதிக்கான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இங்குப் இருந்தமையால், ஏற்றுமதிக்கான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இங்குப் பல நகரங்களில், நகராட்சிமுறை பயன்பாட்டில் இருந்தது. இதிலிருந்து, மைய அரசு இருந்திருக்க வேண்டும் எனத் தெளிவாகிறது. மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில், சிந்துவெளி நாகரிகம் 'நகர நாகரிகம்' என்பதும் புலனாகிறது.

**பொழுதுபோக்கு:**

மொகஞ்சதாரோவில் கிடைக்கப் பெற்ற விளையாட்டுப் பொருள்களில், கோலிகளே அதிகமாகக் கிடைத்துள்ளன. பகடைக்காய், சொக்கட்டான், சதுரங்கம் ஆடுவது அவர்களுடைய சாதாரண பொழுதுபோக்காகும். சதுரங்க அட்டை மரத்தாலும், சதுரங்கக்காய்கள் களிமண்ணாலும் செய்யப்பட்டு இருந்தன. சிறுவர்கள், களிமண்ணில் பொம்மைகள் செய்து விளையாடினர்.

இத்தகைய விளையாட்டுகள், தொன்றுதொட்டுத் தமிழகத்திலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆகவே, சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறியலாம். மேலும், சிந்துவெளி மக்கள் இசையிலும், நாட்டியத்திலும் அதிக ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இவர்கள் காளைச்சண்டை, கோழிச்சண்டை, வேட்டையாடுதல், பறவைவளர்ப்பு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். கோழிச்சண்டை விளையாட்டு, தமிழகப் பண்பாட்டிலிருந்து சிந்துவெளி மக்களின் பண்பாட்டிற்குப் பரவியுள்ளதை காணலாம்.

**மருத்துவம்:**

சிந்துவெளி மக்கள் கண், காது, தொண்டை, தோல் தொடர்பான நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைச் செய்வதற்குக் கட்டில் (cuttle) என்ற ஒரு வகையான மீனின் எலும்புகளைப்

பயன்படுத்தினர். மான், காண்டாமிருகத்தின் எலும்புகள், பவளங்கள், வேப்பந்தழைகள் போன்றவை மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தமிழகத்தில், இன்றும் மருத்துவத்திற்கு வேப்பந்தழை பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

**இறந்த உடலை அடக்கம் செய்தல்:**

சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வகையான வழிமுறைகளைப் பின்பற்றினர். முதலாவதாக, முழு உடலையும் புதைப்பது, இரண்டாவதாக, எரிந்த உடலின் எஞ்சிய பாகங்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் சேர்த்து தாழிகளில் வைத்துப் புதைப்பது, இத்தாழிகள், வீடுகளிலோ வீட்டின் அருகிலோ புதைக்கப்பட்டன. இறுதியாக, இறந்த உடல்களை ஊருக்குப் புறத்தே திறந்த வெளியில் பறவைகளும், விலங்குகளும் உண்ணும்படி வைத்தனர். எஞ்சிய எலும்புகளை மட்டும் எடுத்துப் பின்னர், மண்தாழிகளில் வைத்து அவற்றுடன் வேறு குடுவைகளில் இறந்தவர் பயன்படுத்திய சில பொருள்களையும் சேர்த்துப் புதைத்தனர். இறந்த உடலை புதைக்கும் போது, அவர்களுக்குப் பிடித்த உணவுப்பொருள்களை வைத்து புதைப்பதும் வழக்கத்தில் இருந்தது. இப்பழக்கம், தமிழகத்தின் பெரும்பகுதிகளில் வழக்கத்தில் இருந்தது என்பது, பல ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற தாழிகள் அத்திரப்பாக்கம், அரிக்கமேடு, ஆதிச்நல்லூர், திருகாம்புலியூர், தாமிரபரணி ஆற்றங்கரை போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்தின் வடக்கிலும், தக்காணத்தின் தெற்கிலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவை, தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி மக்களுக்கும் உள்ள தொடர்பினை உறுதி செய்கின்றன.

இறந்தவர்களை வடக்கு தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்துவெளிக்கும் பண்டைய தமிழகத்திற்கும் பொதுவான நடைமுறையாக இருந்தது. உருண்டை வடிவம் கொண்ட (Globular) ஈமத்தாழிகள், சிந்துளியிலும் தமிழகத்திலும் பயன்படுத்தப்பட்டன. இன அடிப்படையிலும் தொழில்நுட்ப அடிப்படையிலும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழகப் பண்பாட்டிற்கும் இருந்த தொடர்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**பொருளாதார வாழ்க்கை முறை:**

சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் தோன்றியதால், அங்குள்ள மக்கள் நீர்வழிப்பயணம் மேற்கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டனர். இவர்கள் உள்நாட்டில் காஷ்மீர், மைசூர், நீலகிரிமலை, கிழக்கு இந்தியா, மேற்கு ஆசியா. மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் வணிகம் செய்தனர். மேலும், இவர்கள் சுமேரியா, எகிப்து போன்ற வெளிநாடுகளிலும் வணிகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டிச் சிறப்பாக வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

**விவசாயம்:**

சிந்துவெளி மக்களின் முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் கோதுமை, பார்லி, நெல், எள், காய்கறிகள் போன்ற பயிர்களைப் பயிரிட்டனர். இவர்களுக்கு உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் பழக்கமும் இருந்தது. அதற்குச் சிறந்த உதாரணமாக ‘தானியக்களஞ்சியம்’ திகழ்கிறது. அகழ்வாராய்ச்சியின் போது சிதைந்து கிடந்த பல கால்வாய்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் கழிநீர் வடிகால் வசதியும் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. இவர்கள், நிலத்தை இரு வழியாக உழுததற்கான அடையாளங்கள் காளிபங்கனில் காணப்படுகின்றன. வேளாண்மைக்குத் திமிலுடன் இருக்கும் காளைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஒட்டகங்களும் எருமைகளும், வேளாண்மைக்குப் பயன்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான நீர், சிந்துநிதியிலிருந்து பெறப்பட்டன. அகழ்வாய்வின்போது, கண்டெடுக்கப்பட்ட கலப்பைகளும், அரிவாள்களும் சிந்துவெளி மக்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதை வெளிப்படுத்துகிறது.

திமிலுடன் இருக்கும் காளைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஒட்டகங்களும் எருமைகளும், வேளாண்மைக்குப் பயன்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான நீர், சிந்துநதியிலிருந்து பெறப்பட்டது. அகழ்வாய்வின்போது, கண்டெடுக்கப்பட்ட கலப்பைகளும், அரிவாள்களும் சிந்துவெளி மக்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதை வெளிப்படுத்துகிறது.

**வீட்டு விலங்குகள்:**

சிந்துவெளி மக்களிடையே கால்நடை வளர்ப்பு மிகவும் முக்கியத்தும் பெற்றிருந்தது. அவர்கள் தமது வீடுகளில் பசு, செம்மறியாடு, வெள்ளாடு, எருமை, எருது, நாய், பன்றி, ஒட்டகம் போன்ற விலங்குகளை

வளர்த்து வந்தனர். இதனால், இவர்களின் பொருளதாரம் மேம்பட்டது. வீட்டைப் பாதுகாக்கவும், வேட்டைக்காகவும் நாயை பயன்படுத்தினர். மேலும் பூனை, மான், மயில், வாத்து, கிளி போன்றவற்றையும் வளர்த்தனர். ஆனால், இவர்கள் குதிரையை அறிந்திருந்தார்களா என்பது பற்றி இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை.

**வேட்டையாடுதல்**

சிந்துவெளி மக்கள் பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தேவைக்காகவும் வேட்டையாடுவதில் ஈடுபட்டனர். அவர்கள் யானை, காண்டாமிருகம், கரடி, மான், சிறுத்தை போன்ற விலங்குகளை வேட்டையாடியதாகச் சான்றுகள் மூலம் அறிகிறோம்.

மேற்கண்ட விலங்குகளின் உருவங்கள் பொறித்த பல முத்திரைகள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள், விலங்குகளின் தோல், முடி, எலும்பு ஆகியவற்றை விற்று வணிகம் செய்தனர். வேட்டைக்குக் கோடரி, ஈட்டி, குத்துவாள், மழு, தண்டு, கவண், அம்பு, வில், போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர். இவை, செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டிருந்தன.

**உலோகங்களும் தாதுப் பொருள்களும்**

சிந்துவெளி மக்கள் தங்கம், பித்தளை, வெள்ளி போன்ற உலோகங்களைப் பயன்படுத்தினர். பெரும்பாலான உலோகப் பொருள்கள் செம்பு மற்றும் வெண்கலத்தால் செய்யப்பட்டவை என்பது அகழாய்வின் மூலம் தெரிகிறது. போர்க்கருவிகள் செய்வது, இவர்களின் முதன்மைத்தொழிலாகும்.

கோடரி, ஈட்டி, வில், அம்பு, கதாயுதம், கவண், கத்தி போன்ற ஆயுதங்களைப் போரில் பயன்படுத்தினர். ஈட்டிமுனை மிகக்கூர்மையானதாகவும், அகலமானதாகவும் இருந்தது. சில வகையான கத்திகள் இருபக்கமும் நன்கு தீட்டப்பட்டிருந்தன. வீடுகளுக்குத் தேவையான பாத்திரங்கள் மண், கற்கள், தந்தம், செம்பு, பித்தளை ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன. ஆனாலும், இவர்கள் இரும்பின் பயனை அறிந்திருக்கவில்லை.

**வணிகம்:**

பொதுவாக ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் வணிக மையங்களாக இருந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திற்கு நிலவழி மற்றும் நீர்வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தினர். வணிகம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. சிந்துவெளி மக்கள் வணிகத்திற்காக மற்ற இடங்களுக்குச் சென்று வர மாட்டுவண்டியை அதிகமாகப் பயன்படுத்தினர்.

தென்பாரசீகம், ஈராக், சுமேரியா, சிரியா, எகிப்து, ஆகிய நாடுகளுடன் தரைவழி வணிகம் செய்யும் பொருட்டு, ஏறத்தாழ 3000-கல் தொலைவுவரை பயணம் மேற்கொண்டதாக அறிய முடிகிறது. தரைவழிப் போக்குவரத்திற்கு எருதுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், நீர்வழிப் போக்குவரத்தும் வழக்கத்திலிருந்தது. அது சிந்து ஆற்றின் வழியே நடைபெற்றது. பண்டைய சிந்துவெளி மக்கள் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, பல நாடுகளுடன் வணிகம் செய்தனர். படகுப் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக, புரோச், காம்பே துறைமுகங்கள் வணிகத்தில் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

ஆனால், நீர்வழிப் போக்குவரத்தும் வழக்கத்திலிருந்து, அது சிந்து ஆற்றின் வழியே நடைபெற்றது. பண்டைய சிந்துவெளி மக்கள் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, பல நாடுகளுடன் வணிகம் செய்தனர். படகுப் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக, புரோச், காம்பே துறைமுகங்கள் வணிகத்தில் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

**அளவீடுகள்:**

சிந்துவெளி மக்கள் வணிகத்தில் ஒரே சீரான எடைக்கற்களையும் அளவீடுகளையும் பயன்படுத்தினர். 'ஹரப்பா' மக்கள் அளக்கும் கலையை அறிந்திருந்தனர். நீளத்தை அளக்க அடிமுறையைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக, அளவைக் குறிகள் இடப்பட்ட குச்சிகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் நீளத்தை அளக்க அடி முறையானது தொன்றுதொட்டு வழக்கத்தில் இருப்பதை நாம் அறிய முடிகிறது. இவர்கள் நிலத்தை அளக்க வெண்கல அளவுகோலைப் பயன்படுத்தி உள்ளனர். இதிலிருந்து, சிந்துவெளி மக்கள் அளக்கப் பயன்படுத்திய அளவீட்டு முறைக்கும் தமிழர்கள் பயன்படுத்தும் அளவீட்டு முறைக்கும் தொடர்பு இருப்பதை நாம் அறியலாம்.

**சமயம் மற்றும் வழிபாடு:**

சிந்துவெளி மக்கள், சமய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அங்குக் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், வடிவங்களைக் கொண்டு அவர்களின் சமயத்தைப்பற்றி அறிய முடிகிறது. இவர்கள் இயற்கைப் படைப்பாற்றலின் உருவமாகப் பெண்களைக் கருதி, அவர்களைத் தெய்வமாக வழிபட்டனர்.

**தாய்த்தெய்வ வழிபாடு:**

தாய்த்தெய்வ வழிபாடு, சிந்துவெளி மக்களின் முக்கிய வழிபாடாகும். ஹரப்பாவில் பெண் உருவம் பொறித்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன.

இதுவே, பிறகு சக்தி வழிபாடாக மாறியது. இன்றும், தமிழகத்தில் பெண்களைத் தெய்வமாக வழிபடும் மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

(எ.கா) பார்வதி, காளி போன்ற தெய்வங்கள் தமிழகத்தில் இன்றும் வணங்கப்படுவதைக் காணலாம்.

| |
|---|
| பண்டைய திராவிட மக்களுள் பெரும் பகுதியினர், தாய்த் தெய்வ உரிமை, தாய் முறை போன்றவற்றைக் கடைப்பிடித்தனர். இவற்றின் காரணமாக திராவிட மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு பெருவழக்கமாக இருந்தது என சமூகவியல் அறிஞர்கள் கூறுவர். |

**பசுபதி வழிபாடு:**

ஹரப்பாவில் கிடைத்த முத்திரைகளில் அமர்ந்த நிலையிலுள்ள மகாயோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று முகங்களை கொண்ட கடவுள், யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவும், அதனைச்சுற்றி யானை, புலி ஆகியவற்றின் உருவங்கள் வலப்புறமாகவும், காண்டாமிருகம், எருமை ஆகியவற்றின் உருவங்கள் இடப்புறமாகவும் அமைந்துள்ளன.

வரலாற்று ஆய்வாளர்கள் கூற்றுப்படி, இது சிவனுக்குரிய "திருமுகம்" (மூன்று முகம்), பசுபதி (விலங்குகளின் கடவுள்), யோகேசுவரன் (யோகிகளின் கடவுள்), போன்ற பல்வேறு வடிவங்களை உணர்த்துவதாக இவ்வழிபாடுகள் உள்ளன.

**விலங்கு வழிபாடு**

சிந்துவெளி மக்கள் விலங்குகளைத் தெய்வமாக வழிபட்டனர். தமிழகப் பண்பாட்டில் பண்டைய காலம் முதல் இன்றுவரை பசு, எருது, புலி, பறவை போன்ற விலங்குகள் சமயச் சின்னங்களாக இருந்து வருவதைக் காணலாம். இது சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிடப் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**நீர்வழிபாடு:**

ஹரப்பா, மொகஞ்சதாரோ நகர மக்கள் ஆற்றங்கரையின் அருகிலேயே வசித்ததன் காரணமாக, நீரைக் கடவுளாகக் கருதி வழிபட்டனர். இவர்கள், மொகஞ்சதாரோவில் உள்ள பெரிய நீச்சல் குளத்தில் நீராடுதல் என்ற வழக்கம் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இங்கு வாயில் சிறுமீன்களை வைத்துள்ள முதலைகள், ஆமை போன்ற உருவங்கள் ஆறுகளுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ளதை முத்திரைகள் மூலம் காணமுடிகிறது. ஆகவே, சிந்துவெளி மக்கள் ஆற்றுவணக்கம் (அ) ஆற்றுவழிபாடு செய்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் வழிபடுவதற்கு முன் நீராடும் வழக்கம் இருப்பதை இன்றும் காணலாம். மேலும், நீர்நிலைகளைத் தெய்வாக வணங்குவது தமிழர்களிடையே உள்ள பண்பாடாகும்.

**மரவழிபாடு:**

சிந்துவெளி மக்களிடம் மரங்களை வழிபடும் வழக்கமும் இருந்தது என்பதை ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் வாயிலாக அறியலாம். இவற்றில், அரசமரமே முதன்மையாக உள்ளது. மரத்தடியில் மேடை அமைத்தலும் விழாக்கள் நடத்துதலும் வழக்கமாகும். மரங்களை ஆண் கடவுளாகவும், பெண் கடவுளாகவும் கருதி வழிபட்டனர். இன்றும், தமிழகத்தின் வழிபாட்டுத் தலங்களில் வேப்பமரத்தை பெண் கடவுளாகவும், அரசமரத்தை ஆண் கடவுளாகவும் வணங்குவது வழக்கமாகவுள்ளது.

**சூரியன் மற்றும் நெருப்பு வழிபாடு:**

சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் சூரியன், பாம்பு உருவங்கள் காணப்படுகின்றன. ஆகவே, இவர்கள் சூரியனையும் நெருப்பையும் கடவுளாகக் கருதி வழிபட்டனர் எனலாம். இன்றும், தமிழகத்தில் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை அக்னித்தலமாகவும் (நெருப்பு), சிவனின் வடிவமாகவும் வணங்கப்படுகிறது. மேலும், சிந்துவெளி மக்களிடையே காணப்படும் பாம்பு வழிபாடு, லிங்க வழிபாடு போன்றவை தமிழகப் பண்பாட்டோடு பொருந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கலைகள்:**

சிந்துவெளி மக்கள் நுண்கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் பயன்படுத்திய முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், பானைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், சுடுமண் பொம்மைகள், அணிகலன்கள், வெண்கலத்தாலான நடனப்பெண்ணின் உருவம், யோகி சிற்பம் ஆகியவை சிந்துவெளி மக்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**எழுத்துகள்**

சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள 'சித்திர எழுத்துகள்' சிந்துவெளி மக்களின் மொழிக்குரிய எழுத்துகளாகும். இந்த எழுத்துகள் இடமிருந்து வலமாக ஒரு வரியும், வலமிருந்து இடமாக மற்றொரு வரியாகவும் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தின் கீழ்வாலை, குளிர்சுனை, புறக்கல், ஆலம்பாடி, செத்தவாரை, நேகனூர்பட்டி ஆகிய இடங்களில் காணப்படும் எழுத்துகள், சிந்தவெளியிலுள்ள எழுத்துகளோடு தொடர்புடைய தொல்தமிழ் எழுத்துகளாகும். வடபிராமி எழுத்துகளும், தென்பிராமி எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

**சிந்துவெளி எழுத்துக்கள்**

சிந்துவெளி நாகரிக மக்களின் பேச்சு மொழி, எழுத்துக்கள் தொடர்பாக இன்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களுக்கும், திராவிட எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஹீராசு பாதிரியார், ஐராவதம் மகாதேவன், பாலகிருஷ்ணன் போன்ற வரலாற்றாய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தென்பிராமி எழுத்துகள், சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திராவிடரால் வளர்க்கப்பட்ட நேரான வளர்ச்சியுடைய எழுத்துகள் ஆகும். அவற்றின் ஒருமைப்பாட்டைத் திருநெல்வேலியில் கிடைத்த மட்பாண்டங்கள் மீதுள்ள எழுத்துக்குறிகளையும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளையும் கொண்டு அறியலாம். சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, திராவிட மொழி என்பதும், தமிழ் ஒரு தென் திராவிட மொழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உலக மொழிகள் எவற்றிலும் இல்லாத சிறப்பு தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. எழுத்துகளின் ஒலிப்பு முறையான ழ, ன, ள, ற, ண ஆகிய எழுத்துகள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன.

**முத்திரைகள்:**

சிந்துவெளி மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த கலைபடைப்புகளாகத் திகழ்வன முத்திரைகளாகும். அகழ்வாராய்ச்சியில், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை திமிலுடன் இருக்கும் காளை, எருமை, புலி, காண்டாமிருகம், வெள்ளாடு, யானை போன்ற விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகளாகும். பல முத்திரைகள் எழுத்துக்குறியீடுகளைக் கொண்டுள்ளன. ஆகவே, இவை சிந்துவெளி மக்களின் வரலாற்றை அறிய உதவும் இன்றியமையாத சான்றுகளாகத் திகழ்கின்றன.

**சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு**

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு குறித்தும், அதற்கான சான்றுகள் குறித்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. இதுசார்ந்த பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய, வளர்ந்த, பண்பட்ட நகர நாகரிகமானது, திடீரென அழிந்திருக்க முடியாது. இருந்தாலும், இது பின்வரும் காரணங்களால் அழிந்திருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர்.

- சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம்.
- அங்குக் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் அடிப்படையில் பார்த்தால் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு அழிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

- வரலாற்று ஆசிரியர் கிருஷ்ணா ரெட்டி என்பாரின் கூற்றுப்படி ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்கள் மிகப்பெரிய வணிகத்தலங்களாக இருந்துள்ளன. இங்குப் பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு, நகரங்களை விட்டு மக்கள் வெளியேறி இருக்கலாம்.

- சிந்துநதி தன்போக்கை மாற்றிக் கொண்டதால், கடுமையான வறட்சி ஏற்பட்டு மக்கள் அந்நகரங்களிலிருந்து வெளிவேறி இருக்கலாம்.

- மொகஞ்சதரோவில் கிடைத்துள்ள மண்டை ஓடுகளில் காணப்பட்டுள்ள வெட்டுக் காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும் அழிந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

**இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை**

பழைமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது அவையாவன;

- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும் அழிந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

**இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை:**

பழைமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது அவையாவன;

- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு மேம்பட்டதாகவும் மற்ற நகர வடிமைப்பிற்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளது.

- காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும்

- கட்டடக் கலையில் கட்ட செங்கற்கள், சுண்ணாம்பைப் பயன்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்னர்.

- நகரம் மாசடைவதைக் தடுக்க சுண்ணாம்புக் கால்வாய்கள், நகரின் ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டிருந்தன.

- தூய்மை மற்றும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டது.
- கவின்கலைகள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன.
- சிந்து வெளி மக்கள் பயன்படுத்திய மொழியே தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.

**லோத்தல்**

குஜராத்திலுள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின் போது S.R. ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் 'லோத்தல்' ஆகும். இவ்விடமானது சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்த துறைமுகமாகும். இது உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எகிப்து, மெசபடோமியா உள்ளிட்ட நாடகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன.

**நிவைுரை:**

சிந்துவெளிப் பகுதியில், தொல்லியலாளர்கள் பலர் ஆய்வு மேற்கொண்டிருந்த போதிலும் சர். ஜான் மார்ஷல் அவர்கள் மேற்கொண்ட அகழாய்வில்தான் இந்நாகரிகம் பற்றிய முழுமையான விவரங்கள் உலகிற்குத் தெரியவந்தன. இந்நாகரிகம் தமிழர்களின் நாகரிகமே என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் உணர முடிகிறது. தற்கால நகர அமைப்பிற்கு, இந்நாகரிகம் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. நீச்சல்குளம், தானியக்களஞ்சியம், பொதுக்கட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சிந்துவெளி மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், இவர்கள் பலநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த பெருமைக்குரியதாகும். இவர்கள், இறந்த உடல்களை எவ்வாறு அடக்கம் செய்தார்கள் என்பதையும் சான்றுகளுடன் காண முடிகிறது.

அலகு– 3

## தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

**நுழைவு வாயில்:**

புதிய கற்காலத்தில் பண்பட்ட வாழ்வைத் தொடங்கிய மனித சமுதாயம், நாளடைவில் பல வளர்ச்சிகளைக் கண்டது. இதில், குறிப்பாக மக்களின் நாகரிகமும் பண்பாடும் மேம்பட்டன. இதற்கு அடிப்படையாக,இலக்கியங்களும் அவற்றில் உள்ள விழுமியங்களும் காரணங்களாக அமைந்தன. இவற்றைப் பற்றி அறிவது நமது கடமையாகும். தமிழர்களின் விழுமியங்களான காதல், நட்பு, உதவி, வாய்மை, விருந்தோம்பல், வீரம், கொடை முதலானவை வழியே வெளிப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் இப்பகுதியில் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சியின் ஊற்றுக் கண்களாகத் திருக்குறள், நன்னூல், நாலடியார், ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம் மற்றும் வில்லிபாரதம் முதலான நூல்கள் அமைந்துள்ளன. தமிழர் பண்பாடும் நாகரிகமும் உலகளவில் சிறப்புப் பெற்றமைக்கு இந்நூல்களில் சொல்லப்பட்டுள்ள உயர்வான அறநெறிக் கருத்துகளே காரணங்களாக அமைந்துள்ளன என்பதை இப்பாடத்தில் விரிவாகக் காண்போம்.

**மனித நாகரிகத்தின் வளர்ச்சி:**

நிலையான இருப்பிடமின்றி நாடோடிகளாகத் திரிந்த மனித இனம், தாம் வாழ்ந்த இடத்திற்கு அருகிலேயே விலங்குகளை வளர்த்து, நிலங்களை உழுது, பயிரிடும் வேளாண் சமூகமாக உருமாறியது, வேட்டைச் சமூகமாகத் திகழ்ந்தபோதும் வேளாண் சமூகமாக மாற்றம் பெற்றபோதும் மனித இனம் குடும்பமாகவும் சமூகமாகவும் சேர்ந்து வாழத்தொடங்கியது. ஆதற்கேற்பப் பசேர்ந்து வாழத்தொடங்கியது. ஆதற்கேற்பப்பல அகப்புற மாற்றங்களை அது சந்திக்க வேண்டியிருந்தது.

இத்தகைய மாற்றங்களுக்கேற்ப மனிதன் தன்னைச் சுற்றியுள்ள புறச்சூழல்களை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேய்ச்சல் நிலங்களைத் தேடிப்போவதற்கு மாறாக நிலையான குடியிருப்பை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான் உணவுக்காக விளைநிலங்களை உருவாக்கினான். ஆற்றங்கரை ஓரங்களிலும் சமவெளிப்பகுதிகளிலும் கிராமங்களாகவும் நகரங்களாகவும் அமைந்த குடியிருப்புகள் நாளடைவில் நாடுகளாக வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சிக்கு மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு உற்பத்திக் கருவிகள் உறுதுணையாக இருந்தன.

சக்கரம், படகு போன்ற கருவிகள் நிலத்திலும் நீரிலும் மனிதனின் போக்குவரத்திற்குப் பயன்பட்டன. இப்போக்குவரத்துக் கருவிகள் கிராமம், நகர், நாடுகளுக்கிடையேயான உற்பத்திப் பொருளைப் பரிமாற்றம் செய்யும் வணிகத்தை வளரச்செய்தன. இவ்வாறாகப் புறநிலையில் வேட்டைச் சமூகத்திலிருந்து வேளாண் சமூகமாகவும் வணிகச் சமூகமாகவும் மாற்றம் பெறுவதற்கு மனிதஇனம் தனக்குள்ளாகவே உறவுநிலைகளை மேம்படுத்திக்கொண்டது. அதே நேரத்தில் ஒன்றுபட்டு வாழ, பல்வேறு நெறிமுறைகளையும் அது உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

புறவளர்ச்சிக்கு உற்பத்திக் கருகள் எவ்வளவு முதன்மையானவையோ அது போலவே உறவு மேம்பாட்டிற்கு மனிதர்கள் தமக்குள் வகுத்துக்கொண்ட நெறிமுறைகள் தவிர்க்க முடியாதவையாக விளங்கின. பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்துகொண்டிருந்த மனித இனம் ஒன்று சேர்ந்து வாழ உதவிய இந்நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டே குடும்பம், சமூகம், நாடு போன்ற நிறுவனங்கள் தோன்றின. இந்நிறுவனங்களைச் செழுமைப்படுத்துவதற்குத் தனிமனிதன், குடும்பத்தினர், சமூகத்தினர் அதற்குத் தலைமை தாங்கிய தலைவர்கள் ஆகியோர் தமது விருப்பு வெறுப்புகளை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இந்நெறிமுறைகளுக்குத் தன்னல மறுப்பும் பொதுநல விருப்புமே அடிப்படையாக இருந்தன. இத்தகைய விழுமியங்களைப் பேணிக்காத்துச் செழுமைப்படுத்துவதன் மூலமே மனித இனம் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழமுடியும் என்ற சூழல் உருவானது.

தமிழ் இலக்கியங்கள் தொன்றுதொட்டு அறம் - அன்பு - அருள் - அடக்கம் - அமைதி – அறிவு – ஆற்றல் - உண்மை – உழைப்பு – நேர்மை – நாணயம் - உயர்வு – ஒழுக்கம் - இரக்கம் - ஈகை – வீரம் - தீரம் - காதல் - கடமை – நீதி – நெறி முதலானவற்றை உள்ளடக்கியதாகும்.

மக்கள் தம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழிமுறைகளையும் விழுமியங்களையும் ஏற்படுத்திக்கொண்டனர். இவ்விழுமியங்களை, அடிப்படையானவை; மாற்றத்திற்கு உட்பட்டவை; மனித இனம் முழுமைக்கும் பொதுவானவை; குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் உரியவை என வகுத்துக் கொண்டனர். இத்தகைய விழுமியங்களைக் காலந்தோறும் தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**காதல்:**

சங்க இலக்கியங்கள், தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் காதல் உணர்வை உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றுகின்றன. தொல்காப்பியம்,''மனமொத்த இருவருக்கிடையே தோன்றும் காதல், நிலைபேறு உடையதாக அமையும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''

(தொல்: பொருளதிகாரம் : 269)

எனப் பத்துப் பொருத்தங்களாக அது விரித்துக் கூறுகிறது. ஒத்த அன்புடையதலைவனும் தலைவியும் காதல் வயப்படும் போது செம்புலப் பெயல் நீர்போல அன்புடைய நெஞ்சங்கள் கலந்தவர்களாக இருந்துள்ளனர் எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

மருத நிலத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. வண்டு அம்மலரிலிருந்து தேனை எடுக்கிறது. அத்தேனை யாராலும் தொட முடியாத குறிஞ்சிநில மலை உச்சியில், ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரத்தில் தேனடையாக வைத்துப் பாதுகாக்கிறது. அதுபோலத் தலைவியின் அன்பைப் பாதுகாத்து வைப்பவன் தலைவன். மருத நிலத்தில் வாழும் தலைவியின் காதலைக் குறிஞ்சி நிலத் தலைவன் பாதுகாத்து வைக்கும் நெறியை

''நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதிமீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை

(நற்றிணை 1 : 1 – 5)

என்னும் பாடல் உயர்ந்த அன்பின் தூய்மையையும் மேன்மையையும் ஒரு சேரப் புலப்படுத்துகிறது.

**நட்பு:**

உள்ளத்தால் ஒன்றியவர்களுக்கிடையில் தோன்றும் அன்பின் உறவே நட்பாகும். மனித உறவுளில் மிகவும் பெருமை உடையதாகக் கருதப்படுவது நட்பு. நட்பின் பெருமையைச் சங்க இலக்கியங்கள் போற்றிப் பதிவுசெய்துள்ளன. ஒருவருடைய உயர்வுக்கு உழைப்பும், விடாமுயற்சியும் காரணமாக இருப்பதுபோல, நல்லோர் நட்பும் காரணமாக அமைகிறது.

நட்பின் இயல்பு குறித்து
உயிர்ஓர் அன்ன செயிர் தீர்நட்பின்

(நற்றிணை 72 : 3)

...... யாக்கைக்கு
ஊயிர் இயைந்து அன்ன நட்பின்

(அகநானூறு 339 : 11 – 12)

எனச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. எலியைப்போல் சிறிய முயற்சி உரையவரோடு நட்புக் கொள்வதிலும் புலியைப் போன்ற வலிமையும் முயற்சியும் உடையவருடன் நட்புக் கொள்வதே சாலச் சிறந்தது என்பதனை,

புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மை யோடு
இயைந்த வைகல் உளவா கியரோ

(புறநானூறு 190 : 10 – 12)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே

(மதுரைக் காஞ்சி – 196 – 197)

பெறற்கரிய பெரும்பேறு கிடைப்பதாக இருந்தாலும் பொய்மை கலந்த நட்புப் பழியொடு முடியும். எனவே, வாய்மை நிறைந்த நட்பே தூய்மையானது, சிறந்தது, தகுதியானது என்கிறார் மாங்குடி மருதனார்.

அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஒளவைக்குக் கொடுத்த அதியமான், கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து உயிர்விட்ட பிசிராந்தையார், பாரியின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட கபிலர் போன்றோரை நட்பிற்கு இலக்கணங்களாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**உதவி:**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

''பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறம்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்''.

(கலித்தொகை 139 : 2 – 3)

என்று, பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். உண்மையான செல்வம் என்பது,'பிறர்துன்பம் தீர்ப்பதுதான்'' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம் என்பதுவே (நற்றிணை 219 : 7 – 9)
உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார் (கலித்தொகை 34) உதவும் பண்பு, வாழ்வியல் நெறியாகத் திகழ்ந்தது என்பதனை இப்பாடலால் அறியமுடிகிறது.

**வாய்மை:**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதனை,

பொய்யாச் செந்நா (புறநானூறு 168 : 19)
பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின்

(பதிற்றுப்பத்து 58 : 9)

என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

'பிழையா நன்மொழி என்ற வாய்மையையும் பொய்மையைப் பொய்பொதி கொடுஞ்சொல்' என்றும் பொய்மையையும் நற்றிணை குறிப்பிடுகிறது.

(நற்றிணை 200)

நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே

(பதிற்றுப்பத்து 63 : 6 – 7)

நிலம் பெயரினும் நின்சொற் பெயரல் (புறம் 3 : 14) முதலான பாடல் அடிகளில் நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல்:**

விருந்தோம்பல், இல்லறத்தாரின் தலையான கடமையாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாது வரவேற்று உபசரிப்பது தமிழர்களின் உயரிய பண்பாகும். இதனை,

''அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மேல் இயற் குறுமகள் உறைவின் ஊரே

(நற்றிணை 142 : 9 – 11)

என்று நற்றிணை பாராட்டுகிறது. அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கும் வழங்கி மகிழ்வர். ஏதுமில்லா நிலையில் விதைத் தினையை உரலில் இட்டு, இடித்து, உணவளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 333) விருந்தினருக்கு உணவளிக்க, வரகினைக் கடனாகப் பெற்று வருவதை ஒரு சங்கப்பாடல் காட்டுகிறது (புறம் 327)

உணவிடுவதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 316) விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்புவதாலும் ஒரு தலைவிக்கு ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நற் 380), விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை (புறம் 266), எனப் பெருங்குன்றூர்க்கிழார் கூறுகிறார். தமிழர்களின் வீட்டவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, அவர்தம் விருந்தோம்பல் பண்புக்குச் சிறந்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

**பெண்களின் நிலை:**

விருந்தோம்பலும் கற்பொழிக்கமும் பெரியோரைப் பேணுதலும் நன்மக்கட்பேறும் இல்லற வாழ்வின் கடமைகளாகும். தன்மகன் மார்பில் விழுப்புணபட்டு இறந்துகிடப்பதைக் கண்ட தாய், அவனைப் பெற்ற நாளிலும் பெரிதும் உவந்தாள். மற்றொரு தாயோ, நின் மகன் யாண்டுளன்’ எனத் தன்னிடம் வினவிய பெண்ணிடம் என் மகன் எங்கு இக்கிறான் என்று எனக்குத் தெரியாது. புலியிருந்து தங்கிச் சென்ற கற்குகைபோல, அவனை ஈன்ற வயிறு மட்டும் இங்கு உள்ளது. அவனைக் காண வேண்டுமானல், போர்க்களத்தில்தான் பார்க்க முடியும் (புறநானூறு 86 : 2 – 6) என்று கூறினாள்.

மக்கட்பேற்றையும் சமூகக் கடமையாகவே சங்க கால மகளிர் கருதினர். மக்கட்பேறே உயர்ந்த பேறு என்பதை,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே

(புறநானூறு 188 : 6 – 7)

என்னும் பாடல் கூறுகிறது.

சங்க காலத்தில் ஔவையார், நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதிமந்தியார், நப்பசலையார், முடத்தாமக்கண்ணியார், காக்கைப்பாடினியார், ஒக்கூர்மாசாத்தியார், பொன்முடியார் முதலான பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து சங்ககால மகளிர் கல்வி நிலையிலும் மேம்பட்டு விளங்கின் என்பதை அறியமுடிகிறது. பெண்கள் பொதுவாழ்க்கையிலும் பங்கேற்றனர் என்பதனை அதிமான் நெடுமான் அஞ்சிக்காகத் தொண்டைமானிடம் ஔவை தூது சென்றதிலிருந்து அறிய முடிகிறது. பாடினி, விறலி முதலானோர் ஆடல் பாடல் கலைகளில் சிறந்து விளங்கினர்.

**சங்க காலம் ஒரு வாழ்வியல் பொற்காலம்:**

சங்க காலம் பொற்காலமாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் இருப்பினும் ‘‘எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே’’ (புறம் 17) என்ற ஔவையின் பாடல்,‘‘நாட்டை மேன்மைக்கு உரியதாக மாற்றுவது, அரசனின் மாண்புகளே’’ என்பதை உணர்த்துகின்றது. சங்ககால மன்னர்கள் கல்வி, வீரம் கொடை, நட்பு, சான்றோரைப் புரத்தல் போன்ற மாண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

**வீரம்:**

சங்க காலத்தில் ஒருவருக்கொருவர் நாட்டு எல்லைகளைக் காப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் போர்புரிதல் தவிர்க்க முடியாததாக விளங்கியது. போருக்குத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லவேண்டிய கடமை மன்னனுக்கு இருந்தது. விழுப்புண் தாங்கிப் புறப்புண் நாணும் பண்புடையவர்களாக அரசர்கள் விளங்கினார்கள்.

ஆவும் அனியிற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்புக் கடிவிடுதும் நும்மரண் சேர்மின்

(புறநானூறு 9 : 1 – 5)

என்னும் பாடல் வாயிலாகப் பசுக்களும், பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவர்களும், மக்கட்பேறு இல்லாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு போர் தொடங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தினர் என்ற செய்தி புலப்படுகிறது. வீரம் செறிந்த போரிலும் அறநெறி காத்தவர் தமிழர் என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**கொடை:**

வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். இவ்வள்ளல் தன்மையைப் பாடாண்திணைப் பாடல்கள் விளக்குகின்றன. இவர்களுள் கடையெழு வள்ளல்கள் குறுநில

மன்னர்களாயினும், வரையாது பொருள் வழங்கும் இயல்பினர். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை ‘வான்மீன் பல பூப்பினும் ஆனாது மன்னனே’ என முடமோசியார் என்னும் புலவர் புகழ்கிறார்.

அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர், பாணன், பாடினி, கூத்தர், விறலி போன்றோர்க்குப் பொருள் கொடுப்பதோடு நின்றுவிடாமல், உடுக்க உடையும் உண்ண உணவும் கொடுத்து மகிழ்ந்தனர். மன்னர்களின் இத்தகைய விருந்தோம்பல், புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இதனைச் சங்க இலக்கியம்,

…… மாசுஇல்

காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்
………. ………………. …………
பனுவலின் வாழாஅப் பல்வேறு அடிசில்
………. ………………. …………
இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்

(சிறுபாணாற்றுப்படை : 235 – 245)

என்று விவரிக்கிறது.

இதைப் போலப் பதிற்றுப்பத்தில் சேர மன்னர்களது வள்ளல் தன்மையும் விருந்தோம்பல் பண்பும் பெரிதும் பேசப்படுகின்றன. ஆற்றுப்படை நூல்கள், அரசர்களின் வள்ளல்தன்மையைப் பாடுவதற்காகவே உருவாக்கப்பட்டன மன்னரின் வள்ளல் தன்மை அந்நாட்டு மக்களிடமும் இருந்ததை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன.

**அறநெறி போற்றல்:**

அரசர்கள், புலவர்களைப் பரிசில் பெறுவோராக மட்டும் கருதவில்லை. அறநெறிகூறி வழிநடத்தும் தகுதி உடையவர்களாகவும் கருதினர். இதனைப் பகைநாட்டு மன்னனின் பதல்வர்களை, யானையைக்கொண்டு இடறச் செய்யும் வேளையில், புலவர் சொல்கேட்டு நிறுத்திவிடுதல், புலவரின் அறிவுரைக்கேற்ப வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளுதல், போரைத் தவிர்த்தல், பகைநாட்டு ஒற்றன் எனக் கருதி ஒரு புலவரைக் கழுவேற்றும் வேளையில், மற்றொரு புலவர் சொல்கேட்டு அதை நிறுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள், அக்கால மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கும் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
………. ………………. …………

(புறநானூறு 55 : 10)

நிலன்நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே

(புறநானூறு 18 : 28 – 30)

டினப் புறநானூற்றில் புலவர்கள் பாடியுள்ளனர். இதனால், அரசர்கள் அறநெறியையே முதன்மையாகக்கொண்டு அரசாள வேண்டும் என்பதும் உழவு செழித்து, உணவு பெருக, நீர்நிலைகளை அமைத்துத் தர வேண்டியது அவர்களின் கடமை என்பதும் உணர்த்தப்பட்டன.

ஏழைப் பெண்ணின் மானம் காக்கத் தன் கையையே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியன், அடைக்கலம் புகுந்த புறாவினைக் காக்கத் தன்னையே தராசுத் தட்டில் ஏற்றிய சிபி மன்னன், கன்றிழந்த ஆவின் கண்ணீருக்கு நீதி வழங்கத் தன்மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதிச்சோழன் போன்ற அரசர்களின் செயல்கள் நீதிக்கு மன் அனைவரும் சமம் நீதி வழங்கும் போது தாம், தமர், பிறர் என்ற பாகுபாடு கருதாமல் நீதி வழங்கி, அறநெறி வழுவாது, ஆட்சி புரிய வேண்டும் என்ற விதிமுறைக்குக் கட்டுப்பட்டு அரசாட்சி நடத்தினர் என்பதைப் புலப்படுத்துகிறது.

வானம் பொய்ப்பினும், விளைச்சல் குறையினும், எதிர்பாராத இடையூறுகள் தோன்றினும் அரசன் நல்லாட்சி செலுத்தாததே காரணம் எனக் கருதுவது அன்றைய மரபு. இப்பழிச் சொல்லுக்கு அஞ்சி, நல்லாட்சி செலுத்தும் பொறுப்பு மன்னனுக்கு இருந்தது.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.

(புறநானூறு 35 : 27 – 29)

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகிறது.

**பிறர்க்கென வாழ்தல்**

சங்கத் தமிழர், பரந்த மனப்பான்மை உடையவராய்த் திகழ்ந்தனர். தந்நலம் கருதாது, பிறர்நலம் பேணும் பெற்றியுடையவராய் விளங்கினர். அனைவரையும் தம் உறவினராகக் கருதும் அவர்தம் மனப்பாங்கை,

'யாதும் ஊரே யாவரும் கோளிர்'

எனப் பாடிய பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் அடி உணர்த்துகிறது. இப்பாடல், கால எல்லை, நில எல்லைகளைக் கடந்து இன்றும் வாழ்கிறது.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

(புறநானூறு 195 : 6 – 7

உண்டால் அம்மஇவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும்
உண்டால் அம்மஇவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இளைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே

(புறநானூறு 182)

என்ற புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல், சங்கால மக்களுக்குத் தேவையான பல்வேறு விழுமியங்களை எடுத்துச் சொல்கின்றன. சங்கப் புலவர்கள் அறக்கருத்துக்களைப் போதனைகளாகச் சொல்லவில்லை. எளிய சொற்களால் இனிய முறையில் இலக்கியங்களாகப் படைத்தளித்துள்ளனர். எண்ணற்ற போர்கள், அவற்றின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள், கைம்பெண்களின் கையறுநிலை புலவர்கள் சித்திரிக்கும் வறுமைநிலை ஆகிய இன்னல்கள் பலவும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றையும் எதிர்கொண்டு சிறந்த விழுமியங்களோடு வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்தியமையே, சங்க இலக்கியங்களின் சிறப்பாகும்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்:**

பதினெண்கீழ்க்கணக்கு என்பது, பதினெட்டு நூல்களைக் குறிக்கும். அவற்றுள் பதினொரு நூல்கள், அறக்கருத்துகளைக் கூறுவதனால் அறநூல்கள் எனப்படுகின்றன. ஏனையவற்றில் ஆறு நூல்கள் அகப்பொருள் சார்ந்தும், ஒரு நூல் மட்டும் புறப்பொருள் சார்ந்தும் அமைந்துள்ளன.

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு''

என்னும் வெண்பா, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடுகிறது.

**திருக்குறள் காட்டும் அறம்:**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திருக்குறள், சிறந்த அறநூலாகும். உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளை வள்ளுவம் கூறுகிறது. இந்தத்தன்மையால்தான், திருக்குறள் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொறாமை, பேராசை, சினம்,இன்னாச்சொல் ஆகிய நான்கனையும் தீயதெனக் கருதிப் புறந்தள்ளி வாழ்வதே அறம் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (குறள் 35)

இல்லறத்தில் வாழ்பவர்கள் இவ்வறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால், அவ்வாழ்க்கை துறவறத்தினும் சிறந்தது என்பதனை,

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

(குறள் 48)

என்கிறார். இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் முதன்மையானது விருந்தோம்பல் பண்பாகும்.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (குறள் 84)

நல்ல முக மலர்ச்சியோடு விருந்தினர்களைப் பேணுபவர்கள் இல்லத்தில் செல்வம் நிறைந்திருக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

தீயவழியில் செல்லாமல் மனத்தை நேர் வழிப்படுத்துவதே அறிவு என்பதும் மன்னுயிரின் துன்பத்தைத் தன்னுயிர்த் துன்பமாகக் கருதுவதே அறிவுடைமை என்பதும் வள்ளுவரின் கருத்தாகும். கல்வியின் பெருமையைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடுகிறார். நல்லனவற்றைப் படிக்க வேண்டும். படித்ததை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.

அப்படிப்பட்ட கல்வியைப் பெறுபவனுக்கு எல்ல ஊரும் அவன் ஊரே, எல்லா நாடும் அவன் நாடே என்கிறார். இதனை,

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

(குறள் 397)

செல்வம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அச்செல்வத்தை அறவழியிலேயே சேர்க்க வேண்டும். பண்புடையவரிடம் சேர்ந்த செல்வம், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும் ஊருணியில் நீர்நிறைந்தது போலவும் மருத்துவப் பயன் நிறைந்த மரம் பலருக்கும் பயன்படுவது போலவும் பயன்தரும் என்கிறார்.

அது போலவே பண்பில்லாத கொடிய மனம் படைத்தவர் செல்வம், நல்ல பாலானது தான் வைக்கப்பெற்ற பாத்திரத்தால் திரிந்து நஞ்சாவதுபோல மற்றவர்களுக்குக் கேடு விளைவிக்கும் என்கிறார். இங்குச் செல்வத்திற்கென்று தனி இயல்பு கிடையாது, அதனைப் பெற்றிருப்பவரின் இயல்புக்கேற்ப அதன் பயன்பாடு அமைகிறது என்கிறார்.

நல்லவர்களுடைய வறுமை, அவர்களுக்கு மட்டுமே மிகுந்த துன்பத்தைத் தரும்; ஆனால்,தீயவர்களிடம் இருக்கின்ற செல்வமோ மற்றவர்களுக்கும் பல மடங்கு தீமைகளை விளைவிக்கும்.

செல்வம் தவறான இடத்தில் சேர்வதையும் நல்லவர்கள் அல்லல்படுவதையும் காட்டி வள்ளுவர் இது இப்படித்தான் இருக்கும் என அமைதி அடையவில்லை; மாறாக,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியயான்
கேடும் நினைக்கப்படும்.

(குறள் 1062)

என்ற குறள் மூலம் பலர் நோக, சிலர் வாழும் ஏற்றஇறக்கம் கொண்ட வாழ்வை வழங்குவது இறை விருப்பம் என்றால், அந்த இறைவனே தேவையில்லை என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான குரலாகவே இக்குறட்பா விளங்குகிறது.

ஒரு நாட்டின் வளத்தைப் பெருக்குவது அரசின் கடமை, அதற்கான வழிவகையாகப் பொருளை இயற்றல்,ஈட்டல், காத்தல் அதனைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளைத் திறம்பட செயல்படுத்த வேண்டும் என்கிறார். அரசன் முறைசெய்து காப்பாற்ற ண்டேும். இடித்துரைத்துத் திருத்தும் சான்றோர்களைத் தக்க துணையாகக் கொள்ள வேண்டும். அரசன் முறைதவறி ஆட்சி நடத்தினால் அவன் நாடு கெடும்; வானம் பொய்த்துவிடும்; மக்களை அச்சுறுத்தி, அளவுக்கு அதிகமாக வரிவிதிப்பது அறநெறியாகாது என்கிறார்.

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, இனியவைகூறல், செய்ந்நன்றி அறிதல் போன்ற நற்பண்புகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று கூறும் திருவள்ளுவர், இத்தகைய வாழ்க்கையைத் தெய்வத்தன்மை பொருந்தியது என்கிறார். இதனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)
ஏன்ற குறள்வழி அறிய முடிகிறது.

**நாலடியார் கூறும் அறம்:**

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதிநூல், நாலடியார், ஆகும்.'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி, நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடைய நூல் என்பதை விளக்கும். இந்நூல் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்டுப் 'பதுமனார்' என்பவரால் தொகுக்கப்பட்டது. திருக்குறளில் உள்ள கருத்துகள் பலவற்றை நாலடியாரில் காணலாம். துறவறத்தைப் பாராட்டிப் பேசுதல், உலக இன்பத்தை வெறுத்தல், ஊழ்வினை, மறுபிறப்பு, புலால் உண்ணாமை, உயிர்க்கொலை புரியாமை முதலிய சமண சமயக் கொள்கைகளை நாலடியார் வலியுறுத்திக் கூறுகிறது.

**அறிவும் ஒழுக்கமும்:**

வாழ்க்கை நிலையில்லாதது, செல்வமும் நிலையில்லாதது, எனவே, அறச்செயல்களைக் காலம், இடம் கருதாமல் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். கரும்பின் சாற்றைப்போல மற்றவர்க்குப் பயன்படும்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். செல்வத்தை நல்வழியில் சேர்க்க வேண்டும். அச்செல்வத்தைப் பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். கற்றறிந்தவர்களுடைய நட்பு, அடிகரும்பை உண்பது போலாகும், நற்பண்பும் அன்பும் இல்லாதவர் நட்பு, நுனிகரும்பை உண்பது போலாகும்.

களர் நிலத்திலே விளைந்தாலும் உப்பை, நல்ல விளைநிலத்தில் பிறந்த நெல்லுக்கு இணையாகவே கருதுவர். பிறப்பைக்கொண்டு மட்டும் ஒருவரை உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ கருதிவிடக்கூடாது. எங்குப் பிறந்தவராயினும் கற்றறிந்தவரே சிறந்தவர். அறிவும் ஒழுக்கமுமே மக்களுக்கு மதிப்பைத் தருவன என்ற சிறந்த கொள்கைகளை நாலடியார் எடுத்துரைக்கின்றது.

களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரை
தலைநிலத்து வைக்கப்படும்.
(நாலடியார் 133)

அறிவுத்தெளிவில்லாதவர்களுடைய நட்பைவிட, அவர்களின் பகையே நல்லது. எவ்வகை மருந்தினாலும் தீர்க்க முடியாத நோய் கொடுமையானது, ஒருவரிடம் இல்லாத பெருமைகளைக் கூறிப் புகழ்வதைவிட, அவரைப் பழித்தலே நல்லது போன்ற எளிய கருத்துகள் வாயிலாக நாலடியார் மனிதர்களின் மனத்தை பண்படுத்துகிறது.

**பிற்கால அறநூல்கள்:**

திருக்குறள் முதலான அறநூல்களுக்குப் பின்னரும், அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் பல நூல்கள் தோன்றியுள்ளன. ஔவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகியன அறம் உரைக்கும் நூல்கள். அவரைத் தொடர்ந்து, பலர் நீதிநூல்களை இயற்றியுள்ளனர். வெற்றிவேற்கை, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம்,நீதி வெண்பா முதலானவை அவற்றுள் சிலவாகும். ஔவையாரைப் பின்பற்றிப் பலர் ஆத்திசூடி இயற்றியுள்ளனர். பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் புதிய ஆத்திசூடிகள், மாணாக்கர்களுக்குப் பாடமாகவும் பயிற்று விக்கப்படுகின்றன.

**நன்னூல் கூறும் அறம்:**

தொல்காப்பியத்தின் வழிநூலாக விளங்கும் இலக்கணநூல், நன்னூல் பவணந்தி முனிவரால் இயற்றப்பெற்ற இந்நூலில் எழுத்து, சொல் என இரு அதிகாரங்கள் உள்ளன. இந்நூலின் பொதுப்பாயிரம், நூலைப்பற்றியும் நல்லாசிரியர், நல்லாசிரியர் ஆகாதவர், நல்ல மாணாக்கர், நன்மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள் பற்றியும் கூறியுள்ளது. மேலும் ஆசிரியர், நூலை மாணாக்கர்க்குக் கற்பித்தல், மாணாக்கர் கற்றுக்கொள்ளல் ஆகியன குறித்தும் விளக்கியுள்ளது.

**நல்லாசிரியர் இயல்புகள்:**

ஆசிரியர் என்பவர், அருட்குணம் உடையவராகவும் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவராகவும் தாம் கற்றதை மாணாக்கருக்கு எளிதாகப் புரியும்வண்ணம் எடுத்துச் சொல்லும் சொல்வன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆசிரியர் ஆகாதவர் இயல்புகள்:**

மாணவர் எளிதில் உணரும் வண்ணம் பாடத்தை விரித்துரைக்கும் திறமையில்லாதவர், இழிவான பண்புகள் உடையோர், மாணவரின் கற்றல் திறனைக்கண்டு பொறாமைப்படுபவர், பொருளாசை மிக்கோர், தவறாக வழி நடத்துபவர், மாணவர் மனத்தில் அச்ச உணர்ச்சியை உண்டாக்குபவர் போன்றோர் ஆசிரியர் ஆகும் பண்பில்லாதவர்கள்.

**நல்ல மாணாக்கர் இயல்புகள்:**

அல்லதை நீக்கி நல்லதை நாடும் இயல்புடையோர், ஆசிரியர் கூறுவதை மனத்தில் நிறுத்தி, மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து சிந்திப்பவர் ஆகியோர் தலைமாணாக்கர்.

தாம் கற்றுக் கொண்டதையே திருப்பிச் சொல்லும் இயல்புடையோர் இடை மாணாக்கர்.

கற்றவற்றை மறந்துவிடுபவர், கற்பதில் முழுமையாகக் கவனம் செலுத்தாமல் மனம் அலை பாய்ந்து கொண்டிருப்பவர், ஆசிரியரை வருத்தப் பாடம் கேட்கும் இயல்புடையவர், கற்பனவற்றில் உள்ள நற்கருத்துகளை மறந்துவிட்டுத் தீய கருத்துகளைப் பற்றிக்கொள்பவர் ஆகியோர் கடை மாணாக்கர்.

**மாணாக்கர் ஆகாதாவர் இயல்புகள்:**

கள் உண்பவன், சோம்பேறி, செருக்கு உடையவன், காமம் கொண்டவன், திருடன்,நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடு உடையவன், சினங்கொள்பவன், மிகுநேரம் உறங்குபவன், அறிவுநுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளம் படைத்தவன், அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாதவன், தீயசெயல் புரிபவன், பொய் பேசுபவன் ஆகியோரை மாணாக்கர் ஆகாதவர்கள் என நன்னூல் குறிப்பிடுகிறது.

**ஆசிரியர் மாணாக்கர் உறவு:**

நெருப்பில் குளிர் காய்வதுபோல ஆசிரியர் மாணாக்கர் உறவு என்பது, அகலாமலும் அணுகாமலும் இருத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தல் பணி சிறக்க இத்தகைய உறவு முறையே சிறப்பானது என்பது நன்னூலார் கருத்தாகும்.

**நூலின் மாண்பு:**

அறியாமை நீக்கி, அறிவை வளர்த்து மனிதரின் மனக்கோணலை நீக்குவதையே நூலின் மாண்பாக நன்னூலார் கருதுகிறார். (பொதுப்பாயிரம் - 25)

**கற்றல் முறைமை**

ஒரு முறைக்குப் பலமுறை படித்தாலே முழு அறிவு கிடைக்கும் என்பதே நன்னூல் கருத்தாகும். ‘‘ஆசிரியர் கூறுவதை அப்படியே உள்வாங்கிக் கொண்டால் கால்பகுதி அறிவே கிடைக்கும். உடன் பயில்வோருடன் அதுபற்றி உரையாடினால் கால்பகுதியும், உடன் பயிலும் மாணக்கருக்கும் கற்றோர் நிறைந்த அவையிலும் விரித்து உரைக்கும்போது மீதி அரைப்பகுதியுமாக அறிவு நிறைவுடையும்’’ என முழு அறிவு பெறுவதற்கான நெறிமுறைகளை நன்னூல் எடுத்துரைக்கிறது.
நூலில் தாம் கற்றறிந்தவற்றில் உள்ள கற்பனையையும் நடைமுறையையும் ஆய்ந்து தெளிதல், படித்தவற்றைப் பலமுறை சிந்தித்தல், கேட்டறிந்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்தல், ஆசிரியருடன் அதைப் பகிர்தல், கல்வியில் விருப்பமுள்ள மாணவருடன் பழகுதல், ஐயப்பாடுகளைக் கூடிப்பேசிக் களைத்து கொள்ளுதல் போன்றவற்றைத் திறம்படக் கற்றலுக்கான வழிவகைகளாக நன்னூல் கூறுகிறது.

**சிலப்பதிகாரமும் மணிமேகலையும்:**

காப்பிய மரபில், முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும் சிலப்பதிகாரம், தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது. சிலப்பதிகாரத்தின் தலைமை மாந்தர்களான கோவலனும் கண்ணகியும், பூம்புகார் நகரத்தில் பெருவணிகக் குடும்பத்தில் பிறந்தவர்கள். கோவலன் பல கலைகளைக் கற்றவன், உயர் பண்புடன் திகழ்ந்தவன்.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண்குழந்தைக்குப் பெயர் சூட்டும் தருணத்தில்,'ஒரு சமயம் என் மூதாதையர் ஒருவர் நடுக்கடலில் சென்ற போது மரக்கலம் உடைந்து அலைகடலில் தவிக்க, மணிபல்லவத்தீவில் வாழும் பெண் தெய்வம் கரை சேர்த்தது. ஆதலால், என் முன்னோரைக் காப்பாற்றிய 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாக மணிமேகலை என்னும் பெயரை என் மகளுக்குச் சூட்டுக எனக் கோவலன் கூறினான். இக்கூற்று கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன் என்பதைப் புலப்படுத்துகிறது.

கோவலன் யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவனாகவும் பிரிந்த கணவன் மனைவியைப் பெரும்பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வனாகவும் தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த 'இல்லோர் செம்மலாகவும்' மாடல மறையோனால் புகழப்படுகிறான். இத்தகைய மேம்பட்ட பண்புகளை உடைய கோவலன் காதல் மனைவி கண்ணகியை மறந்து, மாதவி என்ற கணிகையோடு வாழ்கிறான். முன்னோர் தந்த செல்வம் அனைத்தையும் இழந்த பின்பு, கண்ணகியோடும் அவள் காற்சிலம்போடும் புதிய வாழ்வு தேடிப் பூம்புகாரை விட்டுப் புறப்படுகிறான்.

மதுரை மாநகரில் மாதரியிடம் அடைக்கலம் புகுந்து காற்சிலம்பை விற்கச் செல்லும் வேளையில் கோவலன் தன் தவறை உணர்ந்து கண்ணகியிடம் வருந்தி,''கற்கள் நிறைந்த கானகத்தில் நடந்துவரும் துன்பத்தை உனக்குக் கொடுத்தேன். பொற்றோர்களுக்கும் துன்பத்தைக் கொடுத்தேன்; பொழுதைப் பயனின்றிக் கழிப்பவர்களோடும் காமுகர்களோடும் கூடித்திரிந்து பிறர் பழிச்சொல்லுக்கும் ஆளானேன் நல்லோர் கூறிய அறநெறி துறந்த எனக்கு நற்கதி உண்டா? பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமையையும் ஆற்றவில்லை. உனக்கும் துன்பம் செய்தேன்'' என்று புலம்புகிறான். மேலும் பரத்தமை தவிர பயனில பேசுவோருடன் பழகிப் பொழுதை வீணே கழித்துக் குன்றமன்ன வான்பொருள் தொலைத்துவிட்டதையும் கூறிவருந்துகிறான். இதனால், அவனைப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கண்ணகியும் குற்றம் சாட்டுகிறாள்.

கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு களவுப்பழி சுமந்து, அவன் உயிரிழக்கக் காரணமாக அமைகிறது. நற்குடிப்பிறப்போ, பெருஞ்செல்வமோ ஒழுக்கம் பிறழ்ந்தவனைக் காப்பாற்ற உதவாது என்பதைப் புலப்படுத்துவதாகக் கோவலனின் வாக்குமூலம் அமைகிறது. கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு அவன் இல்லறத்தைச் சிதைக்கிறது; பெற்றோரைத் துறவுக்குத் தள்ளுகிறது; மாதவியைத் தீக்குளிக்கச் செய்கிறது; கவுந்தியடிகளை வடக்கிருந்து உயிர்விடச் செய்கிறது, பாண்டியனைக் கொன்று மதுரையைத் தீக்கிரையாக்குகிறது. துனிமனித ஒழுக்கக் கேடு சமுதாயத்தைச் சீர்குலைக்கும் என்பதை கோவலனின் பாத்திரப்படைப்பு வாயிலாக இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார்.

**அரச நீதி:**

சிலம்பு, பல கருத்துகளைக் கூறினாலும் வழக்குரை காதை மூலம் மன்னர்களின் நீதி அரசிக்குரிய பொற்சிலம்பினைத் பதிவுசெய்கிறது. அரசிக்குரிய பொற்சிலம்பினைத் திருடினான் என்று குற்றம் சுமத்தப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டான். இச்செய்தி அறிந்த கண்ணகி, பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைச் சான்றுடன் மெய்ப்பித்தாள். பாண்டியன் தன் தவற்றை உணர்ந்து,

**பாண்டிய மன்னனிடம் நீதி கேட்கும் கண்ணகி:**

'யானோ அரசன் யானே கள்வன்'' எனக்கூறி உயிர்விட்டான். இச்செய்தியைச் செவிவழியாகக் கேள்விப்பட்ட சேரமன்னன்,'பாண்டிய மன்னன், தனது வளைந்துவிட்ட தனது செங்கோலை உயிரைத் துறந்து நேராக்கினான்' என்று கூறுகிறான். இதிலிருந்து, தமிழ் மன்னர்களின் நீதி தவறாத ஆட்சிமுறை புலப்படுகிறது.

மழை பொய்த்தாலோ, குடிமக்கள் தவறிழைத்தாலோ, மன்னனையே பழிப்பர், குடிமக்களைப் பசி, பிணி ஆகியவற்றினின்று பாதுகாத்தல், கொடுங்கோலன் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சியும் மன்னர்கள் ஆட்சி நடத்த வேண்டியிருந்தது என்பதை,

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்

(சிலப்பதிகாரம் - வஞ்சிக்காண்டம் - காட்சிக்காதை, 100 – 104)

என்ற சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன.

மணிமேகலை, அரசன் நீதி வழங்கும் முறையைப் பற்றிப் பேசுகிறது. மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமாரன், காயசண்டிகையின் கணவன் காஞ்சனனால் கொல்லப்படுகிறான். இதைக் கேட்ட உதயகுமாரனின் தந்தை,"அரசனது காவல் இல்லாமையால் மாமுனிவர் தவமும் மகளிர் கற்பும் இல்லையாகும், கன்றை இழந்த பசுவின் துயரத்தைப் போக்க, தன்மகனைத் தேர்க்காலில் இட்டு முறைசெய்த மனுநீதிச் சோழனின் மரபில் ஒரு தீவினையாளன் தோன்றினான் என்னும் இச்செய்தி, பிற வேந்தரின் காதில் புகுவதற்கு முன்பு உதயகுமாரன் உடலை ஈமத்தீயில் எற்றி விடுக" என்கிறான்.

மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்குவதே அறம் என்பதனை,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்
(மணிமேகலை, ஆபுத்திரனோடு
மணிபல்லவமடைந்த காதை: 227 : 230)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. உலகில் நடைபெறும் பல குற்றச் செயல்களுக்குப் பசிப்பிணியே காரணம் என்பதை உணர்ந்து அதைப் போக்குவதன் மூலம் குற்றச்செயல்களைத் தடுக்கமுடியும் என்பது, மணிமேகலையின் மையப்பொருளாகும். அரசனுக்கு நிகரான செல்வச்செழிப்பு மிக்க கோவலன் ஒழுக்கக்கேட்டினால் தானும் அழிந்து தன் கற்றத்தையும் அழிக்கிறான். 'கணிகைமகள்' எனச் சோழ மன்னனால் குறிக்கப் பெற்ற மணிமேகலை, ஒழுக்கத்தின் உயர்வினால் தன்னையும் வென்று, நாட்டையும் நல்வழிப்படுத்திச் சான்றோர் போற்றும் காப்பியத் தலைவி என்னும் உயர்நிலையை அடைகிறாள்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி (குறள் 137)

என்ற குறளுக்கு இலக்கணமாக இவ்விரு காப்பியங்களும் திகழ்கின்றன.

**சீவகசிந்தாமணி:**

தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம் சீவக சிந்தாமணி. இது சமண சமயக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுகிறது. திருத்தக்கதேவர் ஒரு சோலையில் நடந்த காட்சியின் மூலம் 'நிலையாமை' என்னும் கருத்தை விளக்குகிறார். கடுவன் ஒன்று பெண் குரங்கிற்குப் பலைப்பழத்தை நகத்தால் கீறிப் பிளந்து, நல்ல சுவைமிக்க களையைக் கொடுத்தது, அதனை மந்தி வாங்கியது. அந்நேரத்தில் இரண்டு குரங்குகளையும் அடித்துத் துரத்திவிட்டுத் தோட்டக்காரன் பலாப் பழத்தைப் பறித்துக்கொண்டான்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சீவகன், தன் தந்தை சச்சந்தனிடம் இருந்து கட்டியங்காரன் தங்களது நாட்டைப் பறித்துக் கொண்டதையும் அவனிடமிருந்து தான் தனது நாட்டை மீட்டதையும் நினைவுகூர்கிறான். மெலியவனிடமிருந்து வலியவன் நாட்டைக் கைப்பற்றுதல் தொடர்ந்து நடப்பதும் அரச அதிகாரமோ செல்வமோ நிலையான தல்ல என்ற எண்ணமும் அம்சமயத்தில் அவனுக்கு ஏற்பட்டு அரச பதவியைத் துறந்து விடுகிறான்.

அரசன், அமைச்சரைப் பலமுறை ஆராய்ந்து தெளிய வேண்டும்; பகையை வெல்லக் கருதினோன் உரிய காலமும் இடமும் வாய்க்கும் வரை தன் எண்ணத்தை வெளிப்படுத்தாமல் காத்திருக்க வேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம்வரின் அதைப் போக்க முயல வேண்டும்; தான் வருந்தும்படி நேரினும் தனக்குப் பகையல்லாதவரைச் சிறிதும் வருத்துதல் கூடாது; தாய் தந்தை சொல்லை மதித்து நடத்தல் வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருள் உடையவனாக இருத்தல் வேண்டும்; பாத்திரம் அறிந்து தானம் செய்தல் வேண்டும்; தீயவழிச் செல்வோரைக் காணின், இரங்கி உடனே அவரை நல்வழிப்படுத்த முயல வேண்டும் போன்ற அறச்செயல்களை விளக்கும் காப்பியமாகச் சீவக சிந்தாமணி திகழ்கிறது.

**வளையாபதி, குண்டலகேசி:**

"பொய் கூறாதீர்; புறங் கூறாதீர்; யாரையும் இகழ்ந்து பேசாதீர்; தீயவற்றைப் பேசி உடல் வளர்க்காதீர்; உயிர்க்கொலை செய்து அதன் ஊனை உண்டு உங்கள் உயிரை வளர்க்க எண்ணாதீர்; கள்வருடன் நட்புக் கொள்ளாதீர்; களவு கொள்ளாதீர்; எனப் பல அறங்களை வளையாபதி தொகுத்துக் கூறுகிறது.

இளமையும் நிலையானது அன்று; அனுபவிக்கும் இன்பமும் நிலையானது அன்று; செல்வமும் நிலையானது அன்று; நாள்தோறும் துன்ப வெள்ளமே மிகுதியாக உள்ளது, அதனால், இளமையும் இன்பமும் செல்வமும் நம்மிடம் உள்ளது எனக் கருத வேண்டா. உழவர்கள், தாம் விளைவித்த விளைச்சலில் ஒரு பகுதியை விதையாகச் சேமிப்பதுபோல மறுபிறவிக்கு நாள்தோறும் அறம் செய்ய வேண்டும். வாழ்க்கை நிலையில்லாதது, எனவே, அறம் ஒன்றே நிலைத்து நிற்கும் என்பதை வளையாபதி காட்டும் அறமாகும்.

நாம் தாயாரின் வயிற்றில் கருவாகி இருந்த நிலை முதற்கொண்டு பருவங்கள் பலவற்றைக் கடந்து மூப்படைகிறோம்; இறுதியில் இறக்கப்போகிறோம் என வாழ்வின் நிலையாமை குறித்து

பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
நாளும் நாள் சாகின்றோ மால்
நமக்கு நாம் அழாதது என்னோ

(குண்டலகேசி– 9)

என்ற குண்டலகேசி காப்பியப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

**கம்பராமாணயம்:**

சோழப் பேரரசு எழுச்சிபெற்ற காலத்தில் தோன்றிய காப்பியம் கம்பராமாயணம். தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரனைய மகனைப் பிரியும் தந்தை தசரதன், தந்தை சொல் தவறாமல் அரச பதவியைத் துறந்து காட்டுக்குச் செல்லும் இராமன்,முறை தவறிக் கிடைத்த அரசபதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடும் இளவலாகிய பரதன், நட்பிற்காக உயிரையும் துறப்பேன் என்று சொல்லும் குகன், விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழும் சபரி, பிரிவினும் பெருங்காடு சுடுமோ? எனக் கணவனைத் தொடரும் சீதை; அண்ணனைப் பாதுகாப்பதே தனது இலக்கு என வாழும் பாசமிக்க இளவல் இலக்குவன்; கொண்ட பணியை முடிக்க, கடலாயினும் மலையாயினும் எதையும் கடக்கத் தயாராகும் தொண்டுள்ளம் கொண்ட அனுமன் முதலான நற்பண்பாளர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண்இல் கேள்வி ஆகும் முதல் திண்பணை போக்கி, அருந்தவத்தின் சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து, போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

(கம்பராமாயணம்; பாலகாண்டம் (நகரப்படலம் : 75)

இங்குக் கல்வி என்னும் வித்து, முளைத்து மேலெழுகிறது; எண்ணற்ற பல நூல் கேள்வியாகிய கிளைகளைப் பரவச் செய்கிறது; அரிய தவமாகிய இலைகளோடு தழைக்கிறது; பல உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பாகிய அரும்புகளோடு அம்மரம் முகிழ்க்கிறது; அறச்செயல்களாகிய மலர்களோடு விளங்குகிறது; இன்ப அனுபவம் என்ற பழங்கள் பழுத்த மரமே அயோத்தி மாநகர் எனச் சிறப்பிக்கப்படுகிறது. கல்வியால் அடக்கம் - அடக்கத்தால் நல்வாழ்வு – நல்வாழ்வால் பொருள் - நல்வழியில் பெற்ற அப்பொருளால் அறம் அவ்வறத்தால் இன்ப அனுபவம் கிடைக்கும், கல்வியே அனைத்து அறத்திற்கும் அடிப்படை என்பது கம்பனின் உறுதிப்பாடு. இவ்வளவு சிறப்பு மிக்க அயோத்தி மாநகரில் பிறந்த இராமன் நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தவன்.

இராமாயணத்தில் இராவணன், பல நல்ல குணங்களைப் பெற்றவனாகக் காட்டப்படுகிறான். ஆவன் இசையில் வல்லவன், சிறந்த சிவபக்தன், தோள் வலிமை உடையவன், எட்டுத்திக்கு யானைகளுடன் போரிட்டு மார்பில் விழுப்புண் பெற்று வெற்றி கண்டவன், அதோடு தன் தனயன் செய்த தவற்றையும் இடித்துரைக்கத் தயங்காத துணிவு மிக்கவனாகச் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிரையும் துறக்கத் துணிந்த கும்பகர்ணனையும், தந்தை சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் போரில் ஈடுபடும் இந்திரஜித்து, மேகநாதன் போன்ற வீரமிக்க புதல்வர்கள் முதலானவர்களையும் தனது சுற்றமாகக் கொண்டவன்.

செல்வ வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் நாடும் கொற்றமும் கற்றமும் உடைய அவன், கெட்டு ஒழியப் பிறன்மனை நயத்தலாகிய அறமற்ற செயலே காரணமாகிறது.

**வில்லிபாரதம் காட்டும் அறம்:**

இந்திய மொழிகள் அனைத்திலும் காணப்படும் இதிகாசங்களுள் ஒன்று மகாபாரதம். வடமொழியில் வியாசர் இயற்றிய பாரதத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற மொழிகளில் பாரதக் கதைகள் இயற்றப்பட்டன. தமிழில் வழங்கப்படும் பாரதக் கதைகளில் வில்லிபுத்தூரார் பாரதமும் ஒன்று.

போட்டி, பொறாமை, சூது போன்ற அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர் தோல்வி அடைவர்; அதற்கு மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் நிற்போர் அறவழியில் வெற்றி பெறுவர். நன்மை வெல்லும் தீமை தோற்கும் என்பதை இதன் மையக்கருத்து, உறவினர்க்கு இடையே ஏற்படும் பொறாமைப் பண்பானது, வஞ்சகம், துரோகம் போன்ற இழி செயல்களுக்கு இட்டுச் சென்று போரில் ஈடுபட வைக்கிறது. அதுவே அழிவிற்குக் காரணமாக அமைகிறது. இதனை,

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்** (குறள் 168)

என்ற திருக்குறள் உணர்த்துகிறது.

எத்தனையோ இடர்ப்பாடுகள் வந்தபொழுதும் தருமன், அறத்தின் மீது மாறாப்பற்றையும் ஒற்றுமையின் வலிமையையும் நிலைநிறுத்துகிறான். பாண்டவர்கள் ஐவரும் வெவ்வேறு சூழல்களில் பிறந்தனர். இருப்பினும் சிறுவயது முதலே ஒற்றுமையாக வளர்ந்தனர். பலராலும் போற்றப்படும் நற்பண்புகள் உடையவரர்களாகத் திகழ்ந்தனர். பீமனது வலிமையானது அருச்சுனனது வில்லாற்றலாலும் வெற்றி பல கண்டனர். இதனால் பொறாமை கொண்ட துரியொதனின் சூழ்ச்சியால் சூதாட்டத்தில் தோற்றனர். ஆதனால், வனவாசத்திலும் மறைவாசத்திலும் துன்பப்பட்டனர். போர்க்களத்தில் தம் புதல்வர்களை இழந்தனர். இத்தகைய சூழல்களிலும் ஒற்றுமையாக இருந்து இறுதியில் வெற்றி பெற்றனர்.

திருதராட்டிரனின் நூறு புதல்வர்களும் கௌரவர்கள் ஆவர். அவர்களுள் மூத்தவன் துரியோதனன். தன் தீயகுணங்களால் துன்பத்திற்கு ஆளாகிறான். ‘‘தீங்கொரு வடிவமாம் திறன் சுயோதனன்’’ என்று துரியோதனனை, வில்லிபுத்தூரார் அறிமுகப்படுத்துகிறார். துரியோதனன் பாண்டவர்களிடம் சிறுவயது முதலே பகைமையை வளர்க்கிறான். இவன் பேராசையால் நாட்டைப் பாண்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. துரியோதனன், சூழ்ச்சி, வஞ்சம், பெண்மையை இழிவுபடுத்துதல், பெரியவர்களை அவமதித்தல் ஆகிய தீய குணங்களைப் பெற்றிருந்தான். எனவே, அழிவைச் சந்தித்தான். துாரியோதனன், விதுரன் உள்ளிட்ட சான்றோர்களின் அறிவுரைகளையும் தருமன், பீமனின் இடித்துரைகளையும் புறக்கணித்தான். பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், விதுரர் முதலிய சான்றோாகள் போர்க்களத்தில் துரியோதனன் பக்கம் நின்றனர். இருப்பினும் சகுனியின் கூடாநட்பின் காரணமாக அறமல்லாச் செயல்களில் ஈடுபட்டதனால் இறுதியில் தோல்வியையும் மரணத்தையும் தழுவினான்.

வில்லிபாரதம்,‘பொறுமை’ என்னும் அறத்தைத் தருமன் மூலமாக வெளிப்படுத்துகிறது. நடுநிலைமையாக அறவழியில் செல்லக்கூடிய பொய்மை கூறாத பண்புள்ளவனாகத் தருமன் திகழ்கிறான். அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டதாகப் பொய் உரைக்கும்படி கண்ணன் தருமனிடம் கூறுகிறான். இதை மறுக்கும் தருமன் இல்வாழ்க்கைத் துணை, சான்றோர்கள், நெருங்கிய உறவினர்கள்,அன்பு, நிலையான புகழ், மிகுந்த செல்வம், திறமை, அறிவு இவற்றால் கிடைக்கும் பொருட்கள், தவம், புண்ணியம் ஆகியன பொய் உரைப்பதால் அழிந்துவிடும் என்று கூறுகிறான் (பாடல் 3687).

கண்ணன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது செல்கிறான். அப்பொழுது விதுரனின் மாளிகையில் தங்குகிறான். அதற்கான காரணத்தைத் துரியோதனன் வினவ கண்ணன்,

……….. மதி அமைச்சர்
ஆய் அரசு அழிப்பினும்
குரவர் நல் உரை மறுக்கினும் பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும்
அவருடன் அழன்று பொர உன்னினும்
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்களே நரகில் எய்துவார்.

(வில்லிபாரதம் 2445)

என்று கூறுகிறான். ‘‘நல்லறிவுடைய அமைச்சராய் இருந்து அரசாட்சியை வேண்டுமென்றே கெடுத்தலும், சான்றோர் மொழியைப் புறக்கணித்தலும், பிறர் செய்த உதவியை மறுத்தலும், ஒருவர் வாழும் வீட்டில் உணவு உண்டு, அவருடனே சினந்து போர் செய்ய நினைத்தலும் ஆகிய இந்நான்கு

செயல்களையும் செய்பவர்கள் சூரிய சந்திரன் உள்ளவரை துன்பம் அனுபவிப்பர்'' என்று அவன் கூறும் விளக்கம் எக்காலத்திற்கும் பொருந்தும் அறமாகும்.

சூதாட அழைத்த துரியோதனனுக்கு மறுமொழியாகத் தருமன் சினம் கொள்ளுதல், மற்றவரின் குற்றங்களை எடுத்துக் கூறித் தூற்றுதல், ஒருவரிடம் முதலில் நட்புக் கொண்டு பின்பு அவரிடம் ஐயம் கொள்ளுதல், மிகக் கொடுமையான செயலான சூதாடுதலை விரும்புதல், கூறிய கூறிய உறுதிமொழியிலிருந்து தவறுதல் ஆகியன தீமை பயக்கும் எனக் கூறுகிறான். இதன் மூலம் சூதாடுவது பல தீயசெயல்களுக்கு நிகரானது என்பது தெளிவாகிறது. (பாடல் 1103).

**பார்த்தசாரதி:**

பாரதப் போரில் நெறிமுறைகளை மீறி, பாண்வர்களின் புதல்வர்களைக் கொன்ற அசுவத்தாமனிடம் துரியோதனன்,''பாலர் மகுடம் துணிந்தது இன்று என்ன வீரியம், என்ன நினைத்து இச்செயலைச் செய்தாய், எங்கள் குலக்கொழுந்துகளைக் கொன்று விட்டாய். எங்களுக்குத் தலைமுறை இல்லாமல் போயிற்று மற்றும் இது அறச் செயலும் அல்ல'' என்று கடிந்து கொள்கிறான். இதன் மூலம் போர்க்களத்திலும் அறம் பிறழா நெறிமுறை வலியுறுத்தப்படுகிறது (பாடல் 4301, 4302)

இவ்வாறு வில்லிபுத்தூரார் தம் காப்பியத்தில் கதை மாந்தர்கள், அவர்களின் கூற்றுகள் வாயிலாக அறக்கருத்துகளைக் கூறியுள்ளார்.

**தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்:**

**குகன்:**

கூடா நட்பிற்குக் கூனி, சகுனி, கட்டியங்காரன்; ஒழுக்கப்பிறழ்விற்குக் கோவலன், இராவணன்; பொறாமைக்குத் துரியோதனன், சூர்ப்பணகை, காந்தாரி; வழி தவறிய மகனை நல்வழிப்படுத்தத் தவறிய திருதராட்டிரன்; பெண்மையை இழிவுபடுத்திய துச்சாதனன் போன்ற பாத்திரங்கள் தீமையின் உருவகங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

இலக்கியங்கள் அறக்கருத்துகளைப் பெரும்பாலும் நேரடியாகப் பேசாமல் கதை மாந்தர்கள் மூலமோ, நிகழ்ச்சிப் போக்கிலோ உணர்த்திச் செல்கின்றன. இதன் காணமாகவே இலக்கியங்களும் அவை கூறும் நெறிமுறைகளும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுவிடுகின்றன.

**நிறைவுரை:**

சங்க இலக்கியங்கள் மனமொத்த தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் மேன்மையான அன்பை, உயர்ந்த இடத்தில் வைத்துத் போற்றுவதைத் தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மனித உறவுகளில் மிகவும் பெருமையுடையதாக நட்பு போற்றப்படுகிறது. மக்கள் வாய்மையைச் சிறந்த அறமாகக் கொண்டிருந்தனர் என்பதையும் மன்னர்கள் கொடை வள்ளல்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளைத் திருக்குறள் எடுத்து இயம்புகிறது.
சிலப்பதிகாரம், மன்னர்களின் நீதிநெறி வழுவாத சிறப்பினைப் பதிவு செய்கிறது. அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர், தோல்வியையே அடைவர் என்றும், மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் இருப்பவர், வாழ்க்கையில் அறவழியில் வெற்றி பெறுவர் என்றும் வில்லிபாரதத்தின் மூலம் அறிய முடிகிறது.

அலகு– 4

## தமிழர் கலைகள்

**நுழைவு வாயில்:**

- மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே கலைகளின் வெளிப்பாடுகள். தமிழர் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த, கலைகள் வாயில்களாக அமைந்தன. தொடக்க நிலையில், அவர்கள் மேற்கொண்ட ஒவ்வொரு தொழிலுமே கலையாக உருவெடுத்து, மணிமேகலைக் காப்பியம், கலைகளை அறுபத்து நான்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

- இப்பாடப்பகுதியில், கலைகள் பற்றி அறிமுகம், அழகுக் கலைகளின் வகைகள், காலந்தோறும் தோன்றிய புதிய கலைகள், அவற்றைத் தமிழர்கள் போற்றி வளர்த்த முறைகள் முதலான செய்திகள் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

- கலைகள் ஒரு நாட்டின் பன்முகப் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் விதமாகக் கலைகள் அமைகின்றன. தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன இதை 'ஆய கலைகள் அறுபத்து நான்கனையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' என்ற கம்பரின் கூற்று தெரிவிக்கின்றது. மனிதனின் வாழ்விற்குப் பயன்படும் அனைத்துமே கலைகள். இவை பொதுக் கலைகள், அழகுக் கலைகள் என இரண்டு வகைப்படும். காட்சி இன்பம், கேள்வி இன்பம் தருவன அழகுகலைகள், கட்டக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என அழகுக்கலைகளை ஐந்தாகப் வகைப்படுத்தித் தமிழறிஞர் மயிலை சீனி, வேங்கடசாமி கூறியுள்ளார்.

### கட்டடக் கலை (Architecture):

- தமிழகத்தில் உள்ள வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை தமிழகக் கட்டட கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் கோயில்களே காலத்தைக் கடந்து தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழகுற அமைப்பதற்கான 'மனை நூல்கள்' இருந்தன. இதனை 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

**மரக்கட்டடங்கள்:**

- பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம். மரக்கட்டடங்கள் இயற்கையினால் அழிந்துவிடும் தன்மை உடையன. இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும். ஆதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன. மரக்கட்டடங்களோடு களிமண் கட்டடங்களும் தோன்றின. களிமண் கட்டடங்களின் மேற்கூரைகள் மரத்தால் வேயப்பட்டு இருந்தன. பின்னர். மரக்கட்டடங்களும் களிமண் கட்டங்களும் சுடுமண்ணால் கட்டப்பட்ட உயர்ந்த கட்டங்களாக மாறின.

**செங்கல் கட்டடங்கள்:**

- சங்க காலத்தில் இருந்தே சுட்ட செங்கற்களால் ஆன கட்டங்களைத் தமிழகத்தில் காணலாம். செங்கற் கோயில்கள் மரக் கோயில்களைவிட உறுதியாகவும் நீடித்த தன்மை உடையனவாகவும் விளங்கின. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இருந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.

**குடைவரைக் கோயில்கள்:**

- பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும். இவை கருவறை, முன் மண்டபம், தூண்கள் என்ற அமைப்பைக் கொண்டிருந்தன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன், முதல் குடைவரைக் கோயிலை அமைத்தான். முற்காலப் பாண்டியர்கள் அமைத்த முதல் குடவரைக் கோயில் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் ஆகும். குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம்

போன்ற அமைப்பைப் பெற்றிருந்தன. எனவே 'மண்டபக் கோயில்கள்' என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் 'பாறைக் கோயில்கள்' என்றும் அழைக்கப்பட்டன.

- ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கற் கோயில்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவற்றை அமைக்க, பாறைகளை மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மாமல்லபுரத்தின் மகிசாசுரமர்த்தினி கோயிலின் முன் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ள ஒற்றைக்கல் கோயில் இதற்குச் சான்றாகும்.

**கற்றளிகள்:**

- கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் 'கற்றளிகள்' என்று பெயர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனமலை ஆகிய ஊர்களில் காணப்படும் கற்றளிகள் காலத்தால் முந்தியவை. பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கட்டடங்களில், பெரும்பான்மை கற்றளிகளாகவே இருந்தன. பிற்காலச் சோழர்கள் செங்கற்களால் ஆன பழைய கோயில்களைக் கற்றளிகளாக மாற்றினர்.

**திராவிடக் கட்டடக்கலை:**

- இந்தியக் கோயில் கட்டிடக்கலை நாகரம்,வேசரம், திராவிடம் என மூன்று வகைப்படும். சிகரத்தின் அமைப்பாது நான்கு பக்கங்களைக் கொண்டு சதுரமாக அமைந்திருந்தால் அந்த விமானம் நாகரம் எனப்படும். இதுவே, வட இந்திய கட்டடக்கலையாகும். சிகரம் வட்டவடிவமாக இருப்பின் அந்த விமானம் 'வேசரம்' எனப்படும். இவை, இந்தியாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள பௌத்த சமயக் கட்டக் கலையாகும். சிகரமானது எட்டுப்பட்டை அமைப்புடன் இருந்தால் அந்த விமானம் 'திராவிடம்' எனப்படும். திராவிடம் என்பது தென்னிந்தியக் கோயில் கட்டக் கலை ஆகும். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே குமரி வரை திராவிடக்கலை பரவியுள்ளது.

- மேலும், இக்கட்டடக்கலை இலங்கை, பர்மா, மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது. தமிழகக் கட்டடக்கலையை பல்லவர், பாண்டியர், சோழர். விஜயநகர, நாயக்கர் ஆகியோரின் காலகட்டத்தவை எனத் தனித்தனியாக வகைப்படுத்தலாம்.

- இந்துக் கோயில்களில் கர்ப்பக்கிரகம் என்னும் கருவறையின் மீது அமைக்கப்படும் பிரமிடு போன்ற கட்டடக்கலையை விமானம் என்பர். விமானத்தைப் பொதுவாக 'ஷடங்க விமானம்' என்பர். ஷடங்க விமானம் என்பது, ஆறு உறுப்புகளைக் குறிக்கும். ஆவை மனித உடலின் உறுப்புகளுடன் ஒப்புமையுடையவையாகும்.

1. ஆதிட்டானம் - பாதம்
2. பித்தி - கால்
3. பிரஸ்தரம் - தோள்
4. கண்டம் - கழுத்து
5. சிகரம் - தலை
6. ஸ்தூபி - மகுடம்

- விமானத்தின் மீது பெரும்பாலும் ஒரேயொரு கலசம் மட்டும் இடம்பெற்றிருக்கும். இவ்விமானங்கள் சோழர் காலத்தில்தான் மிக உயரமானவையாக அமைக்கப்பட்டன.

**கோபுரம்:**

- கோயில் உறுப்புகளில் மிக முக்கியமானதும் அழகுடையதுமாக விளங்குவது கோபுரம். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பர். இக்கோபுரம் சுற்றுப்புறச் சுவரில் ஊடறுத்துச் செல்லும் நுழைவு வாயிலின் மேல் கட்டப்பட்டதாகும். கோபுரத்தின் உச்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இடம்பெற்றிருக்கும்.

- கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கி, விஜயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்தது எனலாம்.

- இராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயிலில்தான் முதன் முதலாகச் சிறுகோபுரம் அமைக்கப்பட்டது. பல்லவர்களும், சோழர்களும் விமானத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் விமானங்களைச் சிறியனவாகவும் கோபுரங்களைப் பெரியனவாகவும் அமைத்தனர். கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில்தான் மிக உயர்ந்த கோபுரங்களை அமைக்கத் தொடங்கினார். இவர், காஞ்சிபுரம்,திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற இடங்களில் பெரிய கோபுரங்களை அமைத்தார். பிற்காலத்தில் இவை 'இராஜ கோபுரம்' என்று அழைக்கப்பட்டன.

**பல்லவர் காலக் கட்டடக்கலை:**

- பல்லவர்கள், காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழகத்தை முந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் மரம், சுதை, உலோகம், செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்கள் இன்றிக் காலத்தால் அழிக்க இயலாத குடைவரைக் கோயில்களை உருவாக்கினர்.

- மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், வல்லம், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய பகுதிகளில் பழைமையான பல்லவர் காலத்துக் கோயில்கள் உள்ளன. இவற்றில் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் மிகவும் தொன்மையானவை. மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. 'சாளுவன் குப்பத்தில்' உள்ள குகைக்கோயிலில் வெளிமுகப்பு முழுவதும் யாளியின் முகம் செதுக்கப்பட்டுள்ளது. இது குகைக்கோயில்களின் அமைப்பிலேயே வியக்கத்தகு வடிவை உடையது. இப்பகுதி, தற்காலத்தில் 'புலிக்குகை' என்று அழைக்கப்படுகிறது.

- பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் அமைத்ததோடு அன்றிக் கட்டடக் கோயில்களையும் எழுப்பியுள்ளனர். இவற்றுள், அழகும் தொன்மையும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில். இது ராஜசிம்மனால் கட்டப்பட்டது.

- பல்லவர்கள், தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் தென் பகுதியைப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். செழியன் சேந்தன் காலம் முதல் வீரபாண்டியன் காலம் வரை அவர்கள் தோற்றுவித்த குடைவரைக் கோவில்கள், ஒற்றைக் கற்றளிகள், கட்டக் கோயில்கள் ஆகியன பாண்டியர்கள் காலக் கட்டக் கலைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

- தமிழகத்தில் பாண்டியர்களின் குடைவரைக் கோயில்கள் சிற்பங்கள் மிகுந்து அழகுடன் காணப்படுகின்றன. பிள்ளையார்பட்டி, மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, திருமயம், குடுமியான்மலை, சித்தன்னவாசல், மகிபாலன்பட்டி, பிரான்மலை, அழகிய பாண்டியபுரம், மூவரைவென்றான் போன்ற ஊர்களில் பாண்டியர்கள்காலக் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.

- கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில் பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்குச் சான்றாகும். இது மலையின் மேலிருந்து கீழ்நோக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இது 'தென்னகத்து எல்லோரா' என்று அழைக்கப்படுகிறது. திருப்பத்தூர் திருக்கற்றளிநாதர் கோயில் பாண்டியர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

- தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் பொற்காலமாகும். விஜயாலயசோழன் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் வரையிலான மன்னர்கள், அழகு வாய்ந்த எண்ணற்ற கோயில்களை எழுப்பினர். செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களை எல்லாம் கருங்கற்களாலான கோயில்களாக மாற்றி அமைத்தனர். விஜயாலயசோழனால் கட்டப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தமலைக் கோயில் தனித்தன்மை வாய்ந்தது. இக்கோயிலின் வெளிச்சுவர் சதுர வடிவிலும் உட்சுவர் வட்ட வடிவிலும் உள்ளது.

- 'ஆதித்தசோழன்' காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினார். இக்கோயில்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. 'பராந்தகசோழன்' எழுப்பிய பிரம்மபுரீசுவரர் கோயில், எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் ஆகியன சோழர் காலக் கட்டடக்கலையின் எழிலையும் எளிமையையும் விளக்குவன. சோழர் காலக் கட்டடக் கலையில் 'செம்பியன்மாதேவியின்' பங்கு குறிப்பிடத்தக்கது. இவர் பாடல் பெற்ற பல தலங்களைக் கற்றளிகளாக மாற்றியமைத்துப் பெரும் பொருள்களை வழங்கினார். இராஜராஜசோழன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் 'தென்னகத்தின் மேரு' என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது. இக்கோயிலே தமிழகக் கட்டடக் கலையின்

மணிமகுடமாக விளங்குகின்றது. தஞ்சையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் கருங்கற்களே இல்லாத நிலையில் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டே 216 அடி உயரமும் 13 அடுக்குகளையும் கொண்ட விமானத்தை அமைத்து 'இராஜராஜேசுவரம்' எனப் பெயரிட்டார் இராஜராஜன், இதன் முதல் வாசல் கேரளாந்தகன் திருவாசல்' என்றும், இரண்டாம் வாசல் 'இராஜராஜன் திருவாசல்' என்றும் அழைக்கப்படுகின்றன.

- இக்கோயிலின் உச்சியில் உள்ள எண்கோண வடிவிலான சிகரம் 80 டன் எடை கொண்டது. இதனை, 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (The United Nations Educational, Scientific and Cultural Organization – UNESCO) உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

- இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அமைத்தார். இது 170 அடி உயரம் கொண்டது. இக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளங்குகின்றது.

**விஜயநகரப் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம்:**

- விஜயநகரப் பேரரசின் காலத்தில் தமிழகக் கட்டடக்கலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியாகவே விஜயநகரப் பேரரசுக் காலக் கட்டடக்கலை விளங்குகிறது. ஆனால் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் இக்காலக் கட்டடங்கலையின் சிறப்புக் கூறுகளாகும். இக்கோயில்களில், விமானங்கள் சிறியதாகவும் கோபுரங்கள் உயரமாகவும் உள்ளன. திருமண்ணாமலை, மதுரை, இராமேசுவரம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கோபுரங்கள் இக்காலத்தவையாகும்.

- நாயக்கர் காலக் கட்டடக்கலை விஜயநகரக் காலக் கட்டக்கலையைப் பின்பற்றியே எழுந்தது. நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் இவர்களின் தனிச் சிறப்பு,திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் ராமநாதசாமி கோயில் அயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலைமீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் அகியன இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழர் கட்டடக்கலையின் நெடிய வரலாறு தமிழர் தம் பழைமையையும் வளமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

**சங்ககாலம்**:

- நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நடுகல் என்பது, போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது 'வீரக்கல்' அல்லது 'நினைவுக்கல்' என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது, தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது. விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

- சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம் கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த கதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை 'மண்ணீட்டாளர்' என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேலையின் (28 : 37) மூலம் அறியலாம். பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சுமண சமயத்தில் அருகப் பெருமாளின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

**சிற்பங்கள்:**

- இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும். கல், கதை (சுண்ணாம்புக் காரை) மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. இவற்றைப் புடைப்புச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர். கல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும்.

- தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்ககாலச் சிற்பங்கள் மரத்தினாலும் கதையினாலும் செய்யப்பட்டவை. இப்பொழுதும் அத்தகைய சிற்பங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பெருமாள் முதலிய உருவங்கள் கதையினால் செய்யப்பட்டவை. கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை பல்லவர் காலத்திலும், உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை பிற்காலச் சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டன.

**பிரதிமைகள்:**

- தனிப்பட்ட ஒருவரின் உருவ அமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும். பிரதிமை உருவங்களில் பழைமையானது பல்லவ அரசர் உருவங்கள் ஆகும். உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர் காலத்தில் தோன்றியது.

**பல்லவர் காலம்**

- பல்லாவ் காலம், கோயில் சிற்பக்கலையின் தொடக்க காலம் எனலாம். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களில் உள்ள துவாரபாலகர்கள் என்று அழைக்கப்படும் வாயிற்காவலர்களின் உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன. இவையே தமிழகத்தில் காணப்படும் முதல் கற்சிற்பங்களாகும். இவர் காலத்தில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் மட்டுமே கற்களால் உருவாக்கப்பட்டவை. கருவறையில் உள்ள சிற்பங்கள் மரத்தாலோ சுதையாலோ செய்யப்பட்டிருந்தன. பல்லவர் காலத்தில் கடவுள் போலவே அரசன் அரசி உருவங்களையும் உயரமாகச் செதுக்கும் வழக்கம் இருந்தது.

- மாமல்லபுரத்தில் கோவர்த்தன மலை மண்டபத்தின் அருகில் 96 அடி அகலமும் 43 அடி உயரமும் கொண்ட பாறை உள்ளது. இப்பாறையின் இடையில் இயற்கையாகவே கீழ் நோக்கிய பள்ளம் காணப்படுகிறது. சிற்பிகள் இந்த இயற்கையான வடிவமைப்பைப் பயன்படுத்தித் தம் கற்பனையையும் கலந்து ‘பகீரதன் தவம்’ என்ற சிற்பத்தொகுதியாக வடிவமைத்துள்ளனர். கங்கை பூமிக்கு வர பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவமிருக்கும் காட்சியும், அந்தத் தவத்தின் பயனாகக் கங்கை பூமிக்கு வரும் நிகழ்வையும் அப்பாறைப் பகுதியில் வடிவமைத்துள்ளனர். இவர்கள் காலத்தில் புராணச்செய்திகளைச் சிற்பங்களாக வடிவமைத்துள்ளனர். நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. மலையின் கிழக்குப் பகுதியில் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலும் மேற்குப் பகுதியில் நரசிம்மப் பெருமாள் கோயிலும் உள்ளன. ஒரே மலையில் இரண்டு குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பு அம்சமாகும். இதன் சிற்பங்கள் நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடியவை. இங்குத் திருமாலின் பத்து அவதாரங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவாகள் காலத்து ஒற்றைக்கல் இரதங்கள், கோயில் சிற்பங்கள் போன்றவை தனித்துவமானவையாக உள்ளன.

**சோழர் காலம்:**

- பல்லவர் காலச் சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே சோழர் காலச் சிற்பங்களாக இருந்தன. பல்லவர் காலத்தில் தாழ்ந்த புடைப்புச்சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தவை, சோழர் காலத்தில் உயர்ந்த புடைப்புச்சிற்பங்களாகவும் முழு உருவச்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இச்சிற்பக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் மட்டுமின்றி கஜீராகோ, உதயபுரி, புவனேஷ்வர் ஆகிய பகுதிகளிலும் சிற்பக்கலை வளர்ந்த நிலையில் இருந்தது. ஊயரமான மகுடங்கள், மெல்லிய நெடிய உடலமைப்பு போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பாகும். பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் அணிகலன்களும்

அலங்காரங்களும் மிகுந்து காணப்பட்டன. மேலும், வட்டமான முக அமைப்பும் சற்று தடித்தும் குட்டையானதுமான உடல் அமைப்புகளுடனும் சிற்பங்கள் காணப்பட்டன.

- இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிரகதீசுவரர் கோயிலின் தெற்கு நோக்கி வாயிலின் கீழ்ப்புறம் புத்தரின் சிற்பமும் இக்கோயிலின் விமானத்தின் வலப்பக்கம் சமணர் உருவங்களும் உள்ளன. இக்கோயிலின் நந்தி சிற்பம் இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பமாகும்.

- இதன் உயரம் 12 அடி, நீளம் 19.5 அடி, அகலம் 8.25 அடியாகும். இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயிலில் நாயன்மார்களின் வாழ்க்கையைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ளன.

**செப்புத் திருமேனிகள்:**

- தமிழர்கள் உலகத்திற்கு வழங்கிய நன்கொடை, செப்புத்திருமேனிகள், சங்க காலத்திலும் உலோகச் சிற்பங்கள் இருந்திருக்கலாம் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். இருப்பினும் சோழர் காலமே உலோகச் சிற்பங்கள் அல்லது செப்புத்திரு மேனிகளின் பொற்காலம்.

- விஜயாலயன், பராந்தகன், செம்பியன், மாதேவி, முதலாம் இராஜராஜன் ஆகியோரது காலத்தில் செப்புத்திருமேனிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்தவம் கொடுக்கப்பட்டது. சோழர் காலச் செப்புத் திருமேனிகளுள் நடராஜர் சிலை உலகப்புகழ் வாய்ந்தது. சோழ அரசர்களும் அவர்களது குடும்பத்தாரும் கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகளைக் கொடையாகக் கொடுத்த செய்திகளைக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணலாம். பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலை என்பது, சோழர் காலச் சிற்பக்கலையின் தொடர்ச்சியாகவே இருந்தது. இவர்கள் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களையும் சிற்பங்களையும் செம்மைப் படுத்துவதிலும் கவனம் செலுத்தினர்.

**விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்:**

- விஜயநகர 'மன்னர்கள் கட்டடக்கலையில் கொண்டிருந்த ஆர்வம் சிற்பக்கலையிலும் வெளிப்பட்டது. கோபுரங்களிலும், கோயில் விமானங்களிலும் ஏராளமான சிற்பங்களை அமைத்தனர். உயர்ந்த தூண்களையுடைய மண்டபங்கள், அமைத்தல், மண்டபங்களின் தூண்களில் யாளி, குதிரை, மனித உருவங்கள், புராணத் தொன்மங்களை விளக்கும் சிற்பங்கள் போன்றவை விஜயநகர நாயக்கர் காலச்சிற்பங்களின் தனித்தன்மை. இவர்கள் காலச் சிற்பங்கள் இரும்பில் வார்த்தது போன்ற உறுதி உடையவை. விசயநகரச் சிற்பங்கள் மூக்குக் கூர்மையானதாகவும் வயிறு வட்டமானதாகவும் இருக்கும். முனித உருவச் சிற்பங்களில் அணிகலன்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே கோயில்களில் சிற்பங்கள் அதிக அளவில் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. வேட்டையாடுதல், கோலாட்டம், பாம்பாட்டி நடனம் போன்ற சிற்பங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தல் இவர்கள் கால வழக்கமாக இருந்தது. இத்தகைய சிற்பங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் போன்ற இடங்களில் காணலாம். தற்காலத்தில் மெழுகு, மணல், கண்ணாடி போன்றவற்றினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

**ஓவியக்கலை (Paintin):**

- கட்டடக்கலையும் சிற்பக்கலையும் போன்றே ஓவியக்கலையும் கண்ணால் கண்டு மகிழத்தகுந்த கலையாகும். அழகினைப் பாராட்ட, புலவர்கள் ஓவியத்தை உவமையாகக் கூறுவர். ஓவியக்கலை தொன்மையான வரலாற்றினை உடையது. இயற்கையோடு கலந்து வாழ்ந்த மக்கள், தாங்கள் கண்ட காட்சியினையும் வேட்டைக் காட்சிகளையும் வரைந்து மகிழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல், எழுத்துகளும் பல உருவங்களும் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் ஓவிய எழுத்துகளே வழக்கில் இருந்தன.

- 'ஓய்வு' என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம். ஓவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருத்தல் என்பது பொருள். இச்சொல்லிருந்து தோன்றிய ஓவு, ஓவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன. தான்கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம், மனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும். தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் முன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக்கொண்டனர். தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களாகக்

குகைகளில் தீட்டியுள்ளனர். பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு அவ்வோவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

- ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான் ‘‘சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை’’, சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும் என்ற பழமொழிகள் தோன்றின. வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் ‘புனையா ஓவியம்’ என்று பெயர். இதனை‘வரி வடிவ ஓவியம்’ என்றும் அழைப்பர். மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடிவ ஓவியமாகும். நெடுநல்வாடையில் முதன் முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி கிடைக்கின்றது. புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம்,‘முழுஓவியம்’ எனப்படும். ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

- காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத் திறனை உணரலாம். கீழடியில் நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

- மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன. தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பெரிய வீடுகள் போன்றவற்றின் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டன. மேலும் வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன. இவற்றின் மேல் பல வண்ணங்கள் தீட்டும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர். அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர். எழுத்து என்ற சொல்லுக்கு ‘ஓவியம்’ என்றே பொருள் கொள்வர்.

- பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள் அரண்மனைகளிலும் கோயில்களிலும் ‘ஓவியமாடம்’ என்ற தனிப்பகுதியை அமைத்தனர். இச்செய்தியினை இலக்கியங்கள் மூலம் அறியலாம். துலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் கலைகள் தழைத்து ஓங்கின. புனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான், நாட்டியமாடும் பெண்கள், சேரமான் பெருமாள் நாயனார், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது.

**பாறை ஓவியங்கள்:**

- தமிழகத்தில் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்கள், இந்நிலப்பகுதியின் தொன்மையைக் குறிக்கும் சான்றுகளாக அமைகின்றன. இவை மக்களின் கலைஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ள உறுதுணையாக உள்ளன. மலைப்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைச்சுவர்களின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்குகைகளின் சுவர்கள் கரடு முரடாக இருந்தபடியால் உமி, சாணம், களிமண் முதலான பொருள்களைக் கொண்டு பதப்படுத்திய சுதையைச் சுவர்களின் மேல் பூசினார்கள். பின்னர் அச்சுதைப் பூச்சின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்தான். அக்குகைக்கோயில் சுவர்களில் சித்திரங்களை எழுதுவித்தான். அவனே ஓவியக் கலையைப் பயின்றவன் என்பதை ‘‘சித்திரக்காரப்புலி’’ என்ற அவன் பட்டப்பெயரின் மூலம் அறியலாம். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மல்லபாடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியம் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து தமிழநாட்டின் பல இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்:**

- தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் புகழ் வாய்ந்தவை. இவை பொ.ஆ. 7 மற்றும் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் காலத்து ஓவியங்கள், இவ்வோவியங்கள் மூலிகைகளால் ஆன வண்ணங்களைக் கொண்டவை. சித்தன்னவாசலின் ஏழடிப்பட்டம் பகுதியின் மேல்கூரைப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

**சுவர் ஓவியங்கள்:**

- இலக்கியங்கள், சுவர் ஓவியங்களைப் பற்றிப் பெரிதும் பேசுகின்றன. உதயணனின் பள்ளியறைச் சுவர் ஓவியம் பற்றியும், கோப்பெருந்தேவியின் பள்ளியறைச் சுவர் ஓவியங்கள் பற்றியும் இலக்கியங்களில் காணலாம். பாண்டியன் நன்மாறன், தனது சித்திர மாடத்தில் இருந்த பொழுது உயிர் துறந்தமையால் ''பாண்டியன் சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன்'' என அழைக்கப்பட்டதைப் புறநானூற்றில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். நக்கீரரும் தமது நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திரமாடத்தைப் பற்றிக் கூறுகிறார். திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் ''ஏழு தொழில் அம்பலம்'' என்ற பெயரில் ஓவியச்சாலை இருந்த செய்தியினைப் பரிபாடலின் மூலம் அறியலாம். இங்கு இரதி, காமன், பூனை வடிவம் கொண்ட இந்திரன், அகலிகை, கௌதம முனிவர் முதலான ஓவியங்கள் இங்குக் காணப்பட்ட செய்தியினை இலக்கியங்களில் காணலாம். இந்த ''ஏழு தொழில் அம்பலம்'' பிற்காலத்தில் அழிந்தது. ஊதயணனின் பள்ளியறைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த காட்சியைப் பெருங்கதையில் காணலாம். திருச்சி மாவட்டத்தின் திருவெறும்பூர் கோயிலில் காணப்பட்ட சித்திரக்கூடம் பற்றிச் செப்பேடுகள் கூறுகின்றன.

- இவை மட்டுமின்றிச் செல்வந்தர் வீட்டின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. புத்த தவச்சாலைகள் மற்றும் கோவலனின் தந்தை மாசாத்துவான் தவமியற்றிய சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தியினை மணிமேகலை கூறுகின்றது.

**துகிலோவியம்:**

- 'படம்' என்ற சொல் 'படாம்' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. புடாம் என்பதற்குத் துணி என்று பொருள். பழங்காலத்தில் துணிகளில் ஓவியங்களை வரைந்தார்கள். அவற்றிற்குச் சித்திரப்படாம், சித்திரத்திரை என்ற பெயர். சித்திரம் எழுதும் கோலுக்குத் துகிலிகை என்று பெயர். மணிமேகலையில், சீத்தலைச் சாத்தனார் காவிரிப் பூம்பட்டினத்து உவவனம் என்னும் சோலையின் காட்சி சித்திரப்படாம் போன்று அழகுடன் காணப்பட்டது என்கிறார். தக்க நாட்டிலே ஆங்காங்கே தாமரைப் பூக்களும் தாமரை இலைகளும் அடர்ந்த குளங்களும் காணப்படும் காட்சியினைத் திருத்தக்க தேவர் வருணிக்கும் பொழுது, துணியில் எழுதிய தாமரைக்குளத்தின் காட்சியைப் போலக் காணப்படுகிறது என்கிறார். இளங்கோவடிகள் ஓவியம் வரையப்பட்ட துணியை 'ஓவியஎழினி' என்கிறார். பலவகைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. அவ்வாறு ஓவியம் வரையப்பட்ட பலகை 'வட்டிகைப்பலகை' எனப்பட்டது.

**தஞ்சாவூர் ஓவியங்கள்:**

- சோழர் காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தோற்றம் பெற்றன. மராட்டிய மன்னன் சரபோஜினின் காலத்தில் தஞ்சாவூரில் இது வளர்ச்சி பெற்றது. இவ்வோவியங்கள் தமிழகத்தின் புவிசார் குறியீடுகளில் ஒன்றாகும். இவ்வகை ஓவியங்கள் பெரிய மரச்சட்டத்தின் நடுவே அமைந்திருக்கும். இச்சட்டமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. கடவுளின் உருவங்கள் கித்தானின் பெரும் பகுதியை நிறைத்திருக்கும். மற்ற உருவங்கள் சிறிதாக அதன் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும். இதில் காணப்படும் ஓவியங்களின் உருவங்கள் உருண்டையாகவும் பருமனான அமைப்புடனும் காணப்படுகின்றன. இதன் உருவ அமைப்புகளில் பெண்தன்மை மிகுந்து நளினத்துடன் காணப்படும்.

- இவ்வோவியங்கள் நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய வண்ணங்களில் மைய ஓவியம் அமைந்திருக்கும். கரும்பச்சை, சிவப்பு, அடர்நீலம் போன்ற வண்ணங்களைப் பின்புலமாகக் கொண்டு காணப்படும். அடர்த்தியான கோடுகள் ஓவியத்தைத் தெளிவாகக் காட்டும் விதமாக அமைந்திருக்கும். இவ்வுருவக்கோடுகள் வண்ணங்களுக்கான எல்லையாகவும் அமையும்.

- பழங்கால மக்கள், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீது ஓவியம் வரைந்து மகிழ்ந்திருந்தனர். அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரங்கள்,கேடயம், கட்டில், வாள் போன்றவற்றில் ஓவியங்களை வரைந்தனர். தமிழின் நாற்கவிகளில் சித்திரகவியும் ஒன்றாகும். சித்திரகவி போலவே சித்திரநதி, சித்திரசபை, சித்திரதடாகம் எனப் பெயர் சூட்டியதில் இருந்து ஓவியத்திற்குத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறியலாம். தற்காலத்தில் எண்ணெய் ஓவியம், வண்ணக்கோல் ஓவியம், செயற்கை வண்ணக் கூழ்க ஓவியம், நீர் வண்ண ஓவியம், மை ஓவியம், பூச்சு ஓவியம், சூடான மெழுகு ஓவியம், நீரில் கரையும் எண்ணெய் ஓவியங்கள் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றன.

- தமிழர்களின் மிகத் தொன்மைகளுள் ஒன்று ஓவியம், எழுத்தால் உணர்த்தப்பட்ட இயலாத இடைவெளிகளை ஓவியங்கள் நிரப்பின. காலந்தோறும் ஓவியக் கலையிலும் வளர்ச்சிப்படி நிலைகள் உருவாகின. பாறை ஓவியங்களில் தொடங்கி இன்று பல்வேறு நாடுகளின் ஓவிய நுட்பங்களை உள்வாங்கிப் படிநிலை மாற்றம் பெற்று வளர்ந்துள்ளன.

**இசைக் கலை (MUSIC):**

- இயற்றப்பட்ட செய்யுளை உரிய ஓசையோடு இசைப்பதால் இதற்கு இசை என்று பெயர். எனவே, இசை என்னும் சொல் காரணப்பெயர் ஆகும். இவ்விசைக்கு அடிப்படையானவை ஒசை என்று கூறுவர்.

- ‘ஏழிசையேழ் நரம்பின் ஓசையை’ என்ற திருப்பதிகத்தொடர் மூலம் இசை ஏழு என்பதையும் இவை தனித்தனி நரம்புகளில் இசைக்கப்பட்டன என்பதையும் அறியலாம். குரல், துத்தம், கைக்கிளை, ஊழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு இசைகள் ஆகும். ஏழிசைகளுள் தாரம் என்னும் இசையே, இசை வளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

- மிடற்றினால் குரலும் நாவினால் துத்தமும் அண்ணத்தால் கைக்கிளையும் சிரத்தால் உழையும் நெற்றியால் இளியும் நெஞ்சால் விளரியும் மூக்கால் தாரமும் தோன்றுவதாக இசை இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்விசைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை ‘ஆரோசை’ எனவும் தாழ்ந்து செல்லும் இசைநிரலை ‘அமரோசை’ எனவும் சேக்கிழார் கூறிகிறார். ஆரோசை, அமரோசை ஆகியவற்றை இக்காலத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பர்.

**இசைக்கருவிகள்:**

- இசைக்கு உரிய கருவிகளைத் தோல்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்துவர்.

- பண்டைய நாளில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் குழலையும் யாழையும் கொண்டே ஏழிசைத் திறங்களை இசைத்துள்ளனர். இவை தனிச் சிறப்புடையனவாகக் கருதப்பட்டதைக் ‘குழலினிது யாழினிது என்ப’ என்ற வள்ளுவரின் தொடர் மூலம் அறியலாம்.

- இசைக் கலைஞர்கள் துளைக்கருவிகளில் தொன்மையானது குழலே ஆகும். இது புல் வகையாகிய மூங்கிலில் செய்யப்பட்டதால் வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைக்கப்பட்டது.

- முற்காலத்தில் மூங்கிலிலும் சந்தனம், கருங்காலி, செங்காலி ஆகிய மரங்களிலும் வெண்கலத்திலும் செய்யப்பட்டது. ‘வேய்ங்குழல்’ முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக் கருவியாக விளங்கியது.

- வில் நாணின் ஓசையைக் கேட்டு, அதன் இசை நுட்பத்தை உணர்ந்து, நாணின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இசை ஒலிகளை உருவாக்கினர். இவ்வாறு இசைகளைத் தரும் வில் பலவற்றை ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட நரம்புக்கருவியே,‘வில்யாழ்’ ஆகும்.

- ஆநிரைகளை மேய்க்கும் ஒருவன் குமிழமரக் கொம்புகளை வில்லாக வளைத்து அதில் மரல்நாரினை நரம்பாகக் கட்டி வில்யாழ் அமைத்துக் குறிஞ்சிப் பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இந்த வில்யாழை அடிப்படையாகக் கொண்டு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவையும் பெருங்கலம் என்னும் ஆதியாழும் அமைக்கப்பெற்றன.

- தொல்காப்பியர் கூறும் தோல் இசை கருவிகளில் ஒன்று பறை. இது தோல் இசைக் கருவிகளின் தாயாகவும் கருதப்படுகிறது.

- பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சிறுபறை, பெரும்பறை, நாழிகைப்பறை எனத்தோல் கருவிகள் முப்பது உள்ளதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறது. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தோல் கருவி மத்தளம் ஆகும்.

- இசைக்கும்போது மத்தளத்தை முதற்கருவியாகக் கொள்வர். இடையிடையே வாசிக்கச் சலிகை என்னும் கருவியைப் பயன்படுத்துவர். ஆதனால், இக்கருவியை இடைக்கருவி என்றும் சொல்வர்.

- முதலாம் - இராஜராஜசோழன் கட்டிய இராசராசேச்சுரக் கோயிலில் உடுக்கை வாசிப்பவரும் கெட்டிமேளம் வாசிப்பவரும் இருந்தனர் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**இசை நூல்கள்:**

- இறையனார் களவியல் உரை மூலம் முதுநாரை, முதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இசை நுணுக்கம் என்னும் நூல் சயந்தன் என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளார்.

- யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில், குலோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இசை தொடர்பான பல நூல்களின் பெயர் கிடைத்த போதும் அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப. சுந்தரரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

**இசைக் கலைஞர்கள்:**

- பாணர், பாடினி ஆகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர். பாணர், என்பவர், ஆண் இசைக்கலைஞர்; பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர்; இவ்விசைக் கலைஞர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர்.

- துளைக்கருவி வாசிப்போர்,தோல்கருவி வாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை கூறுகிறது.

- இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை 'யாழ்ப்பாணர்' என அழைத்தனர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. மண்டை எனப்படும் ஒட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

- இக்கலைஞர்கள் திருவிழாக்களிலும் அவைக்களத்திலும் பாடிப் பிறரை மகிழ்வித்தனர். தலைமக்களுக்கு இடையே தூதுவர்களாகவும் இருந்துள்ளனர்.

**சங்க இலக்கியமும் இசையும்:**

- சங்க காலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு இசைக்குப் பெயர்கள் சொல்லப்பட்டன. குறிஞ்சி நிலத்திற்குக் குறிஞ்சிப்பண், முல்லை நிலத்திற்குச் சாதாரி, பாலைக்குப் பஞ்சுரப்பண், நெய்தலுக்குச் செவ்வழிப்பண், மருதத்திற்கு மருதப்பண் என ஐவகைப் பண்கள் இசைக்கப்பட்டன.

- மலைச்சாரல் பகுதியில் விளைந்திருந்த தினைப்பயிரை உண்ணவந்த காட்டுயானை, அப்பயிரைக் காவல் காத்த பெண் இசைத்த குறிஞ்சிப்பண்ணைக் கேட்டுப்பயிரை உண்ணாமல் இசையில் மெய் மறந்து நின்றதை அகநானூறு கூறுகின்றது.

- போரில் புண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப்பண் பாடப்பட்டதாகப் புறநானூறு கூறுகிறது. யாழ் என்னும் இசைக் கருவிகளால் கலைஞர்கள் மருதப்பண்ணைப் பாடிப் பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. மேலும் அது ஆகுளி, முழவு என்னும் கருவிகளைக் கொண்டு செவ்வழிப்பண்ணை மாலைநேரத்தில் இசைத்தனர் என்பதையும் சுட்டுகிறது. இச்செவ்வழிப்பண்ணைக் கேட்டுத் தலைவனைப் பிரிந்த தலைவி மிகவும் வருத்தம் கொண்டாள் என்ற செய்தியும் உண்டு.

- நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களைத் தவிர காமரம், நைவளம் போன்ற பண்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன. வண்டின் ஓசைபோல் இருப்பது காமரம் என்று அழைக்கப்பட்டமைக்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.

- பரிபாடலில் வெறியாட்டப்பாடல், வள்ளைப்பாடல் முதலிய இசைப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடலை இசைப்பதற்குரிய பண்ணும் இசை வகுத்த இசைக் கருவிகள் போன்ற தகவல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**சிலம்பும் இசையும்:**

- இசை ஆசிரியன், மத்தளம் இசைக்கும் தண்ணுமை ஆசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது.

- இசையின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நடை, வாரம், கூடை, திரள் என இசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை, முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசைந டையை உடையது வாரம். சொற் செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

- அரங்கேற்றுக்காதை, ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, வேனிற்காதை, கடலாடுகாதை, புறஞ்சேரியிறுத்தகாதை முதலிய பகுதிகள் இசைக்குறிப்புகள் நிரம்பியவை. மேலும் யாழ் அமைப்பு, யாழ் இசையின் அமைப்பு முதலியனவும் கூறப்பட்டுள்ளன. மேலும், பெருங்காதை போன்ற காப்பியங்களிலும் இசை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

**பக்தி இயக்கமும் இசையும்:**

- செய்யுளைப் பண் அமைப்போடு படைப்பாளனே படைப்பது ஒருவகை, செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை. தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் 'பண் சுமந்த பாடல்' என்று கூறுகிறார். எனவே, இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைப்படுத்தியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எனலாம்.

- ஆநிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்டபொழுது காலையில் மேய்ச்சலுக்குப் போவதும் மாலையில் வீடு திரும்புவதும் வழக்கம். ஒருநாள் மாலைநேரம் வந்தவுடன் ஆநிரைகளும் எருமைகளும் வந்துவிட்டன. ஓர் எருமை மட்டும் காணவில்லை. தேடிப் பார்க்கிறார். கண்ணுக்குப் புலப்படவில்லை. எனினும், அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் கேட்கிறது. கனைப்பொலியைக் கேட்ட அவர், தன்கையில் இருந்த வேய்ங்குழலை எடுத்து ஊதி இசையை எழுப்பினார். அவ்விசையைக் கேட்ட அந்த எருமை இசை எழுப்பப்பட்ட இடத்திற்கு வந்து, மற்ற மாடுகளோடு சேர்ந்து வீடு அடைந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

- திருநாவுக்கரசர் திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று இறைத்தொண்டு புரிந்து வந்தார். அவ்வூரில் உள்ள சிவபெருமானை வணங்கச் சுந்தரர் ஒருமுறை செல்கிறார். திருநாவுக்கரசர் வந்துசென்ற அவ்வூரைத் தாம் காலால் மதிக்கக்கூடாது என எண்ணிய சுந்தரர் ஊருக்குள் போகாமல் ஊருக்கு வெளியே உள்ள 'சித்தவடமடத்தில்' தங்கி உறங்குகிறார். அப்போது சுந்தரர் தலைமீது சிவபெருமான் தன் பாதங்களை வைத்து அருள்புரிந்தார். சிவனின் இந்த அருளை எண்ணித் தம்மானையறியாத' என்னும் பதிகத்தைப் பாடினார் என்பது வரலாறு. இப்பதிகம் கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்ததாகும்.

- பின்னொரு தருணத்தில் திருவாரூரில் உள்ள சிவபெருமானைப் பற்றிப் பாடிய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். கொல்லிக் கௌவாணம், கொல்லிப்பண் ஆகிய இவ்விரு பண்களும் நள்ளிரவில் பாடப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார். இவை பழங்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பண்களோடு தொடர்புடையன.

- இப்பாடல்களும் இவற்றின் பண் அமைப்புகளும் மறையும் நிலையில் இருந்தன. அப்போது திருமுறைகண்டசோழன் யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியைக் கொண்டு அப்பாடல்களின் பழைய பண் அமைப்புகளுக்குப் புத்துயிர் அளித்தான். சில புதிய பண்களும் தோற்றுவிக்கப்பட்டன. இச்செய்தியைத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. இப்பண்களைக் கோவிலில் பாட ஓதுவார் என்னும் இசைக் கலைஞர்களையும் நியமித்தவனும் இம்மன்னனே. இவ்வோதுவார்களின் பணி இன்றும் தொடர்கிறது.

- முதலாம் மகேந்திரவர்மன் இசை, நாடனம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லவனாக இருந்துள்ளான். இம்மன்னனால் பொறிக்கப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டின் முடிவில் ‘எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய’ என்ற தொடர் உள்ளது. இத்தொடர் ‘சங்கீரணம்’ என்னும் இசையைப் பற்றிக் குறிப்பதாகும். தேவாரங்களில் காணப்படாத ‘சாளரபாணி’ என்ற பணி திருவிசைப்பாவில் உள்ளது.

- ஆனால், தேவாரங்களுக்குப் பண் வகுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இசையும் சேக்கிழார் காலத்தில் நிலவிய இசையும் சேக்கிழார் காலத்தில் நிலவிய இசையும் சாரங்கதேவர்’ குறிக்கும் தேவாரப் பண்களின் இசையும் இடைக்காலத்தில் தோன்றிய ‘இசைமரபு’ என்கிறார் வெள்ளைவாரணர்.

- கீர்த்தனைகள் என்ற இசைப்பாடல் வடிவம் பிற்காலத்தில் தோன்றின. கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலியோரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

- பண்டைய காலந்தொட்டே தமிழர்களின் வாழ்வியலோடு கலந்து இசைக்கலை வளர்ந்து வந்துள்ளது. சங்க காலத்துப் பாணர்களும், பாடினிகளும், விறலியரும் இசையை வளர்த்து வந்துள்ளனர். ஐவகை நிலப்பிரிவிற்கு யாழ், பண், பறை முதலியன அமைந்திருந்தன. சங்கம் மருவிய காலத்துத் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள். களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவினர். அற இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றின. இவை பெரும்பான்மையும் வெண்பா யாப்பிலேயே அமைந்தன. ஆனால் சங்க காலத்தில் வெண்பா யாப்பு வழக்கில் இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவற்றில் இசைக்கருவிகள் பற்றிச் செய்திகள் காணக்கிடைக்கின்றன. சோழர்காலக் காப்பியங்களும் நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்களும் தமிழோடு இசையையும் சுமந்து வந்து நால்வர் இசை மரபை உருவாக்கியது. இன்று பண்ணோடு இசைக்கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**நாடனக்கலை (Dance):**

- நடனக்கலை, ஆடல்கலை கூத்துக்கலை என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சில கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. ஆவை, வேலன் ஆடும் வெறிக்கூத்து, வீரர்கள் ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து, இளைய வீரனின் வெற்றியைப் பாராட்டி இருபாலரும் ஆடும் கழனிலைக் கூத்து போன்றவையாகும்.

- சங்க காலத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்கள் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தர் இனப் பெண்கள் விறலி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றும் கூத்தர் இன ஆண்கள் கூத்தன்,ஆடுமகன், ஆடுகளமகன் என்றும் அழைக்கப்பட்டனர். பண்டைய அரசர்கள் கூத்தர்களைப் பாராட்டிப் பரிசளித்தனர். அரசர்கள் விறலியர்க்குப் பரிசளித்த செய்தியினைச் கோவூர்க்கிழார், மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் நாடக மகளிர் என்னும் தொடர் நடன மகளிர், கூத்த மகளிர், விறலியர் என்னும் பொருளையே அளிப்பதாக மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

- நடனம் கற்கும் பெண் தனது 7 ஆம் வயது முதல் 12 ஆம் வயது வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடனக்கலைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நடனக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் தலைக்கோல் ஆசான் என்று அழைக்கப்பட்டார். இவர், வேத்தியல், பொதுவியல் என இருவகைக் கூத்துகளிலும் சிறந்தவராக இருத்தல் வேண்டும்.

- அடியார்க்குநல்லார் கருத்துப்படி கூத்து நான்கு வகைப்படும். அவை, சொக்கம், மெய்க்கூத்து, அபிநயம், நாடகம் என்பன. இதில் சொக்கம் என்பது இசையுடன் கூடிய தூய நடனம்.

- மெய்க்கூத்து என்பது இசையுடன் கூடிய அகம் சார்ந்த நடனம். ஆபிநயம் என்பது இசையுடன் கலந்த பாடலுக்கு ஏற்ற நடனம். நூடகம் என்பது இசையுடன் கதை தழுவி வரும் பாட்டிற்கான நடனம். ஆடல் என்பது எல்லா வகைக் கூத்துகளையும் குறிக்கும் என்கிறார் அடியார்க்குநல்லார்.

**ஆடல் வகைகள்**

**பதினோராடல்கள்**

நின்றாடல் (6)

அல்லியம்
கொடுகொட்டி
குடைக்கூத்து
குடக்கூத்து
பாண்டரங்கம்
மல்லியம்

வீழ்ந்தாடல் (5)

துடி
கடையம்
பேடு
மரக்கால்
பாவை

- சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்களை ஆடினாள். அவையாவன:
  1. அல்லியம்
  2. கொடுகொட்டி
  3. குடைக்கூத்து
  4. குடக்கூத்து
  5. பாண்டரங்கம்
  6. மல்லியம்
  7. துடி
  8. கடையம்
  9. பேடு
  10. மரக்கால்
  11. பாவை

என இவை தெய்வங்களால் ஆடப்பெறுவதால் 'தெய்வவிருத்தி' என்றும் அழைக்கப்படுகின்றன.

**முத்திரைகள்:**

- அகக்கூத்து, புறக்கூத்து எனக் கூத்து இரண்டு வகைப்படும். இருவகைக் கூத்துகளுமே ஆடல் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். நடனத்தின் பொழுது ஒரு கையினால் காட்டப்படும் முத்திரைகளும் இரு கைகளினால் காட்டப்படும் முத்திரைகளும் கூறப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை எனப் பகுக்கப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல் இரண்டும் புறக்கூத்தில் காட்டப்படுவன. எழிற்கை, தொழிற்கை இரண்டும் அகக்கூத்தில் காட்டப்படும் முத்திரை. இது 24 வகையாக அமையும். பிணையல் இரண்டு கைகளாலும் காட்டப்படுவது. இது 13 வகையாக உள்ளது.

| | | |
|---|---|---|
| அல்லியம் | : | கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல் |
| கொடுகொட்டி | : | சிவபெருமான் முப்புரத்தை எரித்த பொழுது வெற்றியில் கைகொட்டி ஆடிய ஆடல் |
| குடைக்கூத்து | : | முருகன் அவுணரை வென்ற போது ஆடிய ஆடல் |
| குடக்கூத்து | : | சிவபெருமான் முப்புரத்தை எரித்த பின்னர் நான்முகன் காணும்படி ஆடிய ஆடல் |
| பாண்டரங்கம் | : | கண்ணன் வாணன் என்னும் அசுரருடன் போர் செய்ததைக் காட்டும் கூத்து |
| துடி | : | சூரபதுமனை வென்ற பிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடியதைக் கூறும் கூத்து. |
| கடையம் | : | இந்திரன் மனைவி அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. |
| பேடு | : | காமன் தன்மகனான அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது |
| மரக்கால் | : | கொற்றவை தன்னை எதிர்த்து பாம்பு, தேளாக வந்த அசுரரைக் கொல்வதற்காக ஆடிய ஆடல் |
| பாவை | : | அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல் |

**நடன நூல்கள்:**

- நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து 'வந்த முறையின் வழிமுறை வழாமல்' என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து சிலப்பதிகாரக் காலத்திற்கு முன் நாட்டிய நூல்கள் இருந்தமை தெளிவாகின்றது. பதினோரு வகையான ஆடல்களும் அவற்றின் உறுப்புகளும் பாடல்களும் யாப்பருங்கலம் நூலின் உரையில் கூறப்பட்டுள்ளன. புரதம், அகத்தியம்,முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்து நூல் ஆகியன கூத்து பற்றிய நூல்கள் ஆகும். இவற்றில் பரதமும் அகத்தியமும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்தன. இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை.

**குரவைக்கூத்து:**

- மகளிரால் ஆடப்படுவது குரவைக்கூத்து, ஏழு முதல் ஒன்பது பேர் வட்டமாக நின்று கைகோத்து ஆடுவது. இது குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என இரு வகைப்படும். குன்றக்குரவை என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மகளிர் முருகனுக்காக ஆடும் ஆடல். ஆய்ச்சியர் குரவை முல்லை நிலத்தில் வாழும் மகளிர் திருமாலுக்காக ஆடும் ஆடல்.

**பல்லவர் காலம்:**

- பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ராஜசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

- காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் கூத்தன் கூத்தியர் உருவங்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தவரான சுந்தரர், நடன மாதரான பரவை நாச்சியாரை மணந்து கொண்ட செய்தியை இலக்கியங்களில் காணலாம். தில்லையில் உள்ள சிவபெருமான், 'கூத்தப்பெருமான்' என நாயன்மார்களால் பாடப்பட்டார். பல்லவர் காலத்தில் நடனமாதர் மாணிக்கத்தார்,கணிகையர் எனப்பட்டனர். அக்காலத்தில் காஞ்சிபுரம் முக்தீச்சுரர் கோயிலில் மட்டும் 42 நடன மாதர் இருந்தனர் என்ற செய்தியினை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. பல்லவர் காலத்தில் நடனம் வகித்த இடத்தை இவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

**சோழர் காலம்:**

- சோழர் காலம் கலைகளின் வளர்ச்சியால் பொற்காலமாகத் திகழ்ந்தது. ஐசவ வைணவ சமயங்கள் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. கோயில்கள் பெரும்பான்மை கற்கோயில்களாக மாற்றப்பட்டன. கோயில்களில் நடனம் உட்பட அனைத்துக் கலைகளும் வளர்க்கப்பட்டன. கோயில் கருவறைகளின் அடிப்பகுதியில் கூட, நடன வகைகள் செதுக்கப்பட்டிருந்தன. இதற்கு சிதம்பரம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் சான்று. இவர்கள் காலச் சிற்பங்களில் கூத்தியர் மட்டும் தனித்து நடனம் ஆடும்படியான சிற்பங்களைப் பெரிதும் காணலாம்.

- தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கருவறையின் புறச்சுவரில் நடன மாதர்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் நடனப் பெண்களின் கூந்தல் ஒப்பனை, உடை, இசைக்கருவிகள், முகப்பொலிவு, உருவ அமைப்பு ஆகியன நடனப் பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன. இராஜராஜ சோழன், தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் நிகழ்த்துவதற்காகப் பதியிலார் எனப்படும் நடனத்தில் சிறந்த பெண்களை நாடெங்கிலும் இருந்து தேர்ந்தெடுத்து வரச் செய்தான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்தான். இச்செய்தியினைத் தஞ்சைக் கல்வெட்டில் காணலாம். திருவிடை மருதூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி என்னும் ஊரில், சிறப்பாகச் சாக்கைக் கூத்தாடும் ஒருவருக்கு 'சாக்கை மாராயன்' என இராசேந்திரன் பட்டம் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**பிற்காலம்:**

- நாயக்கர் காலத்தில் கர்நாடக இசை வடிவம் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இக்காலத்தில் வடமொழி நடன நூல்கள் தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டன.

- மகாபாரத சூடாமணி, அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாசம், பரவராக தாளம், சுத்தானந்தப் பிரகாசம், ஆதிமூல பாரதம், பரத சாத்திரம், பரத சேனாபதியம் முதலிய மொழிபெயர்க்கப்பட்ட நடன நூல்களை மா. இராசாணிக்கனார் பட்டியலிடுகின்றார்.

- தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வரும் கலை பரதநாட்டியம். இசைப்பாட்டிற்கேற்ப அபிநயம் காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்படுவது. இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன. இவை, இளங்கோவடிகள் கூறுவதைப் போன்றே ஒரு கை முத்திரை, இருகை முத்திரை என இரண்டு வகைப்படுகின்றது. ஒரு கை முத்திரை இணையா வினைக்கை என்றும், பிண்டிக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இருகை முத்திரை இணைக்கை, இரட்டைக்கை, பிணைக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இம்முத்திரைகள் பரதத்திற்கு உயிர் போன்றவை. இம்முத்திரைகளைப் புரிந்துகொள்ளாமல் பரதத்தைச் சுவைத்து இன்புறுவது கடினமாகும். இவ்வாறு காலந்தோறும் தமிழகத்தில் நடனக்கலை தழைத்து வந்துள்ளது.

- மனித இனம் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்தே தங்களின் உணர்வுகளை நடனத்துடன் வெளிப்படுத்தி உள்ளனர். முற்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த நடனக்கலை பற்றிய செய்திகளை இலக்கியம் சிற்பம், ஓவியங்கள் மூலம் அறியலாம். தமிழர்களின் தொன்மைக் கலையான பரதம் பல வகையான முத்திரைகளையும் பாவங்களையும் உள்ளடக்கியது. இஃது உலகின் அதிக மக்களால் விரும்பிப் போற்றப்படும் கலையாகவும் உள்ளது.

**நாட்டுப்புறக் கலைகள் (Flok Art)**

- நாட்டுப்புற விளையாட்டுகள் என்பது, நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று. இவை நாட்டுப்புற மரபில் சிறப்பிடம் பெறுபவை. போலச் செய்தல், உடல்திறம் காணல், அறிவு வெளிப்பாடு, சமூக உறவு, வாழ்க்கைப் பயிற்சி, சிந்தனை ஆற்றல் முதலியவற்றை உள்ளடக்கிய இவ்விளையாட்டுகள் பண்பாட்டை வெளிப்படுத்துவன ஆகும். உடல்வலிமை, மனவலிமை ஆகியவற்றை நிலைநாட்டுவதே இவற்றின் முதன்மை நோக்கம். மரபு அடிப்படையிலும் இவ்விளையாட்டுகள் விளையாடப்பட்டுள்ளன. ஏறுதழுவுதல், ஓட்டப்போட்டிகள் முதலியன மரபு சார்ந்தவை. மரபு சார்ந்து ஆடப்படும் இவ்விளையாட்டுகள் வீரத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**தமிழக விளையாட்டுகள்:**

- விளையாட்டு என்பது விரும்பியாடும் ஆட்டு விளை – விருப்பம், ஆட்டு– ஆட்டம், தமிழர் மரபில் சிறப்பிடம் பெறுபவை விளையாட்டுகள். கெடவரல், பண்ணை ஆகிய இரண்டு வகையான விளையாட்டுகள் பற்றி

  கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல்.உரி. 21)

- எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. சிறுமிகளை விலங்குகளிடம் இருந்து காப்பது போல நடித்து விளையாடுவது கெடவரல் என்றும் உழவர்கள் பயிர் செய்வது போல நடித்து விளையாடுவது பண்ணை விளையாட்டு என்றும் தேவநேயப்பாவாணர் கூறுகின்றார். மகிழ்தலை நோக்கமாகக் கொண்டது விளையாட்டு. எண்வகை மெய்ப்பாட்டில் ஒன்றான உவகை, நான்கு வழிகளில் தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

  செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
  அல்லல் நீத்த உவகை நான்கே

  (தொல். மெய்ப்பாட்டில் - 255)

- தமிழக விளையாட்டுக்ள அனைத்துமே இரண்டு குழுவாகப் பிரிந்து விளையாடும் பொதுத் தன்மையைப் பெற்று இருக்கும். விளையாட்டின் வெற்றி தோல்வியின் காரணமாக யாரும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. விளையாட்டில் பிறருக்கு ஏற்படும் துன்பத்தையும், எதிர் அணியாக இருப்பினும் தம் துன்பம் போல் கருதுதல் வேண்டும். இது தமிழக விளையாட்டுகளுக்கான பொது விதியாகும்.

- பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படுகிறது. முதல் ஏழு பருவங்கள், ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்கள் விளையாட்டுகள் பற்றிக் கூறுகின்றது. சிற்றில், ஊசல் என்பன பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் ஆகும். சிறார்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது சிற்றில்; தெருவில் பறையடித்து

விளையாடுவது சிறுபறை; சிறு தேர் செய்து விளையாடுவது சிறுதேர் ஆகும். பெண்கள் இல்லத்தில் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மட்டுமே பெண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்டுள்ளன. அம்மானை என்பது, சிறுமிகள் வட்டமாக அமர்ந:து பாடல் பாடி விளையாடுவது, கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும். ஊசல் என்பது, சிறுமிகள் பாடல் பாடிக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதாகும்.

- பிள்ளைத் தமிழ் கூறுவதைப் போலவே தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளையும் ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெரும்பாலும் ஆண்கள் விளையாடுவன வீர விளையாட்டுகளாகவே உள்ளன.

**வீர விளையாட்டுகள்:**

- விளையாட்டு என்பதை உவகைச் சுவையில் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, விளையாட்டு என்பது, மகிழ்ச்சியைத் தரும் செயல் ஆகும்.
- வீர விளையாட்டு, உயிரை ஈடாக வைத்து ஆடப்படுகிறது. நாட்டுப்புற வீரவிளையாட்டாக ஏறுதழுவல், சிலம்பாட்டம், சடுகுடு, இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல் எனப் பல விளையாட்டுகளைச் சுட்டலாம்.
- இவ்வகை விளையாட்டுகள் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர். முதல் வகைக்கு ஏறுதழுவலையும் பாரிவேட்டையும் சான்றாகச் சுட்டலாம். சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்றுகளாகும்.
- மன எழுச்சி, குறிக்கோளை அடைதல், தன்னிலை நிறுத்துதல், குழு மனப்பாங்கு, நட்புறவு, உடல் நலம் பேணுதல் போன்ற பண்புகளை விளையாட்டுகள் வளர்க்கின்றன. அவற்றை நம் முன்னோர்கள் உணர்ந்து வாழந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகளாக நம் வீர விளையாட்டுகள் உள்ளன.

**ஏறுதழுவுதல்:**

- மஞ்சுவிரட்டு அல்லது ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்விளையாட்டு, பண்டைக் காலம் முதல் உள்ளது என்பதை அறியலாம். வீரத்தை வெளிப்படுத்தும் இவ்விளையாட்டுகளுள் இது முதன்மையாகக் கருதப்படுகிறது.
- காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து அடக்குவது சங்க கால முறை. கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவதும் உண்டு. நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் வைத்துக் கட்டிவிடும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. நாணயத்தைச் சல்லி என்று கூறுவர். ஆதனால் இவ்விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் அழைப்பர்.
- வாடி வாசல், திட்டி வாசல் முதலான பகுதிகளைக் கொண்ட இவ்விளையாட்டு வேலி மஞ்சுவிரட்டு, வாடிவாசல் மஞ்சுவிரட்டு, வடம் மஞ்சுவிரட்டு என வட்டாரத்திற்கு ஏற்றாற் போல் நடத்தப்படுகின்றது.
- சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். அம்மை. வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.
- இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளையைச் சல்லிமாடு என்றழைப்பர். இக்காளையைக் கன்றுப் பருவத்திலிருந்தே சிறு துண்டினைக் காட்டிப் பாய்ச்சலுக்குப் பழக்குவர். இச்செயல் ‘உரி காட்டுதல்’ என்று அழைக்கப்படுகிறது.
- ஏறுதழுவல் விளையாட்டுக்குக் காளையைப் பலவகைகளில் ஒப்பனை செய்வர். கால், கழுத்து முதலிய பகுதிகளில் சலங்கைகள் கட்டப்படும். நெற்றியில் காசுமாலையும் கொம்பில் சிறுவளையமும் அணியப்படும். திமில் பகுதியில் வண்ணப் பொட்டு இட்டும் ஒப்பனை செய்யப்படும். இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் சல்லிக்கட்டுத் துணியை மீட்பவரே வெற்றி பெற்றவராவர்.

**சிலம்பாட்டம்:**

- தமிழர்களுடைய நாட்டுப்புறக் கலைகளில் சிலம்பாட்டமும் ஒன்றாகும். சிலம்பு என்னும் சொல் பலபொருள் குறித்த ஒரு சொல்லாக உள்ளது. இங்கு இச்சொல் கம்புகளைக் குறித்து நிற்கிறது. கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பு எனப்பெயர். கம்புகளின் ஒலியைத் தவிர இரும்பு ஆயுதங்களின் ஒலியும் இவ்வாட்டத்தின்போது எழுப்பப்படும்.

- நேர்த்தியாகக் கம்புகளைக் சுழற்றினால்தான் எதிரியை வீழ்த்த இயலும் என்பதால் போர் முறைகளுக்கு உரிய சில விதி முறைகளும் சிலம்பாட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

- உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டது சிலம்பாட்டம். நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

- கம்பை வேகமாகச் சுழற்றுவதிலும் முன்பின் திரும்பி ஆடுவதிலும் கலை நயத்தைப் புகுத்தி உருவெடுக்கிறது இச்சிலம்பாட்டம் இவ்வாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப்படுகின்றன. உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்கு தட்டுவர்மச் சுவடு என்று பெயர்.

- இதில் அடிச்சுப்பிரிவு, பூட்டுப்பிரிவு ஆகிய விளையாட்டு முறைகளும் உள்ளன. ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும் அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப்பிரிவு ஆகும். ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும் அப்பூட்டிலிருந்து பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் பூட்டுப்பிரிவாகும்.

- குமரி மாவட்டத்தில் சிலம்பாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களில் சிலம்பாட்டம் ஆடி மகிழ்வர். அப்பகுதியில் சிலம்படி ஆசான்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது இச்சிலம்பாட்டம் ஆகும்.

**சடுகுடு**

- பசுவைக் கவர்ந்து வருவதும் கவர்ந்து வந்த பசுக்களை மீட்டு வருவதுமான வெட்சி, கரந்தை ஆகிய திணைகளில் வரும் போர் முறையின் தொடர்ச்சியாகச் சடுகுடுவைக் குறிப்பர். இவ்விளையாட்டு, பாண்டிய நாட்டில் குட்டி என்றும் சோழ நாட்டில் பளிச்சப்பிளான், பலீன் சடுகுடு என்றும் தென் சோழ நாட்டில் சடுகுடு என்று அழைக்கப்படுகிறது.

- மூச்சுப் பிடித்துக் கொண்டு பாடிச் சென்று மீள்வதும் பாடி வருபவரைப் பலரும் சூழ்ந்து விடுவித்துக்கொள்வதும் இவ்விளையாட்டின் திறம் ஆகும். மூச்சுப்பிடிப்பதைப் பாட்டம் என்று அழைப்பர். பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுபவன் என்று சொல்வது உண்டு. பாடிச் செல்லும்போது தனி வீரமும் பிடிக்கும் பொது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.

- பிடிபட்டவரை விலக்காமலே பிடிபட்டவரின் எண்ணிக்கையை மட்டும் ஆட்ட இறுதியில் கணக்கில் கொள்ளும் ஆட்டத்தைச் சஞ்சீவி ஆட்டம் என்றும் பிடிபட்டவரைக் கடைசிவரை சேர்க்காமல் ஆட்டத்தை முடித்துக்கொள்வதை ஆடாது ஒழியும் ஆட்டம் என்றும் கூறுவர்.

- இவ்விளையாட்டில் இடைக்கோடு மட்டும் போட்டு விளையாடும் பழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது. பின்கோடு, பக்கக்கோடு, நடுகோடு முதலான அரங்க அமைப்பில் விளையாட்டு பழக்கம் கொங்கு நாட்டில் காணப்படுகிறது.

**இளவட்டக்கல்:**

பண்டைய மனிதன் குகைகளில் வாழ்ந்தபோது கல்லைத் தூக்குதல், நகர்த்துதல் முதலிய பழக்கங்கள் நாளடைவில் வாழ்க்கையோடு இணைந்த பழக்கங்களாக மாறியிருக்கலாம். பின் நாகரிக வளர்ச்சியில் உடல் திறனை வெளிப்படுத்தும் விளையாட்டாக அவை மாறியிருக்கலாம் என்பர்.

இவ்விளையாட்டு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக ஆடப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆட்டமாக மாறியிருக்கிறது. திருவிழாக்களின்போது ஊர்ப்பொது இடத்தில் இது நடத்தப்படும்.

இவ்விளையாட்டில் கலந்துகொள்பவர் இளவட்டக் கல்லைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துப் பின் கீழே போட வேண்டும். அப்படிச் செய்பவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர். இப்போட்டிக்குக் கிராமத்துப் பெரியவர்கள் நடுவராக இருப்பர்.

முணமகனாக வருபவருக்குப் பொன். பொருள் போன்ற ஆடம்பரப் பொருள்களைவிட உடல் திறன் இன்றியமையாதது என்பதை இவ்விளையாட்டு வெளிப்படுத்துகிறது எனலாம்.

**உரிமரம் ஏறுதல்**

பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே உரிமரம் ஏறுதல் என்று அழைக்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்கு எல்லா மரங்களையும் பயன்படுத்துவது இல்லை. கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும் உதியமரத்தை மட்டுமே பயன்படுத்துவர். பட்டை உரிக்கப்பட்ட மரம் வழுவழுப்பாக இருக்கும். ஏற்கெனவே வழுவழுப்பாக இருக்கும் அம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுப்பானதாக மாற்றப்படும். இவ்வாறு மாற்றப்பட்ட மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளையும் கட்டி நட்டுவிடுவர். இம்மரத்தில் ஏறி உச்சியில் இருக்கும் பரிசுப் பொருளைக் கைப்பற்றுபவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

செங்குத்தான பாறைகள் மீது ஏறுதல், வழுக்குப்பாறைமேல் ஏறுதல் முதலிய பயிற்சிகளை உடையவர்கள், மலைவாழ் மக்கள் ஆவர். இவர்கள் சமவெளிப் பகுதியில் வாழ நேர்ந்தபோது இப்பயிற்சிகள் அவசியமில்லாமல் போகவே விழாக்காலங்களில் உடல்திறனை வெளிப்படுத்தும் வீரவிளையாட்டாக இது மாறியது. இவ்விளையாட்டு மதுரை மாவட்டத்தில் பரவலாக விளையாடப்படுகிறது. தற்போது பெரிய இரும்புக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளும் வீர விளையாட்டுகளாகவே கருதப்படுகின்றன. கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி, நட்சத்திர விளையாட்டு, திரிகுத்து, பொம்மைச்சீட்டு, மூணு கட்டை, பானை உடைத்தல், உறிப்பானை விளையாட்டு போன்றவை இவ்விளையாட்டுகள் ஆகும்.

**கில்லி:**

இவ்விளையாட்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டில் ஒன்றாகும். இதைச் சிறுவர்களும், ஆடவர்களம் விளையாடுவர். இது கில்லி, புல்லுக்குச்சி, கில்லி தாண்டு, சில்லாங்குச்சி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிறிய குச்சி கில்லி எனவும் பெரிய குச்சி தாண்டல் எனவும் கூறப்படும். இவ்விளையாட்டில் குறைந்தது இருவர் இருப்பர். விளையாடுவோர் அதிகமாக இருப்பின் அணியாகப் பிரிந்து விளையாடுவர்.

இவ்விளையாட்டில் இரண்டு குச்சிகள் பயன்படுத்தப்படும். ஒரு முழம் நீளத்தில் ஒரு குச்சியும் ஒரு சாண் நீளத்தில் மற்றொரு குச்சியும் இருக்கும். சிறிய குச்சியின் இரண்டு முனையும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். பெரிய குச்சியின் ஒரு முனை மட்டும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். நிலத்தில் இரண்டு விரல் இடை அளவிற்குச் சிறிய பள்ளம் பறிக்கப்படும். அப்பள்ளத்தின் நடுவில் குறுக்காகக் கில்லி வைக்கப்படும். இவ்வாறு வைத்த குச்சியைப் பெரிய குச்சியைக் கொண்டு தள்ளிவிடுவர். தள்ளிவிடப்படும் கல்லியை எதிர் அணியினர் எவரும் பிடித்துவிட்டால், கல்லி தள்ளுபவர் விளையாட்டில் தோற்றவராவர் அல்லது கில்லி வைக்கப்பட்ட குழியிலிருந்து தாண்டி மிதிக்கும் தொலைவில், கில்லி விழுந்திருந்தாலும் விளையாட்டில் தோற்றதாகக் கருதப்படும். கில்லி விழுந்த இடத்திலிருந்து எதிர் அணியினர் கில்லியைப் பறிக்கப்பட்ட குழியை நோக்கி எறிவர். ஆந்தக் கில்லி குழியில் விழுந்தாலும் எதிர் அணியினர் தோற்றவர் ஆவர். இதன் பின்பு கில்லி மூன்று முறை அடிக்கப்படும். அதன் தொலைவு கில்லிக் குழியிலிருந்து தாண்டலால் அளவிடப்படும். அதுவே அவ்வணியினர் எடுக்கும் புள்ளிகளாகும்.
இவ்விளையாட்டை விளையாடப் பரந்த திடல் வேண்டும். மேலும், இதுபோன்ற பலவிளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தார்கள். அவை, கோலி, பேந்தா, அஞ்சல குஞ்சம், நொண்டி விளையாட்டு, சில்லி, தாயம், பரமபதம், ஆடுபுலியாட்டம், பூப்பறித்தல், பாண்டியாட்டம், அச்சாங்கல், கண்ணாம்மூச்சி, பல்லாங்குழி போன்றவையாகும்.

**பச்சைக்குதிரை:**

இவ்விளையாட்டு, சிறுவர்கள் ஒத்த பருவத்தினரோடு நிலா வெளிச்சத்தில் விளையாடும் விளையாட்டாகும். இதன் முதல்படி பிறருடைய காலைத் தாண்டுவதில் தொடங்கும். அதனால், இந்த விலையாட்டைக் கால்தாண்டு விளையாட்டு என்று அழைப்பர். குனிந்து இருப்பவர் படிப்பாடியகத் தம் நிலையை உயர்த்துவதால்,தாண்ட வேண்டிய உயரம் கூடிக் கொண்டேபோகும்.

**கால்தாண்டல்:**

ஒரு கால் பாதம், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கால் பாதம், இரண்டு பாத உயரத்தின் மேல் ஒரு சாண், இரண்டு பாத உயரத்தின் மேல் இரண்டு சாண் எனக் கால் தாண்ட வேண்டிய உயரம் உயர்ந்து கொண்டே போகும்.

**ஆள்தாண்டல்:**

கால் தாண்டலுக்குப் பின் ஆள்தாண்டல் நடைபெறும். இதில் குனிந்துகொண்டு நிற்பவரை, அவர் முதுகில் கையை ஊன்றித் தாண்ட வேண்டும். குனிந்து கொண்டு நிற்பவர் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு குனிந்திருக்க வேண்டும். தலையை உயர்த்தினால் தலையைத் தட்டிக் குனியச்செய்வர். தாண்டுபவர் தம் இருகால்களையும் அகற்றி ஒரு கால் அவரது தலையையும் மற்றொரு கால் அவரது இடுப்பையும் தாண்டி வருமாறு தாண்டுவர். தாண்டுபவர் ஓடி வந்து தாண்ட இயலாது.
கால் கட்டை விரலைப் பிடித்துக் கொண்டு நிற்றல். கணுக்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல் (கரண்டை), முழங்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல் (மோளி), தொடையைப் பிடித்துக் கொண்டு நிற்றல், கைகளைக் கட்டிக் கொண்டு அல்லது கும்பிட்டுக் கொண்டு குனிந்து நிற்றல் என ஆள் தாண்டியின் உயரம் படிப்படியாக உயரும்.

**குனிதல்:**

தாண்டுபவர், தாம் தாண்டி முடிந்த பின்னர், பிறர் தாண்டுவதற்காக முறைப்படி அனுமதிக்க வேண்டும்.

**தவறியவர்:**

ஒருவர் எந்த நிலையில் தாண்ட இயலவில்லையோ, அந்த நிலையிலிருந்து தாண்டும் வாய்ப்பை இழப்பார். எனினும், அவர்பிறர் தாண்டுவதற்குக் குதிரை ஆகி நிற்க வேண்டும்.

**நிறைவுரை:**

தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன என்பதை 'ஆயகலைகள் அறுபத்து நான்கு'' என்ற கம்பரின் கூற்றின் மூலமாக அறிய முடிகிறது. இக்கலைகளுள் 'ஐந்தினை மட்டும் அழகு கலைகள் அல்லது நுண்கலைகள் என்பர். பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களே தமிழகக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்ந்தன என்பதை அறியமுடிகிறது.

தமிழகத்தில் மிக உயரமான விமானம் சோழர் காலத்திலும், மிக உயர்ந்த கோபுரம், விஜயநகர காலத்திலும் நாயக்கர் காலத்திலும் கட்டப்பட்டுள்ளன என்பதை கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

சிற்பக் கலையின் வகைகளையும், சிற்பங்கள் வடிக்கப் பயன்படுத்திய பொருள்களையும் அறியமுடிகிறது. கதைச் சிற்பங்கள் முதலில் தோன்றின என்பதையும் பல்லவர் காலத்தில் நளினத்துடன் கூடிய அழகிய சிற்பங்களும், நாயக்கர் காலத்தில் யானை, குதிரை போன்ற புராணத் தொன்மயங்களும் வடிக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

பழங்கால ஓவியங்களையும், ஓவியத்தின் சிறப்புகளையும் அவர்கள் பயன்படுத்திய வண்ணங்களையும் காலந்தோறும் ஓவியங்கலையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளையும் காண முடிகிறது.

மனித வாழ்க்கையில், இசை இரண்டறக் கலந்துள்ளது என்பதையும் இசைக்கருவிகளின் வகைகளையும், இசை நூல்களின் வகைகளையும் இசைத்தூண்கள் பற்றியும் தமிழர் கலைகள் வாயிலாகக் கண்டறிய முடிகிறது. நாட்டுபுறக் கலைகளுள் நாட்டுபுற விளையாட்டுகளின் பழைமையையும் பெருமையையும் அறிய முடிகிறது.

## அலகு 5
## திருவிழாக்கள்

**நுழைவு வாயில்**

- விழாக்கள் என்பவை, சமுதாயத்தின் கூட்டுச் செயல்பாட்டையும் வளத்தையும் காட்டும் குறியீடுகள். தமிழரின் விழாக்கள் பலவகையாகக் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள் பண்பாட்டு மரபுகளையும் பாரம்பரிய அடையாளங்களையும் விளக்கும் வகையில் உள்ளன. இப்பகுதியின் வாயிலாக, விழாக்கள் மக்களின் அறநெறிவாழ்வுக்கு உதவுகின்றன என்பதை அறியலாம்.

- திருவிழா என்பது, மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் நிகழ்வே ஆகும். திருவிழாக்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடப்பட்டாலும் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே முதல் நோக்கமாகும். இவ்விழாக்களை இயற்கை சார்ந்தவை, இனம் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

- மக்கள் பருவகால மாறுபாடுகளுக்கு ஏற்ப விழாக்களைக் கொண்டாடினர். இவ்விழாக்கள் இயற்கை சார்ந்தவை. ஓர் இனத்தின் அடையாளம் மற்றும் வழிபாட்டு நெறிமுறைகளுடன் கொண்டாடப்படும் விழாக்கள் இனம் சார்ந்தவை. கோயில்களில் நாள்தோறும் வழிபாடுகள் நடத்தாலும் ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வழிபாடே ”திருவிழா“ என்று அழைக்கப்படும். கோயில் சார்ந்த விழாக்கள் அனைத்து மக்களுக்கும் பொதுவானவையாகும். திருவிழாக்கள், சமுதாயத்தின் பண்பாட்டையும் மரபையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, விழாக்கள் ஒருமைப்பாட்டு உணர்வினை வளர்ப்பதற்கும் வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கும் பயன்படுகின்றன. ஆகவே, விழாக்களின் சிறப்புகளைத் தெரிந்து கொள்வதும் இன்றியமையாததாகிறது.

- திருவிழாக்களைப் பொதுவாகச் சிறியவர் முதல் பெரியவர் வரை ஆர்வத்துடன் வரவேற்கின்றனர். திருவிழாக்கள் ஓர் இடத்தில் வாழும் மக்களின் நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவை, மதம் சார்ந்தவையாகவோ ஏதேனும் நிகழ்ச்சிகளை நினைவுகூர்வனாவாகவோ இயற்கைக்கு நன்றி செலுத்துவனவாகவோ கொண்டாடப்படுகின்றன. இந்நாள்களில், வெளியூரில் இருப்பவர்கள் கூட, தங்கள் சொந்த ஊருக்கு வந்து, உறவினர் மற்றும் நண்பர்களுடன் விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

**ஐந்திணை விழாக்கள்**

- சங்காலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் வழிபடு தெய்வங்களும் திருவிழாக்களும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன என அறிகிறோம்.

  “மாயோன் மேய காடுறை உலகமும்
  சேயோன் மேய மைவரை உலகமும்
  வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
  வருணன் மேய பெருமணல் உலகமும்
  (தொல்.பொருள். அகம்)

  எனக் தொல்காப்பியர் பாலை நிலம் தவிர நால்வகை நிலத்துக்குரிய தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பாலைநில மக்கள் கொற்றவையைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

**குறிஞ்சி நில விழா:**

- மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் ஆகும். குறிஞ்சி நிலக் கடவுள் சேயோன்,முருகன், வேலன் எனப் பல பெயர்களில் அறியப்படுகிறார். இந்நிலப்பகுதியில் வேலன்வெறியாட்டு விழா நடைபெற்ற செய்தியினைத் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் வழி அறிகின்றோம். குறிஞ்சி நிலப் பெண்களின் நோயினைத் தீர்ப்பதற்காகப் பராய்கடனாக நிகழ்த்தப்பட்டது. வேலன்வெறியாட்டின் பொழுது குறிஞ்சி நிலத்தவர் பல வகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்துகொண்டு கையில் வேலை ஏந்தி தன்மீது முருகக் கடவுள் ஏறியது போல ஆடுவர். இவ்விழா நடைபெறும் இடம் “வெறியாடுகளம்” எனப்படும். அங்குச் சேவல், கொடி நடப்பட்டிருக்கும். பல வகையான நறுமணப்புகைகள் எழுப்பப்படும். பலவகையான இசைக்கருவிகள் இசைக்கப்படும் என இவ்விழாவைப் பற்றிப் பரிபாடல் கூறுகின்றது. இவ்விழாவின்

போது, குறிஞ்சி நில மக்கள் தொண்டகப்பறை இசைக்க நடனமாடுவர். இதுவே, "குன்றம் குரவைக் கூத்து எனப்பட்டது.

**முல்லை நில விழா:**

- காடும் காடு சார்ந்த நிலப்பகுதியும் முல்லை நிலம் ஆகும். முல்லை நிலக்கடவுள் "மாயோன்" ஆவார். இந்நில மக்களின் முக்கியத் தொழில் கால்நடை வளர்ப்பு ஆகும். முல்லைநில மக்கள் பால் சுரக்கும் மரமான வேப்ப மரத்தைக் தாய்த் தெய்வமாக உருவகித்து வழிபட்டதை அகநானூறு (309) கூறியுள்ளது. இந்நிலப்பகுதியின் உடைமையான கால்நடைகளை எயினர்களிடமிருந்தும் வேடர்களிடமிருந்தும் வழிதவறாமலும் காப்பவர் கருப்பசாமி, இருண்ட கானகத்திற்கு உரியவர் கரிய நிறம் உடையவர் என்ற பொருளில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. இவர் மாயோன் எனவும் அழைக்கப்பட்டார். இதையே "மாயோன் மேய காடுறை உலகம்" என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆயர் குல மக்களுக்கும் ஆநிரைகளுக்கும் துன்பம் நேராமல் காக்கும்படி திருமாலைக் (மாயோனை) குரவைக் கூத்தாடி வழிபட்டனர். இவ்வழிபாடே ஆய்ச்சியர் குரவை ஆகும்.

**மருத நில விழா (இந்திர விழா):**

- மருத நிலத்தில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா இந்திரவிழா", பசி, பிணி, பகை போக்குவதற்காக இந்திரனை மக்கள் வழிபட்டனர். இவ்விழா சாந்திப் பெருவிழா, தீவகச்சாந்தி என்றும் அழைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையிலும் மணிமேகலையில் விழாவறைகாதையிலும் இந்திரவிழா நடைபெற்றமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழா 28 நாள்கள் நடைபெற்றது. சமயக்கணக்கர், காலம் கணிப்போர், சான்றோர்கள், ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தினர் ஆகியோர் ஒன்றுகூடி இந்திரவிழா நடக்கும் நாளை முடிவு செய்வர்.

- நால்வகைப் படையினரும் சூழ்ந்து வர "இந்திரவிழா" நடைபெறும் செய்தியினை முரசு அறைந்து மக்களுக்கு அறிவிப்பர். மக்கள் வீதிகளிலும் கோயில்களிலும் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் வைத்தனர். வாழை, கரும்பு, கமுகு, வஞ்சிக்கொடி, பூங்கொடி முதலானவற்றைக் கொண்டு நகரை அலங்கரித்தனர். வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணல் பரப்பினர். பூதசதுக்கம் முதலான தெய்வங்களுக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளைச் செய்தனர். விழா நாளில் பொது இடங்களில் சான்றோர் நல்லுரை ஆற்றினர். பட்டிமண்டபங்கள் நகரின் பல இடங்களில் ஆங்காங்கே நடைபெற்றன. இவ்வாறு புகார் நகரில் இந்திர விழா நடைபெற்ற செய்தயினைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

- புகார் நகரில் மட்டுமல்லாமல் மதுரையிலும் இந்திர விழா நடைபெற்றதாகச் சின்னமனூர்ச் செப்பேடு தெரிவிக்கின்றது. ஐங்குறுநூற்றிலும் (52) இந்திரவிழா பற்றிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. தொடித்தோட்செம்பியனால் எடுக்கப்பட்ட காமன் விழாவினை இந்திரவிழா, விருந்தாட்டுவிழா ஆகிய பெயர்களில் மணிமேகலை குறிப்பிடுகின்றது.

- மருதநில மக்கள் போருக்குச் செல்லும் போது, தங்கள் அரசனை வாழ்த்தி விழாக் கொண்டாடுவர். இவ்விழாவில், தங்கள் வாளை உயர்த்திப் பிடித்துத் "தண்ணுமை" என்னும் போர்ப்பறை ஒலிக்க ஆடியும் பாடியும் குரவை நிகழத்துவர்.

**நெய்தல் விழா:**

- கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். இந்நிலத்துக்கு உரிய கடவுள் "வருணன்". இந்நில மக்களால் கொண்டாடப்படும் விழா, முந்நீர் விழா, நாவாய் விழா என சங்க இலக்கியங்களில் பதிவ செய்யப்பட்டுள்ளது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் இவ்விழாவினைக் கொண்டாடிய செய்தியினையும் கரிகாலனின் முன்னோர் நாவாய்த் திருவிழா கொண்டாடிய செய்தியினையும் புறநானூற்று (36) உரையின் மூலம் அறிய முடிகிறது.

- வருணன் - மேகம், மழை, கடல், ஆறு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டமையால் இவர் நீர்க்கடவுளாக அறியப்பட்டார். இவரை, உலகம் முழுவதும் பரந்து இருப்பவர், உலகத்தையே ஆள்பவர் என்றும் கூறுவர். நெய்தல் நில மக்கள் முத்துகளையும், வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகச் செலுத்தி, தங்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர்.

**பாலை நில விழா:**

- குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம் பாலை எனப்பட்டது. கொற்றம் என்றால் வெற்றி, இந்நிலமக்கள், வெற்றியைத் தருபவள் என்ற பொருளில் "கொற்றவை" என்னும் பெண் தெய்வத்தை வழிபட்டனர்.

- சிலப்பதிகாரத்தில் சாலினி என்ற தெய்வம் ஏறப்பட்ட பெண்ணிற்குக் கொற்றவையின் கோலம் புனையப்பட்டது. இவ்வாறு கொற்றவையைப் போல அலங்கரிக்கப்பட்ட சாலினியை, மான்மீது அமரச்செய்து உலாவரச் செய்தனர். அவ்வாறு உலா வரும்போது பல்வேறு காணிக்கைப் பொருள்களுடன் பெண்கள் பின்தொடர்ந்தனர். வழிப்பறியின் போது கொட்டும் பறை; சூறையாடும்போது ஊதப்படும் கொம்பு, புல்லாங்குழல் போன்றவை அச்சமயத்தில் இசைக்கப்பட்டன. இவ்வாறு இவ்வாறு பாலை நில மக்கள் தங்கள் நிலக்கடவுளான கொற்றவைக்கு விழா எடுத்தனர்.

**நடுகல் வழிபாடு:**

- தமிழர் பண்பாட்டின் உயரிய விழுமியமான வீரத்தை அடிப்படையாகக் கொண்டதே நடுகல் வழிபாடு. இவ்வழிபாட்டு முறையைப் பற்றி அறிய சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைந்த வீரனது உடலை அடக்கம் செய்யும் முன், அவன் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் பொருள்களையும் புதை குழியிலிட்டு அடக்கம் செய்தனர். பிறகு அவ்விடத்தில் ஒரு கல்லை நட்டனர். இது "நடுகல்" எனப்பட்டது. அக்கல்லின் மீது அவ்வீரனது உருவம், பெயர், வீரம்,புகழ், தியாகம் போன்றவற்றைப் பொறித்தனர். மேலும், அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் விழா எடுத்து வழிபட்டனர். தற்போதும் கிராமங்கள்தோறும் மக்கள் வழிபட்டு காவல் தெய்வங்களை இந்நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாகக் கருதலாம்.

**பத்தினி வாழிபாடு:**

சிலப்பதிகாரத்தில் நாரிகாண்காதையில் (224 – 225) கண்ணகிக்காகப் பத்தினிக் கோட்டம் அமைக்கப்பட்டதை,

> மேலோர் விளையும் நூல்தெநறிமாக்கள்
> பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"

என்று குறிப்பிடப்படுவதிலிருந்து பத்தினி வழிபாட்டின் தொன்மையை அறிகிறோம். பத்தினி வழிபாடு என்பது கண்ணகி வழிபாட்டையே குறிப்பிடுகிறது. இவ்வழிபாடு இலங்கையில் வாழும் தமிழர்களால் இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கண்ணகி என்பவள் தமிழகக்காப்பிய வரலாற்றில் முக்கிய இம்பெற்ற கற்புக்கரசியாகத் திகழ்கிறாள்.

சிலப்பதிகாரத்தின் காப்பியத் தலைவி, பொய்யான குற்றச்சாட்டின் மூலம் தனது கணவன் கோவலன் கொலைத்தண்டனைக்கு உட்பட்டதை அறிந்து சினமுற்றாள். பாண்டிய அரசன் நெடுஞ்செழியனிடம் வாதிட்டு, தன்கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டினாள். அரசனின் பிழையால் சீற்றம் அடைந்த கண்ணகி, தன் கற்பின் வலிமையால் மதுரை நகரையே எரித்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. கண்ணகி சோழ நாட்டில் பிறந்தாள், பாண்டிய நாட்டில் வீரத்தை நிலை நாட்டினாள். சேரநாட்டில் பத்தினித் தெய்வமாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகிறாள்.

**பாவை நோன்பு:**

மார்கழி மாதத்தில் பெண்கள் பாவை நோன்பு தோற்பர், இது மார்கழி நோன்பு என்றழைக்கப்படும். பாவை நோன்புக் காலத்தில் ஆண்டாள் இயற்றிய "திருப்பாவை" யையும் மாணிக்கவாசகர் அருளிய "திருவெம்பாலை" யையும் பாடி இறைவனை வழிபடுவர்.

கன்னிப்பெண்கள், நல்ல கணவன் கிடைக்க வேண்டுமெனவும், மணமான பெண்கள் தங்கள் கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டுமெனவும் விரதம் மேற்கொள்வார்கள். இந்நோன்பு பழங்காலந்தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் மழை பெய்து நாடு செழிக்கவும், மக்கள் வளமுடன் நோய் நொடியின்றி வாழவும், பசு மற்றும் கால்நடைகள் சிறக்கவும் வேண்டி, ஆண்டாளும் மாணிக்கவாசகப் பொருமாளும் பாடிய பாடல்களைப் பாடுவார்கள்.

பாவை நோன்பு இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, உணவு உண்ணாமல் மலர் சூடாமல், தம்மை அழகுபடுத்திக் கொள்ளாமல், இறைவனை நினைத்து நோன்பு இருந்து தங்களால் இயன்றளவு தானமும் தருமமும் செய்து அறவழியில் நிற்பர் எனப் பாவை நோன்பு குறித்து திருப்பாவை இரண்டாம் பாடல் கூறுகிறது.

**பொங்கல் திருவிழா:**

பொங்கல் திருவிழா, உலகில் வாழும் தமிழர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் கதிரவனே முதன்மைக் காரணமாக விளங்குகிறான். எனவே, உழவர் பெருமக்கள் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகை போகி, பொங்கல் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**போகிக் பண்டிகை:**

இப்பண்டிகை, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. பயனற்ற பழைய பொருள்களையும் மனித மனத்தில் உள்ள தேவையற்ற எண்ணங்களையும் போக்குவதே போகிப்பண்டிகையின் நோக்கமாகும்.

இப்பண்டிகை நாளன்று வீட்டைச் சுத்தப்படுத்தி, வீட்டின் தலைவாசல் உள்ளிட்ட நிலைக்கதவுகளுக்கு மஞ்சளும் சந்தனமும் பூசுவர். அன்றைய மாலைப் பொழுதில் வாசற்கூரையில் வேப்பிலை, பூளைப்பூ, ஆவாரம்பூ ஆகியவற்றைக் கொண்டு காப்புக் கட்டுவர்.

**பொங்கல் திருநாள்**

உழவர் பெருமக்கள் ஆடி மாத்தில் விதைத்த பயிர்களைத் தை மாதம் அறுவடை செய்வர். முதல் விளைச்சலை கதிரவனுக்குக் காணிக்கையாகப் படைப்பதே பொங்கல் திருவிழா ஆகும். பொங்கல் அன்று பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்துமே புதியனவாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புதிய கற்களாலான அடுப்பு, புதிய மண்பானை, புதிய அகப்பை, தூயபசுஞ் சாணத்தாலான வறட்டி போன்றவற்றைப் பயன்படுத்துவார்கள்.

வீட்டு வாசலில் பொங்கலிடும் இடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிடுவார்கள். அன்றலர்ந்த மலர்களையே வழிபாட்டிற்குப் பயன்படுத்துவார்கள். பொங்கல் வைக்கும் பானையை மஞ்சள் குங்குமம், இஞ்சி, மஞ்சள் கொத்து ஆகியவற்றால் அலங்கரிப்பர். புதிதாக அறுவடை செய்த நெல்லின் பச்சரிசியுடன் வெல்லம், கற்கண்டு, நெய், பால், முந்திரி, திராட்சை முதலியவற்றைக் கொண்டு பொங்கல் இடுவர். தங்கள் விளைநிலங்களில் விளைந்த செங்கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, கருணைக்கிழங்கு போன்றவற்றையும் சேர்த்துக் கதிரவனுக்கு வைத்து வழிபடுவார்கள்.

**மாட்டுப் பொங்கல்:**

உழவுக்கும் உழவனுக்கும் உறுதுணையாக இருக்கும் காளைகளுக்கும் பசுக்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளை அலங்கரித்து அவற்றுக்குப் பொங்கலைக் கொடுத்து மகிழ்வர். இதனைத்தொடர்ந்து, மாலையில் மஞ்சுவிரட்டு எனப்படும் "ஜல்லிக்கட்டு விழா" நடைபெறும். அப்பொழுது, இளைஞர்கள் காளைகளை அடக்கித் தமது வீரத்தை வெளிப்படுத்துவர்.

"கொல்வேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்"

என்ற சங்க இலக்கியப் பாடல் மூலம் இவ்வீரவிளையாட்டின் தொன்மையை அறியலாம்.

பழங்காலத்தில் கால்நடைகளே நமது செல்வத்தின் அடையாளமாகத் திகழ்ந்தன. "ஆயிரம் பகவுடைய கோ நாயகர்" என்ற பட்டப் பெயர்களெல்லாம் புழக்கத்தில் இருந்தன. "ஏரின் பின்னால் தான் உலகமே சுழல்கின்றது என்கிறார். வள்ளுவர். அந்த ஏர் முனையை முன்னேந்திச் செல்பவை மாடுகளே, இதன் மூலம் மாடுகளே உழவர்களை உயிர்ப்போடு வைத்துள்ளன என்று கூறினாலும் மிகையாகாது.

**காணும் பொங்கல்:**

காணும் பொங்கல், பகைமையை மறந்து உறவுகளைப் புதுப்பிக்கும் நாளாகும். அன்றைய தினம் மக்கள் தமது உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பெரியவர்களை வணங்கி வாழ்த்துபெறும் நாளாகும். இவ்விழா நாளில் பட்டிமன்றங்கள் நடத்தியும் பாரம்பரிய விளையாட்டுகள் விளையாடியும் மகிழ்வார்கள்.

இவ்வாறு பண்டைய காலம் முதல் இன்று வரை பொங்கல் திருநாள், தமிழர் திருநாள் என்றும், உழவர் திருநாள் என்றும் சிறப்பான முறையில் உலகத் தமிழர்களால் கொண்டடப்பட்டு வருகிறது.

**சித்திரைத் திருவிழா:**

சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் தமிழகத்தின் மிகப்பெரிய திருவிழா மதுரை சித்திரைத் திருவிழா, சைவ சமய விழாவான மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணமும் வைணவ சமய விழாவான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் ஒன்றாக நடைபெறுவது. திருமலை நாயக்கர் காலத்தில் இவ்விரு சமய விழாக்களும் ஒன்றாக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டன. சித்திரை மாதம் வளர்பிறை ஐந்தாம் நாள் இவ்விழா தொடங்கித் தொடர்ந்து பத் நாள்கள் நடைபெறுகிறது.

**ஆடிப் பெருக்கு:**

ஆடி மாதத்தில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையினால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும். இதனையே "ஆடிப்பெருக்கு" என்று கூறுவர். காவிரி பாயும் பகுதிகளில் வாழும் மக்கள் காவிரியாற்றை அன்னையாகவும் தெய்வமாகவும் நினைத்து வழிபடுவர்.

அதற்காக வற்றாத நதிகளைத் தங்கள் கடவுளாகப் போற்றி மகிழ்ந்து, வழிபட்டு உழவு வேலையைத் தொடங்குவார்கள். இதன் அடிப்படையிலேயே "ஆடிப் பட்டம் தேடி விதை" என்ற பழமொழி உருவானது. இப்பகுதிகளில், ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று "ஆடிப் பெருக்கு" கொண்டாடப்படுகிறது.

**மகா மகத்திருவிழா**

மாசி மாதத்தில் குரு, சிம்ம ராசியில் இருக்கும் போது, மக நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாளே மாசிமகம் ஆகும்.

நவக்கிரகங்களில் குரு ஓர் இராசியில் இருந்து மற்றோர் இராசிக்கு இடம்பெயர ஒரு வருடம் ஆகிறது. இதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் குரு பெயர்ச்சி விழாவும், மாசிமக விழாவும் நடைபெறுகிறது. இதுபோலவே, பன்னிரண்டு இராசிகளையும் குரு கடந்து வர பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும். ஆகவேதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம், "மகாமகம்" என்று அழைக்கப்படுகிறது. அன்றைய தினம் புனித இடங்களில் நீராடுவது மிகவும் சிறப்பானதாகும். எனவே, கும்பகோணம் மகாமகக் குளத்தில் தீர்த்தவாரி அன்று பக்தர்கள் புனித நீராடுகிறார்கள். மேலும், வடநாட்டில் நடைபெறும் "கும்பமேளா"வைப் போன்று இதனை, "தென்னகத்தின் கும்பமேளா" என்றும் அழைப்பர்.

**சைவத் திருவிழாக்கள்:**

சிவனை முழுவதும் கடவுளாக வணங்குபவர்கள் சைவர்களாவர். சிவனை வழிபடும் திருவிழாக்கள் சைவத் திருவிழாக்கள் ஆகும்.

"மகாசிவராத்திரி" விழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து சிவனை வழிபடுவர்.

அன்று நடைபெறும் நான்கு கால பூஜைகளில் சிவ புராணங்களைப் பாட வேண்டும். மேலும், ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் சிவராத்திரிகளில் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே "மகா சிவராத்திரியாகும்.

**விநாயகர் சதுர்த்தி:**

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை ஆலங்களிலும் ஆலயமில்லாத இடங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.
ஆலயமில்லாத இடங்களிலும் தற்காலிகமாகக் களிமண்ணால் விநாயகர் உருவம் செய்து வழிபடுவர். இவ்விழாவை வட இந்தியாவில் "கணேஷ்சதுர்த்தி" என்ற பெயரில் கொண்டாடுகின்றனர்.

**தீபத்திருவிழா:**

கார்த்திகை மாதம் முழுநிலவு நாளில் வீடுகளிலும் கோயில்களிலும் விளக்கு ஏற்றி வழிபடுவார்கள். இதுவே, கார்த்திகைத் திருவிழாவாகும். இவ்விழா தொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றி இறைவனை ஒளி வடிவில் வழிபடுவர். மேலும், மற்ற சிவத்தலங்களிலும் முருகன் ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.
நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைப் பொருள்களைப் பெரும் ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

**ஆதிரைத் திருவிழா:**

திருவாதிரை என்பது, ஆண்டுதோறும் மார்கழி மாத முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இவ்விழாவினைப் பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்திலும், சம்பந்தர், நாவுக்கரசர், தேவாரத்திலும் பாடியுள்ளனர். சிதம்பரம், மதுரை திருவாலங்காடு, உத்திரகோசமங்கை, திருக்கமுக்குன்றம், திருமுல்லைவாயில் போன்ற புகழ்பெற்ற சிவத்தலங்களில் திருவாதிரை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருவாதிரையன்று சிவபெருமானுக்குக் "களி"யைப் படைத்துப் பக்தர்களுக்கும் வழங்குவர். இதனால், "திருவாதிரைக் களி" என்ற சிறப்புப் பெயர் எற்பட்டது. மேலும், சிதம்பரம் கோயிலில் இறைவனை ஆடல் கோலத்தில் கண்டு வழிபடுவர்.

**வைணவத் திருவிழாக்கள்:**

திருமாலை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் வைணவர்களாவர். திருமாலை வழிபடும் திருவிழாக்கள் வைணவத் திருவிழாக்கள் ஆகும்.

**வைகுண்டஏகாதசி**

மார்கழி மாதம் வளர்பிறை பதினோராம் நாள் "வைகுண்டஏகாதசி" ஆகும். இது வைணவர்கள் மற்றும் திருமாலை வழிபடுபவர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி அன்று விரதம் இருப்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் ஏகாதசி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். திருவரங்கம் அரங்கநாதன் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**திருவோணம்:**

திருமாவின் பிறந்தநாளான ஆவணி மாதம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழா திருவோணம் ஆகும். இது, திருமாலுக்கு உகந்த நாளாகக் கருதப்படுவதால் அந்நாளில் மக்கள் பல கோயில்களுக்கும் சென்று திருமாலை வழிபடுவர்.

இந்நாளில், மகாபலி மன்னர் வருவதாக்க கருதி மக்கள் வீதிகளிலும் வீட்டின் முற்றத்திலும் பல வண்ணப்பூக்களால் பெரிய கோலங்களைப் போட்டு அவரை வரவேற்பர். இதை "அத்தம்பூ" என்றழைப்பர். இவ்விழாவைப் பற்றிய செய்திகள் மதுரைக்காஞ்சியிலும் தேவாரத்திலும் நாலாயிரம் திவ்வியபிரபந்தத்திலும் இடம் பெற்றுள்ளன.

**தீபாவளி**

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் தேய்பிறை நாளில் அமாவாசைக்கு முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையே திபாவளியாகும். தீபாவளி என்றால் "தீபங்களின் வரிசை" என்பது பொருள். இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் திருநாளே தீபாவளித் திருநாளாகும். மும்பொரு காலத்தில் நரகாசுரன் தேவர்களையும் மக்களையும் கொடுமை செய்ததாகவும் அவனது கொடுமையை மக்களும் தேவர்களும் பொறுக்க முடியாமல் திருமாலிடம் முறையிட்டதாகவும், திருமால் சக்கராயுதத்தால் நரகாசுரனை வதம் செய்து மக்களையும் தேவர்களையும் காத்ததாகவும் கூறுவர். நரகாசுரன் தான் இறக்கும் தறுவாயில் தனது நினைவு நாளை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாகவும் கூறுவர். அந்நாளே, தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா, தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இத்திருநாளான்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீடு முழுவதும் விளக்கேற்றிப் பூஜை செய்து, பட்டாசுகள் வெடித்துப் புத்தாடை அணிந்து இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுகின்றனர். வட இந்தியாவில் இத்திருநாளைத் தீப ஒளித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

**நவராத்திரி விழா**

வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைத் தரும் முப்பெரும் கடவுளாக முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோரைப் போற்றி வணங்கும் விழாவே நவராத்திரி திருவிழாவாகும். நவராத்திரி என்பதற்கு "ஒன்பது இரவுகள்" என்பது பொருளாகும். இவ்விழா புரட்டாசி மாத்தில் அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாள்களும் கொண்டாடப்படுகிறது. ஒன்பதாவது நாள் நடக்கும் வழிபாடு கலைமகளுக்கு உரியதாகக் கருதி புத்தகங்கள், இசைக்கருவிகள் மற்றும் பல தொழில் சார்ந்த கருவிகளையும் வைத்து வழிபடுவர். செய்யும் தொழிலே செய்தவம் என்ற கருத்தில் மக்கள் தமது தொழிலைப் போற்றிக் கொண்டாடுவதே இவ்விழாவின் நோக்கமாகும். பத்தாம் நாள் விழாவாக "விஜயதசமி" கொண்டாடப்படுகிறது. விஜயதசமி என்றால் வெற்றியைத் தருகின்ற நாள்" என்பது பொருள். அன்று குழந்தைகளுக்குக் கல்வியைத் தொடங்கினால் வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கையாகும். வடநாட்டிலும், தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**அம்மன் திருவிழா:**

அம்மன் வழிபாடானது, ஊர்தோறும் நடைபெறும் முக்கிய வழிபாடாகும். மாரி என்றால் மழை என்பது பொருள், கோடைக்காலத்தில் வெப்பத்தின் காரணமாக மக்களுக்கு அம்மை போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்நோய்கள் வராமல் தடுப்பதற்காக மழைதர வேண்டி மாரியம்மனுக்கு விழா எடுத்து வழிபடுகின்றனர்.

பல நோய்களுக்கு மருந்தாக உள்ள வேப்பமரமே மாரியம்மனுக்கான "தல விருட்சமாகும்", இவ்விழா, காப்புக்கட்டுதல் தொடங்கி ஏழு நாள் முதல் பதினைந்து நாள்வரை நடைபெறும். பூவோடு எடுத்தல், பூவாரி கொட்டுதல், அலகு குத்துதல், சாட்டை அடித்தல், மொட்டை அடித்தல், மாவிளக்கு எடுத்தல், தீமிதித்தல் போன்றவை மாரியம்மன் திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் ஆகும். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பண்ணாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழா, மஞ்சள் நீராட்டுதலுடன் நிறைவடையும். இவ்விழா, கிராமங்கள்தோறும் உள்ள மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஆடிப்பூரம்:**

அம்மனுக்கு உகந்த திருநாள்களில் ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் ஆடிப்பூரத்திருநாள் மிகவும் சிறப்புடையது. சிவத்தலங்களில் அம்மனுக்கும், திருவில்லிப்புத்தூரில் ஆண்டாளுக்கும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இந்நாளில், அம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்து ஆடிக்கூழ் படைத்து இவ்விழாவை மக்கள் கொண்டாடுகின்றனர்.

**நாட்டார் திருவிழாக்கள்:**

நாட்டார் தெய்வங்கள் கிராம மக்களால் வணங்கப்படுபவை ஆகும். இவை சிறுதெய்வங்கள், கிராம தேவதைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நாட்டார் தெய்வ வழிபாடுகள் கிராம மக்களின் பண்பாட்டுடனும் பழக்க வழக்கங்களுடனும் ஒன்றிணைந்தவையாக உள்ளன. பொன்னியம்மன், போத்திராஜா, அண்ணமார், அய்யனார், காத்தவராயன், நாடியம்மன், கருப்பசாமி, சுடலைமாடன், இசக்கியம்மன் போன்ற பல்வேறு நாட்டார் தெய்வங்களை மக்கள் தங்கள் முன்னோர்களாகவே கருதுவர். இவ்விழாக்கள் மூலம் இன்றும் நாட்டுப்புறக்கலைகள் உயிர்த்திருக்க இவ்விழாக்கள் பேருதவி புரிகின்றன.

**கந்த விரத விழாக்கள்:**

தமிழ்க் கடவுளான முருகனை வணங்கும் விழாவே கந்த விரத விழா ஆகும்.

ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறாம் நாள் சஷ்டியே "கந்த சஷ்டி" விழாவாகும். முருகப் பெருமாள் அரக்கனை ஒடுக்கப் போர் புரிந்த நிகழ்வையே கந்த சஷ்டி என்கிறோம்.

வைகாசி மாதம் முழுநிலவு நாளில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களில் இவ்விழா நடைபெறுகிறது.

பங்குனி உத்திரம் என்பது, பங்குனி மாதத்தில் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இது முருகனின் திருமணநாளாகக் கருதப்படுகிறது.

ஆடி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்குரிய நாளாகக் கருதி வழிபடுவர். இந்நாளன்று, அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணியில் ஆடிக்கிருத்திகை விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

**கோயில் சார்ந்த விழாக்கள்**

**தேர்த்திருவிழாக்கள்:**

தமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் தெய்வங்களைத் தேரில் அமர வைத்து ஊர்வலமாக அழைத்து வருது முக்கிய நிகழ்வாகும். ஒவ்வொரு கோயில் திருவிழாவிலும் தேர்த்திருவிழா குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பத்து நாள்கள் நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் நீராட்டிற்கு முதல் நாள் தோரோட்டம் நடைபெறும். முதன்மைத் தெய்வத்திற்குப் பெரிய தேரும், பிற தெய்வங்களுக்குச் சிறிய தேரும் இருக்கும்.

தோல் பெரிய கயிறுகள் இணைக்கப்படும். அவற்றை ‘வடம்’ என்று கூறுவர். இவ்வடத்தைப் பற்றி இழுத்துச் செல்வதை ‘வடம் பிடித்தல்’ என்பர். கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட முடியாதவர்களான முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கு உதவும் வகையிலும் அனைவரும் ஒன்று கூடி வழிபாடு செய்யவும் இறைவனை வீதி உலாவாக அழித்து வருவர். இவ்வாறு இறைவன் தன்னை நாடி வந்த அடியவர்களுக்கு அருள் புரிவதோடு, தான் அவர்களை நாடிச் சென்றும் அருள்புரிவார் என்பதைத் தேர்த்திருவிழா உணர்த்துகிறது.

திருவாரூரில் தியாகராசப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். இக்கோயிலின் தேர் ஆசியாவிலேயே மிக உயரமான தேர் என்ற பெருமைக்கு உரியது. இத்தேர் 96 அடி உயரமும் 360 டன் எடையும் கொண்டது. நான்கு நிலைகளைக் கொண்டதாக உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் இக்கோயிலின் தேர்த்திருவிழா கொண்டாடப்படுகிறது.

கீழை நாடுகளின் லூர்து நகர் என அழைக்கப்படுவது வேளாங்கண்ணி ஆகும். வேளாங்கண்ணிமாதா தேர்த்திருவிழா அனைத்து சமயமக்களும் கலந்து கொள்ளும் ஒரு விழாவாகும்.
இராமாயண, மகாபாரதம் போன்ற புராணக்கதைகளையும் சமுதாயத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளையும் சிற்பங்களாகச் செதுக்கித் தேரை அழகுபடுத்துவர். எனவே, தேர் என்பது நடமாடும் கலைக்கருவூலமாகத் திகழ்கிறது.

தமிழகத்தில் திருவாரூர், பழனி, அவினாசி, திருவில்லிப்புத்தூர், சிதம்பரம், கும்பகோணம், மதுரை, திருவல்லிக்கேணி, திருவரங்கம், திருவண்ணாமலை, திருநெல்வேலி போன்ற இடங்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

**கிறித்துவத் திருவிழாக்கள்**
**கிறிஸ்துமஸ்**

மக்கள் நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, இறைத்தூதராக ஏசு பெருமானைக் கருதி வழிபடுவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்ரேல் நாட்டில் பெத்தலகேம் என்னும் ஊரில் மாட்டுத்தொழுவத்தில் ஏசு பெருமான் பிறந்தார்.

ஏசுபெருமான் பிறந்த நாளான டிசம்பர் மாதம் 25 ஆம் நாள் உலக அளவில் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகின்றது.

இத்திருநாளில் மக்கள் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடுவர். கிறித்துவர்கள் வீடுகள்தோறும், நட்சத்திர விளக்குகளை அமைத்தம் புத்தாடை அணிந்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்வர்.

**புனிதவெள்ளி:**

புனித வெள்ளி (Good Fride) பெரிய வெள்ளி அல்லது ஆண்டவருடைய திருப்பாடுகளின் வெள்ளி என்றும் கிறித்தவர்கள் இதனை அழைப்பர். ஏசு பெருமானைச் சிலுவையைச் சுமக்கச் செய்து, சவுக்கால் அடித்துக் கடைசியாக அதே சிலுவையில் அவரை அறைந்து கொடுமைப்படுத்தினார்கள். மன்னனின்

ஆணைக்குப் பயந்த யூதேயா நாட்டு மக்கள், எதையுமே சொல்லமுடியாமல் வேதனையுடன் கண்ணீர் விட்டனர். ஏசு பெருமான் அடைந்த துன்பங்களையும் சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறந்தமையையும் நினைவு கூரும் நிகழ்வே ‘புனித வெள்ளி’ ஆகும். ஏசு பெருமான் சிலுவையில் அறையப்பட்ட இந்நாளை கிறித்துவர்கள், நினைவு நாளாகக் கருதி வழிபடுகின்றனர்.

**புனித ஞாயிறு:**

ஏசு பெருமான் இறப்பதற்கு முன்னார் நான் மீண்டும் உயர் பெற்று வருவேன்’ எனத் தமது சீடர்களுக்குச் சொல்லிச் சென்றார். சிலுவையில் கொடியவர்களால் உயிருடன் அறையப்பட்ட ஏசு பிரான் மூன்றாம் நாள் உயிர்பெற்று மக்களுக்க ஆசியும் சீடர்களுக்கு அறிவுரையும் வழங்கி மீண்டும் மறைந்தார். ஆவர் உயிர்த்தெழுந்த மூன்றாவது நாளைப் ‘புனித ஞாயிறு’ என்பர்.

**இசுலாமியத் திருவிழாக்கள்:**
**மொகரம் பண்டிகை:**

மொகரம் என்ற மாதம் இசுலாமிய நாள்காட்டியின் (அரபு) மாதங்களில் முதல் மாதமாகும். இது இவர்களின் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இசுலாமிய நாள்கட்டி சந்திர நாள்காட்டியாகும். இம்மாத்தில் சண்டைகள், புனிதப்போர்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனத் திருக்குரான் கூறுகின்றது. இப்பண்டிகை தியாகத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

**ரமலான் (ரம்ஜான்) பண்டிகை:**
ரமலான் பண்டிகையை ஈகைத் திருநாள்,ஈத் பெருநாள் என்றும் அழைப்பர். ஈத் என்னும் அரபுச் சொல்லிற்குத் “தடுத்து விடுவது என்பது பொருள். இந்நோன்பு தங்களைத் தீமைகளில் இருந்து தடுத்துக் காப்பதாகக் இசுலாமியர்கள் கருதுகிறார்கள்.

வைகறைப் பொழுதின் தொடக்கத்திலிருந்து பொழுது மறையும் வரை அல்லாவை நினைத்தபடி இசுலாமியர்கள் நோன்பு மேற்கொள்ளுவர்.

இந்நோன்பில் முதல் பத்துநாள்கள் இறையருள் கிடைப்பதற்காகவும், இரண்டாவது பத்து நாள்கள் இறைவனிடத்தில் மன்னிப்பைப் பெறுவதற்காகவும், மூன்றாவது பத்துநாள்கள் நகரத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் நோன்பு கடைப்பிடிக்கின்றனர். இந்நோன்பின் இறுதி நாளே ரமலான் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**பக்ரீத் பண்டிகை:**

இப்பண்டிகை இசுலாமியர்களின் பன்னிரண்டாவது மாதமான ”துல்ஹஜ்” என்ற மாதத்தில் வருகின்றது. இசுலாமியர் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது மெக்காவிற்கு “ஹஜ்” பயணம் மேற்கொள்ள வேண்டும். இப்பயணத்தினால், தாம் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த பாலகர் போன்று புனிதமாகவும் தீமை நீக்கியவராகத் திரும்பிவடுவதாக அவர்கள் கருகிறார்கள்.
ஹஜ் பயணம் மேற்கொண்டவர்கள் “ஹாஜிக்கள்“ என அழைக்கப்படுகிறார்களா. ஹாஜிக்கள் அல்லாவின் வீட்டிற்கு விருந்தாளியாகச் செல்கிறார்கள். இப்பயணம் மேற்கொள்ள இயலாதவர்கள் “குர்பானி” கொடுத்துப் பக்ரீத் தொழுகை செய்வார்கள்.

**சமணத் திருவிழா:**

**மகாவீர் ஜெயந்தி**

மகாவீரர் பொ.ஆ.மு. 546 இல் வைசாலி நாட்டில் குண்டாகிராமம்“ என்னும் இடத்தில் பிறந்தார். அரசகுமாரனாகிய இவர் அனைத்தையும் துறந்து நாட்டை விட்டு வெளியேறித் தியானம் செய்து, உயர்நிலையை அடைந்தார். இவர் தாம் கண்டறிந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்து நல்வழிப்படுத்தினார். இவர் அன்பு, அமைதி, அகிம்சை போன்ற இவரது பிறந்த நாள் இலக்கணமாகத் திகழ்ந்தார். இவரது பிறந்த நாள் “மகாவீர்ஜெயந்தி“ யாகக் கொண்டாடப்படுகிறது.

**பௌத்தத் திருவிழா**:

**புத்தபூர்ணிமா**

புத்த பூர்ணிமா புத்தபூர்ணிமா வைகாசி மாதம் முழுநிலவு நாளில் உலகில் உள்ள அனைத்து பௌத்தர்களாலும் கொண்டாடப்படுகிறது. வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் முழுநிலவு நன்னாளில் நேபாள நாட்டில் கபிலவஸ்துவிலுள்ள "லும்பினி" என்னும் கிராமத்தில் அரச குடும்பத்தில் புத்தர் பிறந்தார். மக்கள் நலன் கருதிப் பெற்றோரையும் மனைவியையும் மகனையும் அரசாட்சியையும் துறந்தார்.

புத்தரின் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளான பெருந்துறவு, நிருவாண நிலை அடைந்தது, முதல் போதனையை நிகழ்த்தியது, பரிநிருவாண நிலையை அடைந்தது என அனைத்தும் நிகழ்ந்த இந்நாளையே புத்த பூர்ணிமா என்று பௌத்த சமயத்தினர் கொண்டாடி வருகின்றனர். பௌத்தர்கள் புத்த பூர்ணிமா அன்று வெண்ணிற ஆடை அணிந்து பௌத்த விகாரங்களுக்குச் சென்று மலர்களைத்தூவி வழிபாடு செய்கின்றனர்.

இவ்விழா பீகாரில் உள்ள புத்த கயாவிலும், உத்திரபிரதேசத்தில் உள்ள சாரநாத்திலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்தியா மட்டுமல்லாது நேபாளம், இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட உலக நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

புத்த பெருமானின் இப்புனித நன்னாள் குறித்த செய்தி மணிமேகலை என்ற காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அக்காப்பியத்தில் தீவதிலகை என்பாள், மணிமேகலையிடம் தன்னுடைய வரலாற்றைக் கூறியதோடு ஆபுத்திரனையும் அமுதசுரப்பியைப் பற்றியும் எடுத்துரைத்துப் "பசிப்பிணி போக்கும் அமுதசுரப்பியானது பௌத்தர்களின் புனித நன்னாளான புத்த பூர்ணிமா அன்று மணிமேகலையிடம் வந்துசேரும்" என்றும் கூறுகிறாள்.

**குருநானக் ஜெயந்தி:**

குருநானக் பிறந்த நாள் சீக்கியர்களால் "குருநானக் ஜெயந்தியாகக்" கொண்டாடப்படுகிறது. குருநானக், லாகூருக்கு அருகேயுள்ள "தால்வண்டி" என்ற கிராமத்தில் பிறந்தார். இளம்வயது முதலே இறையனுபவங்களில் திளைத்திருந்தார். தமது முப்பதாவது வயதில் ஞானம் பெற்றார். தொடக்கத்தில் பல்வேறு அருள்செயல்களை நிகழ்த்தி மக்களை நல்வழிப்படுத்தினார். ஆன்மீகக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். மத ஒற்றுமைக்கு மகத்தான சேவை செய்தார். இவர் அன்புநெறியை வலியுறுத்தினார். இவரது அருளுரைகள் அடங்கிய புனித நூல் "ஆதிகிரந்தம்" ஆகும்.

குருநானக் ஜெயந்திக்கு இரண்டு நாள்களுக்கு முன்பாகவே குருத்வாராக்களில் தொடர்ந்து நாற்பத்தொட்டு மணி நேரம் புனித நூலான "ஆதிகிரந்தம்" வாசிக்கப்படும். குருநானக் பிறந்தநாள் அன்று அதிகாலை நான்கு மணி முதலே பக்திப்பாடல்களும் புனித உரைகளும் வாசிக்கப்பட்டு விழா தொடங்கும். அன்றைய நாள் முழுவதும் குருத்வாராக்களில் மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும். இந்நாளில் உலகெங்கும் உள்ள சீக்கிய குருத்துவாராக்கள் வண்ண வண்ண விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்படும்.

அமிர்தசரசில் உள்ள பொற்கோயில் சீக்கியர்களின் புனிதத்தலமாகும். பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் இந்த நாளில் சிறப்பு அணவகுப்புகளும் ஆடல் பாடல் நிகழச்சிகளும் நடைபெறும். இறை வழிபாட்டில் கலந்துகொள்ளும் அனைத்துச் சீக்கியர்களும் தமது வழக்கப்படி தலைப்பாகை, வாள், புத்தாடை அணிவார்கள். பின்னர், ஊர்வலம் நடைபெறும். நீண்ட, பட்டை, தீட்டப்பட்ட வாள்களை வீரதீரச் செயல்களைச் செய்துகொண்டு ஊர்வலமாகச் செல்வார்கள்.

குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பண்டிகைகளும் விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.
பொது நிகழ்வுகளாக நடைபெறும் விழாக்களின்போது மக்கள் ஒன்றுகூடித் தம்முடைய வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுகிறார்கள், பண்டிகைகளும் விழாக்களும் வாழ்விற்கு இன்றியமையாத மன அமைதியையும் மனநிறைவையும் தருகின்றன. ஒவ்வொரு பண்டிகையும் மக்களுக்குப் புத்துணர்வைத் தருகின்றது.